★ ★

விலை சதம் 20

Registered as a Newspaper in Ceylon

| சந்தா விபரம | | |
|---|---|---|
| தினப் பதிப்பு | சதம் | 10 |
| வாரமலர் | ,, | 20 |
| இலங்கை - இந்தியா | | |
| 1 வருடம் | ரூபா | 50-00 |
| 6 மாதம் | ரூபா | 26-00 |
| 3 மாதம் | ரூபா | 14-00 |
| மலாயா | | |
| 1 வருடம் | ரூபா | 70-00 |
| 6 மாதம் | ரூபா | 38-50 |
| 3 மாதம் | ரூபா | 20-50 |

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (4-4-66) இதழ் 56

விசுவாவசு பங்குனி 22 துல்ஹஜ் பிறை 12 திங்கட்கிழமை

குடும்ப சிக்கனத்திற்கு சிறந்தது

மில்க் வைற் நீல பார் சோப்

மில்க் வைற் வெள்ளை பார் சோப்.

# தமிழரசு, காங்கிரஸ் மே தின ஏற்பாடுகள்

## மகாநாயக்க தேரோவின் யாழ்ப்பாண விஜயம்

### பல இடங்களிலும் வரவேற்பு அளிக்க ஏற்பாடு

குரும்பசிட்டி, ஞாயிறு

சர்வ சமய காங்கிரசின் வருடாந்த விழாவில் கலந்து கொள்வதற்காக மல்வத்தை பீடாதிபதி வண. ஸ்ரீ ராஜ குரு அமுனுகம விபாசி மகாநாயக்க தேரோ இம்மாதம் 19-ம் தேதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். அரசாங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட விசேஷ விமானத்திலேயே அவர் இங்கு வருகிறார்.

மூன்று தினங்கள்வரை இங்கு தங்கியிருந்து சமய சம்பந்தமான விழாக்களில் அவர் கலந்துகொள்வார்.

இவருக்கு பலாலி விமான நிலயத்தில் இந்து, கிறிஸ்

(6-ம் பக்க பார்க்க)

## இரத்தம் தேவை

### யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி அவசரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

இரத்தம் அவசரமாகத் தேவைப்படுவதால் உடனடியாக இரத்தம் கொடுத்து உதவுமாறு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்தவங்கி அதிகாரிகள்பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள இரத்தவங்கியில் சகல பிரிவு இரத்தத்திலும் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறதென்றும் இதே நிலைமை நீடிக்குமானால் சிறிதளவு இரத்தம் கூட பெறமுடியாதிருக்குமென்றும் இரத்த வங்கி அதிகாரிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையிலிருக்கும் நோயாளிகளுக்குக் கூட அவசர தேவையின் போது கொடுக்கக்கூடிய இரத்தம் இரத்தவங்கியில் இல்லை என்று சொல்லப்படுகிறது.

மயிரிழையில் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக உடனடியாக இரத்த தானம் செய்யுமாறு பொதுமக்களை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

## பரிசோதனையின்போது காலமானார்

யாழ்ப்பாணம், திங்கள்

இருதயநோய்காரணமாக சிகிச்சை அளிக்கும் பொருட்டு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட நாகமணி (40 வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுமாலை டாக்டர் ஒருவரினால் பரிசோதனைக்குள்ளாகிக்கொண்டிருக்கும்பொழுது மரணமானார். இவரது மரணம் சம்பந்தமாக பிரேத பரிசோதனை நடைபெறவிருக்கிறதெனத் தெரியவருகிறது.

(ந. நி.)

---

மட்றிட், ஏப். 3

ஸ்பெயின் கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் கடலில் விழுந்த அமெரிக்க ஹைதரஜன் குண்டை வெளியே எடுக்கும் முயற்சி, மூன்றுவது தடவையாக தோல்வியடைந்திருக்கிறது.

## மரண அறிவித்தல்

சிவமணியின் (ஆசிரியை, சைவத்தமிழ் வித்தியாசாலை, உரும்பிராய்) அருமைக்கணவரும், டாக்டர் கே.குணரத்தினம் (விரிவுரையாளர், பேராதனை), கே. ராஜரத்தினம் (ஆசிரியர், மானிப்பாய்) திருமதி இராசம்மா சந்திரசேகரம் (ஆசிரியை, மத்திய மகாவித்தியாலயம், ஏழாலை) திரு. கே. பேரம்பலம், திருமதி. செல்லம்மா கந்தையா ஆகியோரின் அருமைச்சகோதரருமான திரு. கே. ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரது பூதவுடல் ஏழாலை மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக இன்று மாலை 4 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

13

## தனித்தனியாக யாழ். நகரில் ஊர்வலமும் கூட்டமும்

### இடதுசாரித் தொழிற்சங்கங்களும் கொண்டாடும்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்முறை யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியின் ஆதரவின் கீழுள்ள தொழிற்சங்கங்களும் தமிழ்க்காங்கிரஸின் ஆதரவின்கீழ் சமீபத்தில் அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்களும் தனித்தனியாக மே தின ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்துவருகின்றன. இதே சமயம் இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் மேதினக்கூட்ட ஊர்வலம் நடத்துவதற்கு அனுமதிகோரி விண்ணப்பித்திருக்கின்றன. முன்னர் போன்று பெருமளவிலான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யத்தொடங்கவில்லையாயினும் மேதின ஊர்வலம் கூட்டம் நடத்துவதற்கான முயற்சிகளை இடதுசாரித் தொழிற்சங்கங்கள் செய்துவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியின்கீழுள்ள மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதின ஊர்வலம், பொதுக்கூட்டம்நடத்துவது சம்பந்தமாக இச்சங்கங்களின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இவ்வாரத்தில் நடைபெறவிருக்கிறது. திரு. செ. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் ஊர்வலங்கள், பொதுக் கூட்டம் பற்றிய ஒழுங்குகள் பற்றி முடிவுசெய்யப்படுமாம். யாழ்ப்பாணத்தில் தனியாக மே தின ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்தியபோதிலும் இதர பாகங்களில் ஜனநாயகத் தொழிற் சங்கங்களுடன் மொழிவழித் தொழிற்சங்கங்களும் தமிழரசுக்கட்சியின் ஆதரவின் கீழுள்ள இதர தொழிற்சங்கங்களும் ஒன்று சேர்ந்து மேதினக் கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்யவிருப்பதாகவும் தெரிகிறது.

## இந்தோனேஷிய தூதர் கைது!

ஜாகர்த்தா, ஏப். 3

பிரிட்டனுக்கு இந்தோனேஷியத் தூதராக நியமனம் பெற்ற டாக்டர் ஹரசனோ கைது செய்யப்பட்டுள்ளதாக ராணுவவட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

இங்குள்ள ஆடம்பரமான ஒரு ஹோட்டலில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

(பீ. டீ. ஐ.)

## வீடில்லாப் பிரச்னையை தீர்க்க சில யோசனைகள்

### யாழ்ப்பாண எம். பி. சமர்ப்பித்துள்ளார்

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணத்தில் நிலவும் வீடில்லாப்பிரச்னை, வேலையில்லாத்திண்டாட்டம், குடிநீர்த்தட்டுப்பாடு ஆகியவற்றை விரைவில் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

திரு. பொன்னம்பலத்தின் ஆலோசனைகளை அமுல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா இம்மாதம் 11-ம் திகதி விசேஷ கூட்டமொன்றினைக் கூட்டுகிறார்.

யாழ்ப்பாணத்தில் பறைச்சேரி என்னுமிடத்தில் 150 ஏக்கரும், கரையூரில் 20 ஏக்கரும் திரு. பொன்னம்பலத்தின் ஆலோசனைப்படி அடுத்த மாதத்தில் அரசாங்கத்தினால் கையேற்கப்பட

(6-ம் பக்கம் பார்க்க)

## உணவு மந்திரி நாளை இங்கு வருகிறார்

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தின் உணவு உற்பத்தி நிலையை நேரில் கண்டறியும் பொருட்டு உணவு அமைச்சர் திரு. எம் டி பண்டாரநாயக்கா... நாளை செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணம் வருகிறார். புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் வந்தடையும் அமைச்சர் அன்றைய தினம் மட்டுமே இங்கு தங்குவார்.

1960-70 ஆண்டுக்கிடையில் இந்த நாட்டிற்குத் தேவையான உபஉணவுப் பொருட்களை வடபகுதியிலேயே உற்பத்தி செய்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் இங்கு பரிசீலனை செய்வார்.

செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெறும் உணவு உற்பத்தி சம்பந்தமான மகாநாட்டில் அமைச்சர் திரு. பண்டா உரை நிகழ்த்துவார். பிற்பகலில் ஆவரங்கால், ஈவினை முதலான இடங்களுக்குச்சென்று அங்கு பயிரிடப்பட்டுள்ள உப உணவுப் பொருட்களைப் பார்வையிடுவார்.

உணவு அமைச்சின் உயர் அதிகாரிகள் விமானமூலம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்துசேர்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

நம் தவறுதல்கட்காக நாம் வருந்துவதற்கும் இன்றைய நிலையைவிட மேலான பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை. —மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU, National Tamil Daily Post Box 49, [illegible]
Telegrams: EELANADU, Jaffna. Phone: [illegible]

ஈழ [illegible] விசுவாவசு ஆண்டு பங்குனி மீ 22 உ. (4-4-66)


## நம்பிக்கைக்கு அறிகுறி

வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் உணவு, உடஉணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், தேசிய பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதன்மூலம் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்துவதற்கும் குறுகிய காலத் திட்டமொன்றைத் தயாரித்து வருவதாகவும், வேலையில்லாப் பிரச்னை, உற்பத்தி அதிகரிப்பு ஆகியவைகள் சம்பந்தமாக மாகாணங்களைச் சேர்ந்த எம். பி.க்களுடன் பதில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆலோசனை நடத்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இதேசமயம் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அமெரிக்க முதலீட்டாளர்களையும் தொழிலதிபர்களையும் ஊக்கப்படுத்தும் முயற்சிகள் நியுயோர்க்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் நாட்டின் உணவுப் பற்றுக்குறையை மூன்று வருடத்துக்குள் நீக்கிவிட முடியுமென்றும், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 30 கோடி ரூபாய் செலவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியமென்றும் நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் நாகநாதன் தெரிவித்துள்ளார். இவை யாவும் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொள்வதற்கு நல்ல அறிகுறியாகும்.

நாட்டின் இன்றைய முக்கிய பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதும் உணவுப்பற்றுக் குறையை நீக்குவதுமாகும். இப்பிரச்னைகளை நீக்க வேண்டியதன் அத்தியாவசியத்தை அரசாங்கம் உணர்ந்து அவைபற்றித் தீவிரமாக ஆராய்ந்து வருவது பாராட்டுதற்குரியது. ஆனால் தொகுதிவாரியாக இப்பிரச்னைகளைத் தீர்க்க முற்படுவதும் ஒரு இடைக்கால ஏற்பாடாக இவற்றுக்கு வழிவகை காண முற்படுவதும் சரியான நடவடிக்கையாகாது. தொகுதிவாரியாக இப்பிரச்னைகளைத் தீர்க்க முற்படுவது நிலைமையைத் தற்காலிகமாகச் சமாளிப்பதற்கும் அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதற்கும் உதவி செய்யக்கூடும். ஆனால் நாட்டின் பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வுகாண வழிவகுக்க மாட்டாது. முன்னைய அரசாங்கங்கள் அரசியல்காரணங்களால் சில நல்ல காரியங்களைச் செய்யாது விட்டனர். நல்லூர்ப்பிரதிநிதி கூறுவதுபோல், பிரச்னைகளைத் தொகுதிக் கண்ணோட்டத்துடன் நோக்காது நாட்டின் அபிவிருத்தியைக் கருதி உணவு உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய பிரதேசங்களில் அதிக கவனம் செலுத்துவது அரசாங்கத்தின் கடமை. முப்பது கோடி ரூபாய் செலவு செய்தால் மூன்று வருடங்களுக்குள் உணவுப்பற்றுக் குறையை நீக்கிவிடக்கூடிய திட்டமிருப்பதாக நல்லூர்ப் பிரதிநிதி தெரிவித்திருக்கிறார். வெளிநாடுகள் நமது அபிவிருத்திக்கு அளிக்க முன்வந்திருக்கும் உதவியில் இத்திட்டத்தை அமுல் நடத்தினால் என்ன?

இலங்கையில் முதலீடு செய்ய அமெரிக்கரை ஊக்கமளிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது நம்பிக்கையளிப்பதாகும். இலங்கையில் சிறுபான்மையினரின் நம்பிக்கையையும் பெற்று தேசிய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்த பின்னர்தான் இங்கு ஸ்திரமான அரசாங்கம் வந்துள்ளதென்பதை உணர்ந்துள்ளனர். வெளிநாட்டு மூலதனங்களையும் வெளிநாட்டு உதவிகளையும் தற்காலிகமாக பிரச்னைகளுக்குத் தீர்வு காணப் பயன்படுத்தாது பிரச்னைகளுக்கு நிரந்தரமான தீர்வு காணக்கூடிய நல்ல பலபெரிய, சிறியதிட்டங்களை உருவாக்கி நிறைவேற்றக்கூடியதாகப் பயன்படுத்த வேண்டும். இதேசமயம் நாட்டின் எதிர்காலத்தையும், முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு, அரசாங்கம் எடுக்கும் நல்லமுயற்சிகளுக்கு, அரசியல் கருத்து வேற்றுமைகளை ஒருபுறத்தில் ஒதுக்கிவைத்து, ஒத்துழைப்பு அளிக்க வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையும்பொறுப்புமாகும்.

## திருஞானசம்பந்தர் சபைக்கு நன்கொடை

கைதடி, ஞாயிறு

தென்மராட்சி மேற்கு திருஞானசம்பந்தர்சபைக்கு இந்துசமய ஆலோசனைச் சபை சுமார் ரூபா 1000 நன்கொடை அளித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சபை தென்மராட்சி மேற்குப் பாடசாலைகளில் சமய வகுப்புகள் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

சாம்பமூர்த்தி விளையாட்டு-பொழுதுபோக்குக் கழகத்தின் அங்குரார்ப்பணக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

போஷகர் திரு. எஸ். குமாரசுவாமி, தலைவர் திரு எஸ். எஸ். வயித்தீஸ்வரன், உபதலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம், செயலாளர் திரு. ஆர். நடராசா, தனாதிகாரி திரு. ஏ நடராஜன், உபசெயலாளர்-உப தனாதிகாரி செல்வி வை. எஸ். டி. சில்வா, விளையாட்டுத்தலைவர் திரு. எஸ். நடராஜன், கௌரவ கணக்குப்பரிசோதகர் திரு. எஸ். ஜி. மகேந்திரன், நிர்வாகசபை அங்கத்தவர்கள் செல்வி எஸ். குணநந்தம், திருவாளர்கள் எம். நவரத்தினம், ஈ. அபயசிறிவர்த்தனு.

புளியம்பொக்கணை

# நாகேசுவரர் சிவன் கோவில்

— ஆர். ரி. சுப்பிரமணியம் —

புராதன காலந்தொட்டு மிகவும் பிரசித்திபெற்ற ஒரு சிவத்தலமாக விளங்கிவரும் ஆலயம் புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன்கோவிலாகும். இவ்வாலயத்து வீபூதி தீர்த்தம் முதலியனவும் வில்வம் போன்ற சில மாலியங்களும் பாம்புக்கடிக்கு ஓர் ஔடதமாக இன்றும் விளங்கி வருவதை யாவரும் அறிவர். இத்தலத்து ஆண்டு உற்சவம் இன்று நடைபெறுகின்றது.

ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர் குலத்து அதிபதியாக நீதிநாயக முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். கல்வியறிவும் சகல செல்வங்களும் நிரம்பிய இவர் தமது குலத்துதித்த கமலம்மையார் என்பவரை மணந்து இல்லறம் நடத்திவந்தாரேனும் மக்கட் பேறின்மையால் மனம் மிகவருந்தி சிவபிரானையும் உமையம்மையையும் வணங்கித் தருமம் தானம் விரதம் அனுஷ்டித்து வருவராயினர். இறைவனருள் பலித்தமை காரணமாக இரு மைந்தர்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தனர். ஒரு பங்குனி மாதம் பூரணையுடன் உத்தரமும் சேர்ந்த நல்லோரையில் ஒரு பெண் மகவையும் பெற்றனர். கமலம்மையாரின் வயிற்றில் உதித்த பெண்மகவுடன், அத்தருணமே ஒரு நாகபாம்பையும் ஈன்றனள். நாகபாம்பைக் கண்ட சுற்றத்தினர் அதனை அதிசயத்துடன் எடுத்து சுற்றில் அப்புறப்படுத்தினர் ஆனால் அது மீண்டும்மீண்டும் வந்து தனது சகோதரியாகிய பெண்மகவுடன் தாயின் படுக்கையில் இடம்பிடித்தது. அஞ்சுவதற்கு இடமளியாது நடந்தமையால் தாய் பாம்புக்கும் பால் ஊட்டி வளர்த்தனள். காலம் செல்லச்செல்லப் பாம்பும் முதிர்ச்சியுற்றுப் பல விநோதங்களையும் செய்துவந்தது.

அன்றொருநாள் முற்றம் கூட்டிக் குவித்துவைத்த குப்பையைக் குழப்பியும், காலில் சுற்றியும் அவை செய்யும் தொல்லைகளைச் சகிக்கமாட்டாது கமலம்மையார் என்ற மூதாட்டியார் "ஓ, நீங்கள் தொலைந்துபோங்கள்" என்று கூறி விளக்குமாற்றால் அடித்தார்.

சர்ப்பங்கள் யாவும் உடனே கோபித்து அவ்வீட்டைவிட்டு அகன்றன. தந்தை நீதிநாயக முதலியார் வந்து செய்தியறிந்து மனம் மிகவருந்தி எங்கும் தேடியும் சர்ப்பங்களைக் காணாது ஊண் உறக்கமற்று இறைவனை நினைந்து படுத்துக் கண்ணயர்ந்தார். அன்றிரவு சொப்பனத்தில் இறைவன் காட்சிகொடுத்து "பாம்புகள் யாவும் வன்னிநாட்டின்கண்ணுள்ள புதூர் என்னும் இடத்தில் தங்கி வாழுகின்றன. நீ தகுந்த வரிசை வாத்தியங்களுடன் சென்று அழைத்து வந்து இங்கேயே எனக்கு ஓர் ஆலயம் அமைத்து அச்சர்ப்பங்களையும் தலவிருட்சத்தில் வைக்கச் செய்த வழிபாடாற்றின் மிக நன்மைப் பலன்கள் உண்டாகும்" என மொழிந்தார்.

கனவின் பிரகாரம் மறுநாள் குறித்த இடத்துக்கு வரிசை வாத்தியங்களுடன் சென்று குறையிரந்து அழைத்துவந்து ஆலயம் அமைத்து அரவுபிறந்த தினமாகிய பங்னிமாசத்துப் பூரணையோடு [illegible]

செய்த விழாவையும், நித்திய நைமித்தியப் பூசைகளையும் அவர் சந்ததியினர் தொடர்ந்து செய்து வந்தனர்.

பின்னர் இவரது புத்திரன் வவனியன் என்பவர் அர்ச்சகராகி ஆராதித்துவந்தகாலத்தில் ஒருமுறை ஊர்கடோறும் பணம், பூசாதிரவியங்கள் ஆகியவற்றைச் சேகரித்துச் சேர்த்துப் பல வண்டிகளில்மேளவாத்தியத்துடன் மீசாலையிலிருந்து 40 மைல் தாண்டிவரும்சமயம்வழமைபோல் மடுக்கரை என்னும் இடத்தில் தங்கி-ஆறிஇருந்தனர். அப்போது அக்காலத்தில் இலங்கையை ஆண்ட ஒல்லாந்த அதிகாரிகள் அவ்வழியாகக் குதிரைகளில் வந்தனர். தமது சமயத்தையே பரப்பவேண்டும் என்றும், சைவசமயிகளின் வானளாவியகோபுரங்களை இடித்து தமது பாதுகாப்புக்குக் கோட்டைகட்டும் குணமுடைய சாகித்தியத்தைச் சேர்ந்த அந்த அதிகாரியும் அவரது சகாக்களும் பூசகரோடு மாறுபட்டு இப்படியான காரியங்களும் ஊர்வலங்களும் செய்யத்தக்கனவல்லவென்றும் தமது சொல்லை மீறிச் செய்தால் சட்டப்படி உடனே சுட்டுக்கொல்லுவோமென்றும் கூற பூசகர் பயந்து, "ஐயா! எமது மூன்னோர் செய்த வழக்கப்படியே யாம் செய்தோம். அதுவும் எமது குலதெய்வத்தின் ஆணைப்படியும் அனுமதிப்படியுமேயாகும்" என்றனர். அப்போது பிரதம அதிகாரி, 'குலதெய்வம் என்றால் என்ன கடவுள்' என பூசகர் "அது ஓர் பாம்பு" என்று விடை பகர்ந்தார். "அப்படியாயின் அந்தப் பாம்பை எமக்கு உடனே காட்டுக" எனக் கேட்க, "ஆம் காட்டுவேன்" என்று கூறிஉடனே முழுகிப் பூசைக்குரிய பணிகள் செய்து ஓர் வளந்துப்பானைக்குள் கோடி வெள்ளைப் புடைவையொன்றை முறுக்கிப்பாய் பின் தடிப் பாக்கைப் போட்டு அதனை மூடித் தீபாராதனை முடித்து "பாம்பு ரூபமாக இறைவனே காட்சிதந்து தம்மைக் காக்கும்"படி மன்றாடிக் கண்ணீர் சொரிந்தார். பின் மூடிய சீலையை எடுத்தமாத்திரத்தே ஐந்து தலையும் உக்கிரமும் கொண்ட முந்திய நாகரூபமாக எம்பெருமான் தோன்றிப் பெரும் இரைச்சலுடன் வெளியேறினார்.

இதனைக்கண்டவுடனே ஒல்லாந்தர் அனைவரும் நடுநடுங்கித்திடுக்குற்றனர். உடனே பூசகரிடம் தம்மை மன்னிக்குமாறு கேட்டுத் தாமும் பொங்கலுக்கு வருவதாகக் கூறி ஏகினர்.

பொங்கல் விழா நடைபெறும் தினம் ஒல்லாந்த அதிகாரியும் வந்து தாம் கண்ட சர்ப்பத்தைப்போன்று ஒரு வெள்ளிப் பாம்பைச் செய்வித்து விலையுயர்ந்த இரத்தினக்கற்களை கண்களாக அமைப்பித்துக் கொடுத்தும் ஆலயத் திருப்பணிக்கெனப் பொருளுமீந்தும் சென்றனர். அன்று தொடக்கம் இந்தச் [illegible] பத்திலதையும் வைத்துப்

பூசகர் பூசனை செய்தார். இப்படியே அப்பூசகரின் சந்ததியினர் ஒருவர் பின் ஒருவராகச் செய்துவருகின்றனர். தற்சமயம் அக்குலத்துக்கான முறையாகிய ஐங்கரப்பிள்ளை என்பவர் அர்ச்சகராகிப் பூசை வழிபாடாற்றுகின்றனர்.

## நாட்டிலும் நகரிலும்

நேற்று முன்தினம் அதிகாலையில் ஜீப் ஒன்று வீட்டு வாசலில் வந்து நின்றது. அதலிருந்து இரண்டு காக்கி தரித்த உருவங்கள் இறங்கியதும் நான் வெடவெடத்துப்போனேன். அவர்களுக்குப் பின்னால் இரண்டுபேர் தோளில் மருந்தடிக்கும் 'ஸ்பிரேயர்' குழாய்களுடன் ஜீப்பிலிருந்து குதித்தார்கள். ஒன்றும் தோன்றாமல் நான் விழித்தபோது ஒரு காக்கி என்னிடம் வந்து 'உங்கள் வீட்டுக்கு மருந்தடிக்கப்போகிறோம்' என்றது. 'என்ன அவசியம்? நம் வீட்டில் தொற்றுநோய் கிடையாதே' என்றேன். 'இப்பொழுது இல்லாவிட்டாலும் பின்னால் வரக் கூடும்' என்று கூறிவிட்டு விளங்கப்படுத்தினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள என் வீட்டுக்கு அருகாமையில் வசிக்கும் ஒருவர் வன்னியிலுள்ள புலமோட்டை என்னுமிடத்தில் கமம் செய்யப்போயிருக்கிறார். அங்கே அவருக்கு மலேரியா காய்ச்சல் வந்திருக்கிறது. எவருக்கும் சொல்லிக்கொள்ளாமல் வீட்டுக்கு வந்துவிட்டார். சுகாதார இலாகாவின் மலேரியா எதிர்ப்பு இயக்கப்பகுதியினர் புல்மோட்டைக்கு உடனே விரைந்து சென்று நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். யார் யார் எங்கிருந்து வந்து அங்கு கமம் செய்தார்களோ அவர்களையெல்லாம் மோப்பம் பிடித்து தேடிக்கொண்டு எங்கள் ஊரிலிருந்து போனவருடைய வீட்டுக்கும் வந்துவிட்டார்கள். அவர் வீட்டைச் சுற்றியுள்ள 10, 12 வீடுகளுக்கு மருந்தடிக்கப்பட்டது. அவற்றுள் எங்கள் வீடும் ஒன்று

தின்பண்டங்கள், துணிகள் முதலியவற்றை அப்புறப்படுத்தி அல்லது மூடிவைக்கச் சொல்லி உத்தரவு போட்டுவிட்டு வீட்டிலே ஓர் அங்குலம் பாக்கியில்லாமல் சுவர், கூரை, தரை எல்லா இடத்திலும் மருந்து அடிக்கப்பட்டது. இரண்டு ரூத்தல் டி. டி. ரி. பவுடரை ஒரு கலன் தண்ணீரில் கலந்து அடித்தார்கள்.

'இதில் என்ன பிரமாதம்! நாங்களும் இந்த டி. டி. ரி. பவுடரைத்தான் கடி எறும்பு, கொசு முதலியவற்றிற்கு உபயோகிக்கிறோம். மருந்து பட்டவுடன் அவை விட்டமின் பில் சாப்பிட்டவைபோல் துள்ளிக் குதித்து ஓடுகின்றனவே!' என்று நான் கிண்டல் செய்தேன்.

அவர் சிரித்துக்கொண்டு, 'இது நீங்கள் கடையில் வாங்கும் டி. டி. ரி. அல்ல. இது உலக சுகாதாரஸ்தாபனம் எங்கள் சுகாதார இலாகாவுக்கு வழங்கியது. இதில் 75 வீதம் டி. டி. ரி. இருக்கிறது. கொசு, இலையான், எறும்பு, கரப்பொத்தான், எலி, கறையான் எல்லாவற்றையும் நிச்சயமாகக் கொன்றுவிடும்' என்று சொன்னார்.

மருந்து அடிக்கப்பட்ட இடமெல்லாம் வெள்ளையடித்ததுபோலிருந்தது. அடுத்த நாள் காலையில் பூச்சிவகை எல்லாம் பறக்கவோ ஓடவோ இயக்கமில்லாமல் தள்ளாடித் தள்ளாடி நடந்தன கோழிகளுக்கும் குருவிகளுக்கும் நல்ல வேட்டை.

'வீட்டுக்குள்மட்டும் அடித்தால் போதுமா? மரம் செடிகளில் நுளம்பு இருக்கமாட்டாதா?' என்று வினவினேன்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இந்தியர் பிரச்னை

## முதல்வர் பக்தவத்சலத்துடன் கருணுநிதி மோதல்!

சென்னை, ஏப். 3

இலங்கையிலுள்ள இந்தியர்கள் சம்பந்தமாக தமிழக சட்டசபையில் முதன் மந்திரி எம். பக்தவம்சலத்துக்கும் திராவிடமுன்னேற்றக்கழக அங்கத்தவர் கலைஞர் மு. கருணுநிதிக்குமிடையில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

இலங்கையிலுள்ள இந்தியர்கள் இலங்கையில் காவல் முகாம்களில் வைக்கப்பட்டு தாங்கொணுக் கொடுமைக்கு ஆளாவது குறித்து விவாதிக்க வேண்டுமென்று சட்டசபையில் தி. மு. க. அங்கத்தவர் திரு. மாதவ ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார். இதனைத் தொடர்ந்தே திரு. கருணுநிதிக்கும் முதன்மந்திரிக்குமிடையில் விவாதம் ஏற்பட்டது.

இலங்கையிலுள்ள இந்தியர் விஷயத்தில் அரசாங்கம் கவனம் எடுத்து வருவதால் இந்த விஷயம் பிரேரணைக்குரியதல்ல என்று முதல்மந்திரி சொன்னுர்.

இதுமத்திய அரசாங்கத்தின் விஷயம் என்றுலும் மத்திய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்க இங்குஇதனை விவாதிக்க வேண்டுமென்றும், சுவாமிநாதன் என்ற தமிழர் அங்கு அடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிருரென்றும் திரு. கருணுநிதி மந்திரிக்கு பதிலடியாகக் கொடுத்தார்.

விவாதம் நிராகரிக்கப்பட்டதென்றி இல்லாமல் மத்திய அரசாங்கத்துக்கு இந்த விஷயம் குறித்து எடுத்துரைப்பதாக முதல்மந்திரி வாக்களித்தால் பிரேரணையை வாபஸ் பெறுவதாக திரு. கருணுநிதி மேலும் தெரிவித்தார்.

''புதிதாக உறுதியளிக்க வேண்டியதில்லை. முன்னமே சொல்லியாகிவிட்டது'' என்று முதல்மந்திரி தெரிவித்ததைத் தொடர்ந்து இருவருக்குமிடையே விவாதம் பெருக்கவே சபாநாயகர் குறிக்கிட்டார்.

இந்த விஷயத்தை இத்துடன் கைவிட்டுவிடும்படி சபாநாயகர் வேண்டிக்கொண்டார்.

''சபாநாயகர் தீர்ப்புக்குத் தலைவணங்குகிறேன்'' என்று திரு. கருணுநிதி தாழ்மையாகத் தெரிவித்துவிட்டு அமைதியாஞர்.

## முதல் மந்திரி வெளியிட்ட ஆங்கில அருட்பா!

சென்னை, ஏப் 3

ராமலிங்க சுவாமிகள் நூற்ருண்டுவிழாவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட அருட்பா நூலை தமிழக முதலமைச்சர் வெளியிட்டார். காலஞ்சென்றதமிழக அறிஞர் கிருஷ்ணபிள்ளையால் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நூலை வெளியிட்டு தமிழக முதலமைச்சர் பேசுகையில், மக்கள் பொருமை, சுயநலம் போன்ற தன்மையைவிட்டு பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும்மனப்பான்மை, பிறருக்குத் தீங்குசெய்யாமைஆகிய நல்வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும், இதுவே வள்ளலார் காட்டிய வழி; இதுவே காந்திஜி நமக்குக் காட்டியவழியென்றும் பிறர் நமக்குத் தீங்கிசெய்தாலும் அதை ஏற்றுக்காலம் வரும்போது தீங்குசெய்தவனுக்கே நன்மைசெய்வதன் மூலம் அவனைத் திருந்தச் செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

## மாணவர் ஆர்ப்பாட்டம் வாஞெலிநிலையத்தைக் கைப்பற்ற!

சைகோன், ஏப் 3

சைகோன் வாஞெலி நிலையத்தைக் கைப்பற்றுவதற்காக நூற்றுக் கணக்கான மாணவர்கள் இங்கு ஆர்ப்பாட்டம்செய்தனர். பொலிஸார் தலையிட்டு கண்ணீர்ப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து கூட்டம் கலைக்கப்பட்டது.

## காமராஜர் பற்றி பெரியார் ஈ. வெ. ரா.

கும்பகோணம், ஏப் 3

''காமராஜரைப் போல் நமக்கு வேறு ஒரு தலைவர் கிடைக்கமாட்டார். ஆகவே அவர் கையை வலுப்படுத்த வேண்டும்'' என்று இங்கு நடைபெற்ற ஒரு விழாவில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. இராமசாமியார் குறிப்பிட்டார்.

## "உணவுப் பழக்கத்துக்கு அடிமையாகக் கூடாது" -பிரதமர் இந்திரா

நியூயோர்க், ஏப். 3

''உணவுப் பழக்கங்களுக்கு நாம்அடிமையாகக்கூடாது'' என்று இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி இங்கு அளித்த டெலிவிஷன் பேட்டியொன்றில் தெரிவித்தார்.

''இந்தியாவிலுள்ளபெரும்பான்மையான மக்கள் அரிசியையே மிகவும் விரும்பி உண்ணுவதால், உணவுப் பிரச்னை அங்கு மோசமாகத் தாண்டவமாடுகிறது. அரிசிக்குப் பதிலாகக் கோதுமைப்பழக்கத்தை உடனடியாக மாற்றிக்கொள்வதற்கு முடியாதவர்களாக இருக்கிருர்கள்'' என்று பிரதமர் வருத்தம் தெரிவித்தார்.

## பிரிட்டிஷ் பிரதமருக்கு டட்லி வாழ்த்து

நியுயோர்க், ஏப் 3

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனுக்கு இலங்கைப் பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தொழிற்கட்சி மீண்டும் பதவிக்கு வந்தது குறித்து இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும், மக்கள் சார்பிலும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று அவரது செய்தியில் கூறப்பட்டுள்ளது.

விரைவில் தங்களைச்சந்திக்கும்போது நேரிலேயே தமது வாழ்த்துக்களைத்தெரிவிப்பதாக அவ்வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## வேலைசெய்யும்பெண்களுக்கு குறைப் பிரசவ ஆபத்து!

ஹாம்பர்க் (டாட்), ஏப்ரல் 3

பல்வேறு அலுவல்களில் ஈடுபடுகிற பெண்களுக்குக் குறைப்பிரசவம் ஏற்படுகிறது.

மேற்கு ஜெர்மனியில் வேலை செய்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் பெண்கள். அதிகமான அளவு பெண்கள் வேலைசெய்யும் நாடுகளின் வரிசையில் ரஷ்யா (49 சதவீதம்), கிழக்கு ஜெர்மனி (39 சதவீதம்), ஆஸ்திரியா (36 சதவீதம்) ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நான்காவதாக மேற்கு ஜெர்மனி வருகிறது.

முக்கியமாகக் குடும்பத்தில் வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக பெண்கள் வேலைசெய்கிருர்கள் என்றுலும், அதனுல் ஆபத்தும் ஏற்படுகிறது. மற்றப் பெண்களுடன் ஒப்பிடும்போது வேலைசெய்யும்பெண்களுக்கு குறைப்பிரசவம் ஏற்படும் அபாயம் அதிகமாக இருக்கிறது என்று பவேரியா மருத்துவ நிபுணர் வாஸ்டர்லிங் எச்சரித்திருக்கிருர்.

யூ. பி. எஸ்.

## 100 அதிக ஸ்தானங்கள்!

லண்டன், ஏப். 3

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலில் தொழிற்கட்சி 100 பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றுள்ளது.

''மக்களுக்கு விருப்பமில்லாத நடவடிக்கைகளை நான் மேற்கொள்ள மாட்டேன்'' என்று தமது தொகுதியிலிருந்து லண்டன் திரும்பிய பிரதமர் வில்சன் தெரிவித்தார்.

இத்தேர்தலில் தொழிற்கட்சி புதிதாக 49 தொகுதி[illegible] 51 விதானங்களை இழந்திருக்கிறது.

## இந்திய நீச்சல்வீரர் நாளை நீந்துவார்!

### தலைமன்ஞரிலிருந்து ஆரம்பம்

சென்னை, ஏப். 3

இந்திய நீச்சல்வீரர் திரு. மிகிர்சென் இம்மாதம் 5-ம் தேதி தலைமன்ஞரிலிருந்து தனுஷ்கோடியை நீந்திக் கடக்கும் முயற்சியில்சடுபடவிருக்கிருர்.

நேற்று இங்குநடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. மிகிர்சென் இத்தகவலை வெளியிட்டார்.

இன்று அவர் இந்த முயற்சியை மேற்கொள்ள திட்டமிட்டிருந்தும், உடல்நலக் குறைவு காரணமாக இந்த முயற்சியைஒத்திவைத்தார். ஆனுல் டாக்டர்களின் ஆலோசனைப்படி அவர் 5-ம் திகதி தமது நீச்சல் முயற்சியை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். நீச்சல் தொடங்கி முதல் எட்டு மணிநேரமும், ஓரளவு சிரமமாக இருக்குமென்றும், அதன்பிறகு சுலபமாகக் கரையை அடைந்துவிடலாமென்றும் திரு. மிகிர் சென் இங்கு கூறினுர்.

இலங்கைக் கரையிலிருந்து திரு. சென் நீந்தவிருக்கும் கடற்பிரதேசத்தின் தூரம் 22 மைல்களாகும்.

## பாரதத்தின் முதல் கணித யந்திரம்

கல்கத்தா, ஏப். 3

பாரதம் தயாரித்த முதல் கணித யந்திரத்தை கல்கத்தாவுக்கு அருகேயுள்ள ஜெய்ப்பூர் பல்கலைக்கழகத்தில் கல்விமந்திரி திரு. சக்ளா இயக்கி வைத்தார்.

நாட்டின் வளர்ச்சிக்குஇப்படியான யந்திர[illegible] தும் உதவும் என்[illegible] சக்ளா சொன்னுர்.

# டாஷ்கண்ட் பிரகடனம் அமுல் இந்திரா-கோஸிஜின் ஆலோசனை

மாஸ்கோ ஏப். 3

**இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திர காந்தி நேற்றிரவு இங்கு வந்து சேர்ந்ததும், விமான நிலையத்தில் சோவியத் பிரதமர் கோஸிஜினும், முக்கிய அதிகாரிகளும் அவரை வரவேற்றனர். பிரதமர் இந்திரா சோவியத் விமானத்திலேயே இங்கு வந்திருந்தார்.**

விமான நிலையத்திலிருந்து லெனின் குன்றுகளுக்கு அருகாமையிலுள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமானவாசஸ்தலத்துக்கு பிரதமர் இந்திராகாந்தி அழைத்துச் செல்லப்பட்டார்.

பிரதமர் ஸ்ரீமதி இந்திராவுக்கும் திரு. கோஸிஜினுக்குமிடையில் நேற்றிரவு 11-15 வரையும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது.

டாஷ்கண்ட் ஒப்பந்தம் அமுல் நடத்துவது சம்பந்தமாக இருநாட்டுத் தலைவர்களும் வெகுவாக அக்கறையாகப் பேசியதாக அறியப்படுகிறது.

இந்தியாவின் பொருளாதார நிலைமை குறித்தோ அன்றி இராணுவ உதவி பற்றியோ நேற்றிரவுப் பேச்சுவார்த்தையில் ஆலோசனை செய்யப்படவில்லையென்று இங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இருநாட்டுத் தலைவர்களுக்கிடையேயும் இன்று காலை பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு ஸ்ரீமதி இந்திரா காந்தி இன்றே டில்லி திரும்புவார்.

## இந்தியாவுக்கு பிரிட்டிஷ் உதவி கிடைப்பது உறுதி

### இந்தியப் பிரதமர் நம்பிக்கை

லண்டன், ஏப். 3

பாரதத்தின் பொருளாதார நெருக்கடி குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் வெகுவாக அக்கறைகொண்டுள்ளதென்றும், அதுபற்றிஅவசரமாக ஆராயுமென்றும் நேற்றிரவு இங்கு வெளியிடப்பட்டஉத்தியோகபூர்வமான அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதப்பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கும், பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சனுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் வெளியான அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டிருந்தது.

தமது அமெரிக்கச்சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்க படை விமானத்தில் இங்கு நேற்று வந்துசேர்ந்த பிரதமர் இந்திராவை விமானநிலையத்தில் பிரதமர்ஹரோல்ட் வில்சன் வரவேற்ருர்.

பின்னர் திரு. ஹரோல்ட் வில்சன் பிரதமர் இந்திராவுக்கு விமான நிலையத்துக்குச்சமீபத்தில் ஹோட்டல் ஒன்றில் மதியபோசன விருந்தொன்றை அளித்தார்.

இதனையடுத்து இரு தலைவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை 90 நிமிஷங்கள்வரை நீடித்தது.

### பிரிட்டன் உணர்ந்திருக்கிறது

இந்தியாவின் உண்மை நிலையைபிரிட்டன்இப்போது நன்குணர்ந்திருக்கிறதென்றும், பாரதத்துக்கு பல விஷயங்களிலும் உதவிசெய்ய வேண்டுமென்று பிரிட்டன் விரும்புகிறதென்றும் தமக்கும் பிரிட்டிஷ் பிரதமருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை குறித்து திருமதி இந்திரா நிருபர்களிடம் இங்கு தெரிவித்தார்.

### இந்திராவின் நம்பிக்கை

திரு. வில்சனுடன் நடாத்திய பேச்சு வார்த்தை திருப்திகரமானமுறையில் அமைந்திருந்ததாகவும், தமது நாட்டுக்கு பிரிட்டனின் உதவி என்றும் கிடைக்குமென்ற நம்பிக்கை இருக்கிறதென்றும் ஸ்ரீமதி இந்திராமேலும் தெரிவித்தார்.

### 'அயூப்பை சந்திப்பதில் மகிழ்ச்சி; ஆனுல்...'

''பாகிஸ்தான் ஜனுதிபதி அயூப்கானைச் சந்தித்துப் பேசுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனுல், இப்போது அப்படிச் சந்திப்பதற்கு உசிதமில்லை'' என்று நிருபர்கள் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு பிரிட்டன் போர் ஆயுதங்கள் கொடுத்துதவியதா என்று தான் பிரிட்டன் பிரதமரிடம் கேட்டபோது, 'போர் வெறிகொண்ட எந்த ஒரு நாட்டுக்கும் தமது உதவி நிச்சயம் கிடைக்கமாட்டாது' என்று பிரதமர் வில்சன் தெரிவித்திருந்ததாகவும் நிருபர்களிடம் சொன்னுர்.

### வில்சன் இந்தியா வருவார்

அக்டோபர் மாதத்தில் பிரதமர் வில்சன் இந்தியா வரவிருக்கிருரென்றும் ஸ்ரீமதி இந்திரா கூறினுர்.

தமக்கும் பிரதமர் வில்சனுக்குமிடையேநடைபெற்ற பேச்சுவார்த்தையில், ரொடீஷியா தென்வியட்ஞம்ஆகிய உலகவிவகாரங்கள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டதாக பிரதமர்இந்திரா தெரிவித்தார்.

இந்தோனேஷியாவில்

## கம்யூனிஸ்டுகளுக்கு 'கல்தா'!

ஜாகர்த்தா, ஏப். 3

அரசாங்கத்தின் இந்தோனேஷிய அரசாங்கத்தின் உயர் பதவியிலிருந்து சகல கம்யூனிஸ்டுகளுக்கும் 'கல்தா' கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'சபைபொறுப்பேற்றது வரவேற்கத்தக்கது'

வவனியா, ஞாயிறு

பல ஆண்டுகளாக தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த வவனியா இந்து விநாயகர் ஆலயம் தற்பொழுது வவனியா சைவ மகாசபையினரால் பொறுப்பேற்கப்பட்டு நடாத்தப்பட்டுவருவது வரவேற்கத்தக்க விஷயமாகும்.

இவ்வாறுகுளக்கட்டு விநாயகர் ஆலயத்தின் கட்டடநிதிக்காக நகரசபை மண்டபத்தில் நடாத்தப்பட்ட கதம்ப நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தும் பேசுகையில் நகரசபைத் தலைவர் திரு. ம. பொன்னையாகுறிப்பிட்டார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிரமதானத்தின் மூலம் ரூ. 14,000 லாபம்

கொழும்பு, ஞாயிறு

சிரமதான இயக்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நல்ல வெற்றி அளித்துள்ளது இதன்மூலம் சுமார் 14 ஆயிரம் ரூபாவரை லாபமேற்பட்டிருக்கின்றது.

வயல்களில் வேலை, வீதிகளைச் சுத்தம்செய்தல் ஆகிய துறைகளில்இந்த சிரமதான இயக்கம் கடந்தகாலங்களில் ஈடுபட்டிருந்தது.

கோண்டாவில் பகுதியில் மலசலகூடங்கள் கட்டுவதிலும் இந்த இயக்கம் ஈடுபட்டிருந்தது.

புத்தளம் பகுதியில் 'சல்வீனியா' ஒழிப்பு இயக்கம் ஒன்றும் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட விருக்கின்றது.

## இ. தொ கா. மகஜர்

கொழும்பு, ஞாயிறு

''இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றைய தேசங்களில் நடப்பது போன்று மாறிவரும் பொருளாதாரப் பிரச்னைகளுக்கொப்ப லாப பங்கீட்டுத் திட்டத்தை வரவேற்கின்றது.

தொழிலாளர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுக்கப்படும்போது ஏற்கெனவே அவர்கள் பெற்றுவரும் 'போனஸை' கணக்கில் எடுக்கக்கூடாது. உற்பத்திச் செலவு அம்சமாக இந்தப் போனஸ் கழிக்கப்படல் வேண்டும்.'' மேற்கண்டவாறு இ. தொ. கா. லாபத்தில் பங்குபற்றிய விசாரணை கமிஷனுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

இ. தொ. கா.வின் தூதுகோஷ்டி அதன்தலைவர் திரு. எஸ் தொண்டமான் தலைமையில் இம்மாதம் 25-ம் திகதி இக்கமிஷன் முன்பு சாட்சியமளிக்கவிருக்கின்றது.

## புதிய தலைவர்

வவனியா, சனி

வவனியா நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் சபையின் உபதலைவராக திரு. எம். சபாரத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரின் பெயர் திரு. ஆர். சங்கரப்பிள்ளையினால் பிரேரிக்கப்பட்டு ஜனாப் பி. எஸ் அப்துல்லாவினால் ஆமோதிக்கப்பட்டது.


**உயர்தரக் கல்வி**

மிகத்திறமையான விவேக மீட்டல் பாடங்கள், தமிழ், சமஸ்கிருதம், அரசியல், பொருளாதாரம், புவியியல், இலங்கைச் சரித்திரம், ஐரோப்பிய சரித்திரம், இந்திய சரித்திரம் ஆகியவற்றில் அளிக்கப்படுகின்றன ஒவ்வொன்றிற்கும் ரூ 12/-

ஐக்கிய கலாசாலை,
நெல்லியடி, :: கரவெட்டி. B


## பண்டிதமணி பேச்சு

''சம்பந்தர் கண்ட இராவணன்'' என்னும் பொருள் பற்றி இன்று திங்கட்கிழமை இரவு 9-30 மணிதொடங்கி 9-45 மணிவரை இலங்கை வானொலியில் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை பேசுகிறார்.

## ஈழத்துசிற்பாசாரியரின் கலைத்திறன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பண்ணாகம் தெற்கு விசவர்த்தனை முருகமூர்த்தி ஆலயத்திற்குரிய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டவிழா சென்றவியாழக்கிழமை காலை பத்து மணி தொடங்கும் பிற்பகல் இரண்டு மணிவரை நடைபெற்றது. இப்புதிய சித்திரத்தேர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சிற்பாசாரியர் திரு. ஆறுமுகத்தின் மூத்த மைந்தனும் மகாஜனக் கல்லூரி ஆசிரியருமான திரு. தம்பித்துரையின் தலைமையில் சகோதரர் சிவரத்தினம் மற்றும் உறவினர்களினாலும் நிர்மாணிக்கப்பட்டது.

பிரதம சிற்பியான திரு தம்பித்துரைக்கு பொன்னாடைபோர்த்தும், தங்கப் பதக்கம் அணிவித்தும் தேர்த் திருப்பணிச் சபையினர் கௌரவித்தனர்.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு. சம்பந்தமூர்த்தி உரையாற்றிய போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

இந்தியநாட்டில் இலங்குகின்ற தேர், வாகனம் போன்ற சிற்பக்கலைகளின் திட்ப நுட்பம் குன்றுவகையில் ஈழத்தில் சிருஷ்டிகளைச் செய்துவந்தவர் திருநெல்வேலி சிற்பாசாரியர் திரு. ஆறுமுகம். அன்னாரது கலைத்துவத்தின் வாரிசுகளாகத் தாமும் விளங்குகின்றனரென்பதை இத்தேரை நிர்மாணித்த திரு. தம்பித்துரையும் அவருடைய குழுவினரும் நிரூபித்துவிட்டனர். இங்கே இவர்களால் அமைக்கப்பட்ட தேரே அவர்களின் நுட்பமான கலை மகத்துவத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

தலைவரை அடுத்து ஆசிரியர்கள் சீனிவாசகம், கந்தசாமி, அப்பாபிள்ளை என்பேர் தேரின் சிறப்பைப் பற்றிப் பேசினர் சிற்பக்குழுவினர் சார்பில் நன்றியுரைகூறிய சிற்ப ஓவியர் தம்பித்துரை ஊர்மக்களின் ஒத்துழைப்பும், தமது சககலைஞர்களின் ஊக்கங்குன்றா உழைப்புமே இந்த மாபெரும் பணியைச் செய்வதற்கு ஆதாரமாக விளங்கினவென்றும், தக்க அறிஞர், பெருமக்களின்பாராட்டுதல்களும் பரிசில்களுமே கலைஞர்களைத் தம்துறையில் வளரத் தூண்டவல்லன வென்றும் குறிப்பிட்டார்.

## நித்திரையில் குற்றவாளி கைது

வல்வெட்டித்துறை, ஞாயிறு

உடுப்பிட்டி சமரபாகுவைச் சேர்ந்த முத்துக்குமாரு சிதம்பர நடராசா என்பவர் அதே ஊரைச் சேர்ந்த சின்னத்துரை என்பவருக்கு 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி பொல்லால் அடித்துக் காயப்படுத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 6 மாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

தண்டனையை எதிர்த்து குற்றவாளி அப்பீல் நீதிமன்றத்திற்கு மனுச் செய்தார். அப்பீல் நீதிமன்றமும் அத்தண்டனையை ஊர்ஜிதம் செய்தது. எதிரி தண்டனை அனுபவியாது தலைமறைவாக இருந்து வந்தார். சென்றமாதம் 31-ம் திகதி இரவு அவர் வீட்டில் நித்திரை செய்யும்போது வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. எம். பி. அமிர்தநாதன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## 'வாலிபர்கள் பொருளாதாரத்தை பெருக்கவேண்டும்'

மாங்குளம், ஞாயிறு

''இன்றைய வாலிபர்கள்தான் நாட்டின் வருங்காலப் பெரியோர்கள். இவர்கள் நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், அவர்கள் தங்கள் தங்கள் நாட்டின் பொருளாதார உத்பத்தியைப் பெருக்க முற்படவேண்டும். இலங்கையின் மூன்றிலிரண்டு பகுதியைக் கொண்ட வறண்ட பிரதேசத்தில் காலபோக மழையை அடிப்படையாகக் கொண்டும், குளங்கள் மூலமும் நீர்ப்பாசன வசதி செய்தும் எமது விவசாயத்தைப் பெருக்கலாம். எமது விவசாய இலாகாமட்டும் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமென்றுபலபொருட்காட்சிகளையும், படக்காட்சிகளையும் வைத்தால் மட்டும் போதாது. நாட்டிலுள்ள வாலிபர்களும், கமக்காரரும் எம்முடன் தோழோடு தோழ்நின்று உழைத்தால் தான் எமது அடிப்படை நோக்கங்களில் ஒருசிலவாகிலும் பூர்த்தியாகும்'' என்று அடம்பனில் நடந்த மாவட்டக் கிருஷிகப் பொருட்காட்சியினதும் இளைஞர் விவசாயக்கழக மகாநாட்டினதும் முதல்நாள் திறப்புவிழாவின் போது மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. எஸ். காராளசிங்கம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழாவுக்கு விவசாய உதவி அதிபர் கலாநிதி ஈ. அபயரட்ண பிரதம விருந்தினராகச் சமுகமளித்தார். தேசியக் கொடியை மாந்தைக் காரியாதிகாரி திரு. ஏ. வாமதேவன் ஏற்றிவைத்தார்.

## பின்போடப்பட்டுள்ளது

கிளிநொச்சி, ஞாயிறு

ஆசிரியர்கள் பலருடைய வேண்டுகோளுக்கிணங்க ஜூலை மாதம் முதற் சனிக்கிழமை நடைபெறும் அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வுக்கு விண்ணப்பம் அனுப்பும் கடைசித் திகதியைத் தமிழ் மறைக்கழகம் மே மாதம் நடுப்பகுதிவரை பின்போட்டுள்ளது.

ஆண்டுதோறும் தமிழ் மறைக்கழகம் திருவள்ளுவர் திருநாளை நடத்துவது[illegible] திருக்குறள் மாநாடு ஜூன் மாதம் 1-ம், 2-ம், 3-ம், திகதிகளில் நடைபெறும்.

## எஸ். ஜே. விக்கு பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

''யேசு கிறிஸ்து நாதர் தோன்றுவதற்கு முன்னரேயே அவர் தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் தமிழரசு தந்தை செல்வா காங்கேசன்துறையில் பிறந்து தமிழ்மக்களுக்கு இவ்வரிய தொண்டுகளைச் செய்வார் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. தள்ளாத வயதிலும் மாற்றுக்கட்சியினரின் சொல்லடிகளையும், ஏளனங்களையும் தாங்கித் தளராத மனத்துடன் சேவைசெய்துவரும் தியாகி அவர். தியாக மார்க்கத்தை நமக்குக் காட்டிவரும் செல்வா மற்றவர்களிடத்திலே பண்பைக் காண்பவர். அவர் பன்னெடுங்காலம் வாழத்தமிழன்னை அவரை வாழ்த்த வேண்டும்'' இவ்வாறு உடுப்பிட்டித் தமிழரசுக்கிளைத்தலைவர் அட்வகேட் திரு. க. ஜெயக்கொடி நெல்லியடி தமிரசுக் கட்சி வாலிபமுன்னணியினரால் கொண்டாடப்பட்ட தமிழரசுத்தந்தை திரு. எஸ். ஜே வி. செல்வநாயகத்தின் 68-வதுபிறந்ததினக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. ஜே. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் க. செ. சுவர்ணராசா, மெய்யரசன், கே. இராசசிங்கம் ஆகியோரும் பேசினர்.

## பாடசாலையில் கிணறு இல்லை

மாங்குளம், ஞாயிறு

ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பெற்றோர்- ஆசிரிய சங்கக் கூட்டம் நேற்று நடைபெற்றது. தலைமை ஆசிரியர் திரு. பெ. மயில்வாகனம் தலைமை வகித்தார்.

பாடசாலை வளவிற்குள் கிணறு இல்லாதபடியால் பாடசாலை மாணவர்கள் அரைமைல் தூரம் சென்று தண்ணீர் எடுக்கவேண்டியிருக்கின்றதென்றும், இதனை கல்வி இலாகா நிவர்த்தி செய்துதரும்படி கேட்பதென்றும் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

பாடசாலையை ஒரு கனிஷ்ட பாடசாலையாக்க வேண்டுமென்ற பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது.

## இந்துவாலிபர்களுக்கு வெற்றி

வல்வெட்டித்துறை, ஞாயிறு

அல்வாய் வை. எம். எச். ஏ. விளையாட்டுக்கழகத்திற்கும், பருத்தித்துறை சைனிங் ஸ்ரார் கழகத்துக்கு மிடையே நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 2 ஆட்டங்களிலும் முறையே 16 : 14, 15 : 13 புள்ளிகளைப்பெற்று வை. எம் எச். ஏ. கழகம் வெற்றியீட்டியது.

இப்போட்டிக்கு திரு. எஸ். என். ஆறுமுகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## புராணப் படிப்பு பூர்த்தி

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லண்டை, அம்மன் கோவில் திருக்கலியாணப் படிப்பு சென்ற வியாழக்கிழமை இரவு மிக விமரிசையாக நடைபெற்றது.

இதற்கு பிரபல சோதிடர் திரு. பெ. க. தியாகராசா உட்பட நவாலி, கோப்பாய், கல்வயல் ஆகிய பகுதிகளில் இருந்து பண்டிதர்கள் புராண விரிவுரை நிகழ்த்தினார்கள். அடுத்த நாள் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## கரவை இளைஞர் சிறந்தநடிகராக தெரிவு

### கலையரசு பாராட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் சென்றமாதம் 27, 28-ல் நடாத்திய ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த நாடகப் போட்டியில் பதினொரு நாடக மன்றங்களின் நடிகர்களுள் சிறந்த நடிகர் கரவை வள்ளுவர் மன்றத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

''சங்கரர்'' என்ற நாடகத்தில் சாந்தசொரூபியாக பாத்திரமேற்றுக் குணசித்திரமாக நடித்த கரவெட்டியைச் சேர்ந்த இளைஞர் அருளானந்தனையே தனக்குப்பிடித்த நடிகன் என நடிகர் தெரிவுப்போட்டியில் பிரதம மத்தியஸ்தராக கடமையாற்றிய கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் சார்பில் கரவை அருளானந்தனுக்குக் கலையரசு சொர்ணலிங்கம் ஒரு நடராச விக்கிரகத்தையும் சான்றிதழ்களையும் பரிசாக வழங்கினார்.

## பஸ் சீர்கேடுபற்றி கி. மு. சங்கம்

பளை, ஞாயிறு

கட்டைக்காடு கிராம முன்னேற்ற சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று திரு. கெ. எலியாசியின் தலைமையில் நடைபெற்றது.

தற்பொழுதுநடைபெற்றுவரும் பஸ் சேவை திருப்தியற்ற முறையில் இருப்பதால் இ. போ. ச. முகாமையாளரை பஸ் சேவையைச் சீர் திருத்தும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்ற தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கோயில்வயல் வரை பஸ் சேவையை ஒழுங்குபடுத்தியதற்காக பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா பொ. இரத்தினத்திற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

## விமானம் விழுந்து நொறுங்கியது

### விமானி உயிர் தப்பினர்

பம்பாய், ஏப்ரல் 3

இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 'ஸீ ஹாக்' ரக விமானம் ஒன்று பம்பாய்க் கருகில் கடலில் விழுந்து நொறுங்கியது. விமானத்தில் அப்போது விமானி மட்டும் தான் இருந்தார். அவர் விமானத்திலிருந்து உயிர் தப்பினர்.


யானை மார்க்



அஸ்பெஸ்டஸ்
கூரை சீற்றுக்கள்
( 6' 7' 8' 9' 10' அளவுகள் )
பிளேன் சீற்றுக்கள்
( 4'×4', 6'×4' அளவுகள் )
எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
சண்முகம் ஸ்ரோர்ஸ்
( யாழ். நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள் )
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697



வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

''வில்லியேர்ஸ்'' மார்க் 10, 12, 20 மொடல், விவசாய யந்திரங்கட்கு 'பிஸ்றன்', 'றிங்ஸ்', 'பெயரிங்ஸ்' எம்மிடம் கிடைக்கும். ராமகிருஷ்ணுஸ், ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். போன்: 7179. 7

உடும்பராய் வடக்கு கற்பகப்பிள்ளையார் கோவில் ஒழுங்கைக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய காணி 4 பரப்பு விற்பனைக்குண்டு. விளம்பர இல: 11. ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 11

### தேவை

உணவுச் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்ய லொறிகள் தேவை. காங்கேசன்துறை லொறிச் சொந்தக்காரர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. எழுத்தில் அல்லது நேரில் மனுச்செய்க: கௌரவசெயலாளர், யாழ். மக்கள்துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம், கார்மேல்வீதி, யாழ்ப்பாணம். 9

### SALES

2 Sri Speedtwin. One owner in show room condition. Very low mileage. 49/1, Oldpark road, Jaffna. 6

### தேவை

50,000 'சி' தர சாக்குகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்துக்கு 6-4-66ல் மாலை 4 மணிக்கு முன்னர் காரியாலய நேரத்தில் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும். காரியதரிசி, வ. ப. வி. உ. கூ. சமாசம். 111 பிரதான வீதி, யாழ்ப்பாணம். 12

விஞ்ஞானப் பாடங்கள் போதிப்பதற்கு விஞ்ஞானப் பட்டதாரி அல்லது தகுதி பெற்றவர்கள் (ஆசிரியர்களாக நியமிப்பதற்கு) 5ம் திகதிக்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்விநிலையம், திருநெல்வேலி. 10

விற்பனையாளர்கள்தேவை நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம். 2239

### வாடகைக்கு

ஆனைக்கோட்டை 2 அறைகள், போட்டிக்கோ, விறாந்தை, குசினி, குளிக்கும் அறை, குழிக்கக்கூசு முதலிய வசதிகள் உள்ள வீடு. மணியகாரன் R. N. சின்னையா அவர்களின் அடுத்த காணி வைரவர் கோவில்உள்ளவளவு திருமதி வ. பொன்னுத்துரை, 'கூடல்' ஆனைக்கோட்டை. 2


# குத்துச்சண்டை சாம்பியனுக்கு உப-ஜனதிபதியாக ஆசையாம்!

நியுயோர்க், ஏப்ரல் 3

அமெரிக்காவின் உபஜனதிபதியாவதற்குத் தான் விரும்புவதாக உலக அதிபாரக் குத்துச்சண்டை சாம்பியன் காஸியஸ்கிளே தெரிவித்தார்.

ஒரே மகிழ்ச்சிக் கடலில் இப்போது துள்ளிக்குதித்து விளையாடும் கிளே டெலிவிஷன் பேட்டியிலேயே இப்படியாகத் தெரிவித்தார்.

கனடா அதிபாரக் குத்துச்சண்டைவீரர்ஜோர்ஜ் சூவாலாவுடன் தான் நடாத்திய 'மோதல்' குறித்தும், தனது எதிர்கால திட்டங்கள்பற்றியும் வீரர் கிளே தமாஷாகச் சொன்னர்.

ஜனதிபதி ஜோன்ஸனைக் கடைசியாகச் சந்தித்த போது அவருடன் தான் உபஜனதிபதிப் பதவிக்குப் போட்டியிடப் போவதாக அவரிடம் தெரிவித்திருந்ததாகக்கிளே கூறினர்.

''ஏன் போட்டியிட விரும்புவதாக என்னிடம் அவர் கேட்டதற்கு மூன்று காரணங்கள் சொன்னேன்'' என்றும் கிளே பேட்டியில் சொன்னர்.

நீக்ரோக்களின் வாக்குகள் முழுவதையும் தன்னுல்பெற முடியுமென்றும், முஸ்லிம்கள், மற்றும் பல சங்கங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் பரிபூரண ஆதரவு கிடைக்குமென்றும் தான் ஜனதிபதி ஜோன்ஸனுக்குச் சொன்னதாக வீரர் கிளே கூறினர். (பி. டி. ஸி.)

## பாதையின் சீர்கேடு

பளை, ஞாயிறு

பளை மகாவித்தியாலயத்துக்கென அமைக்கப்பட்ட வீதியின் சீர்கேட்டினுல் மாணவ மாணவிகள் கரடுமுரடான கற்கள் சிதறிக்கிடக்கும் பாதையில் நடக்க முடியாது கஷ்டப்படுகின்றனர். மாணவர்க்குமட்டுமின்றி போக்குவரத்துக்கே இப்பாதை பொதுவாக கஷ்டமாக உள்ளது.

உதைபந்தாட்டம்

## சென். அந்தனிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். மேரீஸ் 'பி' பிரிவுக்கும், ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டியில் சென். ஜேம்ஸ் கோஷ்டியினர் சமுகம் கொடுக்காத காரணத்தினுல் சென். மேரீஸ் கோஷ்டி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான போட்டியில்பாஷையூர் சென் அந்தனி கோஷ்டியினரும், குருநகர் புனிதவளன்கோஷ்டியினரும் மோதிக்கொண்டனர். இடைவேளைவரைக்கும் போட்டி மிகவும் ரசிப்பாகக்காணப்பட்டது. எனினும் சென். அந்தனி கோஷ்டியில் உற்சாகமும், முன்னேற்றமும் காணக்கூடியதாகவிருந்தது. சென். அந்தனி கோஷ்டியின் மத்திய முன்னணி வீரர் பந்தை அருமையாக அடித்து முதலாவது கோலைப் போட்டனர்.

சென். அந்தனி கோஷ்டியினர் பலதடவைகள் கோல்கள் போட முயற்சித்தனர். அவர்களுடைய முயசிகள் எல்லாம் புனிதவளன் பின்னணிவீரர்களினுல் முறியடிக்கப்பட்டது. இடைவேளையின் போது புனிதவளன் கோஷ்டியினர் ஒரு கோலும் அடிக்காதவகையில் சென் அந்தனி கோஷ்டியினர் ஒரு கோல் பெற்றிருந்தார்கள்.

இடைவேளையின் பின்னர் நடந்த போட்டியில் பாஷையூர் கோஷ்டியினரில் ஒரு புய இருப்பம் காணப்பட்டது புனிதவளன் கோஷ்டியினரைச் சுற்றிவளைத்துப்படாதபாடுபடுத்தினர் அடுத்தடுத்து பல கோல்களை வெளுத்துவாங்கினர். எனினும் இவர்களுக்குக் கிடைத்த ஒரு 'பெனல்டி'யை ஒரு கோலாக்காது தவற விட்டுவிட்டனர். இந்தவகையில் எதிர்க் கோஷ்டி கோல் காப்பாளர் பாராட்டுக்குரியவர். இடைவேளைக்குப் பின் புனிதவளன் பக்கமே பந்து நின்றுகொண்டிருந்தது எனினும் புனிதவளன் பின்னணி வீரர்கள் தம்மால் இயன்றவரை எதிர்த்துப் போட்டியிட்ட குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டி முடிவில் சென், அந்தனி கோஷ்டியினர் புனிதவளன் கோஷ்டியினரை 5-0 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டி ... மைதானத்தில் நடைபெற்ற...

கலைக்குவியல்

## விளையாட்டுக் கழக புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

கல்வியங்காட்டுக் கலைக்குவியல் விளையாட்டுக்கழகத்தாரின் வருடாந்தக் கூட்டம் நேற்று ஸ்ரீமதி கமலா கேகயலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். விளையாட்டுத் தலைவர்: சு. பஞ்சரெத்தினம். சிறுவர்களின் விளையாட்டுத் தலைவர்: திரு. கே. கமலலிங்கம். உப தலைவர்: வே. முத்துக்குமாரு. காரியதரிசி: ஸ்ரீமதி கமலா கேகயலிங்கம். உப காரியதரிசி: ந. விஜயபாலன். தனாதிகாரி: க. அரசரெத்தினம். உப தனாதிகாரி: ச. விஜயதாசன்.

ஆறுபேர் கொண்ட கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. (ந. நி)

## காணிக் கச்சேரி

நல்லூர், ஞாயிறு

வலி-வடக்குக் காரியாதிபிரிவில் இம்மாதம் 5-ம் திகதி நடைபெறவிருந்த காணிக்கச்சேரி 6-ம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

## சைவத்தொண்டருக்கு பொன்னுடை

நல்லூர், ஞாயிறு

அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கத்தின் எட்டாவது வருடாந்தக்கூட்டம் சங்கத்தலைவர் சிவஸ்ரீ கு. பஞ்சநதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றபோது சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிவரும சிவஸ்ரீ ஸ்ரீநிவாசக் குருக்களுக்குப் பொன்னுடை போர்த்திக்கௌரவிக்கப்பட்டது.

கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பளை முதலான இடங்களிலிருந்து ஏராளமானேர் வருடாந்தக் கூட்டதிற் கலந்து கொண்டனர். கடந்த ஆவணியில் நடைபெற்ற சிவாச்சாரிய பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு தராதரப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சிவஸ்ரீ கு. பஞ்சநதக்குருக்கள், உப-தலைவர்: சோ. ஸ்ரீநிவாசக் குருக்கள், காரியதரிசி: இ. குஞ்சிதபாதக்குருக்கள், உப-காரியதரிசி: திரு. வி. சுப்பிரமணிய சர்மா, தனாதிகாரி: திரு. வி. பரமேஸ்வர சர்மா, கணக்குப் பரிசோதகர்: சி. ஹரிஹர சர்மா. 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## கிரிக்கெட் போட்டி முடிவு

யாழ்ப்பாணம், திங்.

நல்லூர் தெற்கு சனசமூக நிலையக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், சுண்டிக்குளி கிறீம்சன் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் நல்லூர்தெற்கு சனசமூக நிலையக் கோஷ்டி கிறீம்சன் கிரிக்கெட் கோஷ்டியை3விக்கெட்டுகளாலும், 36 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. மிகவும் காரசாரமாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் கிறீம்சன் கோஷ்டியிரே தமது முதலாவது இனிங்சுக்கான துடுப்படியாட்டத்தை ஆரம்பித்தனர். இவர்கள் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 24 ஓட்டங்களே பெற்றனர்.

இதையடுத்து சனசமூக நிலையக்கோஷ்டி தனதுமுதல் இனிங்சுக்கான துடிப்படி ஆட்டத்தை ஆரம்பித்து சகலவிக்கட்டையும் இழந்து மொத்தம் 60 ஓட்டங்களைப் பெற்றது.

கிறீம்சன் கோஷ்டியினர் தமது2-வது இனிங்சில்துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 40 ஓட்டங்கள் பெற்றனர். இப்போட்டி நல்லூர்தெற்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

## பரிசுத்தவார ஆராதனைகள்

சங்கானை, சனி

சங்கானை திருச்சபையின் பரிசுத்தவாரம் இன்று தொடக்கம் 10-ம் திகதி வரை நடைபெறும்.

தினமும் நடைபெறும் ஆராதனைகளில் திருவாளர்கள் ஏ. ஆர். கதிர்காமர், ஆர். கே. எட்வேட் சண்முகம், ஜே. அருமைநாயகம், ஜே. எஸ். மாணிக்கம், இ. டி. இராசரத்தினம், எஸ். எஸ். செல்வத்துரை, எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் பேச்சாளர்களாகக் கலந்துகொள்கிருர்கள்.

## இராமநாதன் அக்கடமி

சுன்னுகம், ஞாயிறு

இராமநாதன் அக்கடமிக்கு இம்மாதம் முதலாம் திகதி வருடப்பிறப்பு விடுதலை ஆரம்பமாகிறது. அக்கடமி மாணவிகள் சென்ற வியாழக்கிழமை மாலை முதலாம் தவணை முடிவதை முன்னிட்டு ஓர் இன்னிசை விருந்தளித்தனர். இதில் பல மாணவிகள் பங்குபற்றினர்.

பெற்றோரும் அக்கடமிநிர்வாகிகளும் இவ்வைபவத்திற்கு சமூகம் கொடுத்திருந்தனர். இராமநாதன் அக்கடமியின் எதிர்காலத்தை ஆலோசித்து ஆவன செய்வதற்கு பெற்றோர்களினதும் ஆதரவாளர்களினதும் கூட்டமொன்று இம்மாதம் 11-ம் திகதி 5 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுமைதானம் அமைக்க முயற்சி

மாங்குளம், ஞாயிறு

''இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் விளையாட்டுத்திறமையைமேலும் விருத்திசெய்வதற்கும் கல்வித் துறையில் ஊக்கம்பெறவும் இங்கே ஒரு தகுதியான விளையாட்டு மைதானத்தை அமைக்கத் தெண்டிப்பேன்'' என வவுனியா காமினி மகாவித்தியாலய வருடாந்த இல்லப் போட்டிவிழாவிற்கு பிரதமவிருந்தினராகச் சமுகம் கொடுத்த வடபிரதேச வித்தியாதிபதி திரு. எஸ் தணிகாசலம் பேசுகையில் குறிப்பிட்டார்.


## விளம்பரம்

### விற்பனையாளர் தேவை

சகல விதமான மோட்டார் உதிரிப் பாகங்களில் தேர்ச்சியுள்ளவரும், மோட்டார் யந்திர ஸ்தானத்தில் அல்லது மோட்டார் யந்திர உதிரிப்பாக விற்பனையாளரிடம் கடைசி பத்துவருடம் வேலைபார்த்த அனுபவமுள்ளவரும் தேவை.

சம்பளம்: ஊழியர் சேமலாப நிதி சகலதும் உட்பட மாதம் ஒன்றுக்கு ரூபா 200/00.

விண்ணப்பிக்கவும்: ஓட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 104

### கேள்வி விளம்பரம்

டச்சு றேட்டின் எஞ்சியிருக்கும் பகுதி அமைக்கும் வேலை

1966ம் ஆண்டு சித்திரை (ஏப்பிறில்) மாதம் 26ந்தேதி காலை9.00மணிவரையும்வட்டுக்கோட்டைக் கிராமசபை அக்கிராசனரால் பதிவுசெய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களிடமிருந்து 'டச்சு றேட்டின் எஞ்சியிருக்கும் பகுதி அமைக்கும் வேலைக்குச்' சில்லைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 25-4-66ந் தேதி பிற்பகல் 1-00 மணி வரையும் ரூபா 25/- ரெண்டர்ப் பணமாகவும், ரூபா 2/- ரெண்டர்ப் பத்திரப் பணமாகவும் கட்டிப் பெற்றுக்கொல்லலாம். ஏனைய விபரங்கள் எனது கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

செ. சின்னத்தம்பி
தலைவர்
வட்டுக்கோட்டைக் கிராமசபை

கிராமசபை அலுவலகம்
வட்டுக்கோட்டை
1-4-1966

103

### அறிவித்தல்

பீ. ஏ; ஜீ. ஏ. கியு; ஜீ. சீ. ஈ. உயர்தரம் கலை ஒரு வருடப் பயிற்சி; ஜீ. சீ. ஈ. சாதாரண தரம் கலை/விஞ்ஞானம்; வர்த்தகம் தமிழ்/ஆங்கிலம் சிங்களம் ஆகிய காலை, மாலை வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. உடனே சேருங்கள், சித்தி உறுதி.

எதிர்பாருங்கள்
கலைஞான விழா
யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி
கைலாசபிள்ளையார் கோவிலடி நல்லூர்
வதிரி — கரவெட்டி
2086


## 3,200 ஆண்டுகளுக்கு ஒரு காலண்டர்!

### ரஷ்யர் செய்துள்ளார்

மாஸ்கோ, ஏப் 3

ரஷ்யாவைச் சேர்ந்த லியோனித் சாகாரோவ்ஸ்கி என்பவர் நிரந்தரக் காலண்டர் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

நீண்ட சதுரமான பெட்டியில் எண்கள் பொறித்த சுழலும் வட்டத்தகடு ஒன்று இருக்கிறது. அது வில் போன்ற வளைந்த துவாரங்களையுடையது. இதுவே அக்காலண்டராகும். இக்காலண்டரில் தேதியையும் கிழமையையும் காணலாம். இக்காலண்டர் 3,200 ஆண்டுகளுக்குப் பயன்படுத்தலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொஸ்லாந்தைக் கடிதம்

— நமது நிருபர் —

கொஸ்லாந்தை, ஞாயிறு மலையகத்திலிவாழும்பத்து இலட்சம் மக்களின்குழந்தைகளுக்கு நூறு பாடசாலைகள் ஒழுங்கானதாக இருக்குமானென்றல் அது தெய்வச் செயல்தான்.

மலையகநகர்ப்புறங்களிலே சிங்களவர்களும், தமிழர்களும்சேர்ந்தே வசிக்கிறார்கள். சிங்களவர்களுக்காக ஏற்பட்ட பாடசாலைகளில் மாலைநேரத்தில் ஆகக்கூடியது நான்குமணிநேரம் மலையகக் குழந்தைகள் கல்வி கற்றுவருகிறார்கள். இரு வகுப்புக்கு ஒருஆசிரியர் வீதம் கரும்பலகை இல்லாமலும், அப்படி இருந்தால், வெண்கட்டி இல்லாமலும் இருக்கிறார்கள்.

இன்று ஊவா மாகாணத்தில் மூடப்பட்ட பாடசாலைகளும்மூடும்தறுவாயில் இருக்கும் பாடசாலைகளும் பல. கொஸ்லாந்தையைச் சேர்ந்தகம்பாயம், மொனருகலை, பிபிலை, பசறை, லுணுகலை ஆகிய கிராம, நகரங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டன. வெலிமடைப்பக்கத்து கிராமத்தில் உள்ள ஒருபாடசாலையில் ஒரே ஒரு ஆசிரியர் கடமையாற்றிவருகின்றார். இவர் விடுமுறையில்செல்லும்போதெல்லாம் மாணவர்கள் நிலை என்ன? அவர் விடுமுறை முடிந்து வரும்போது மாணவர்களுக்குச்சொல்லி அனுப்புவாராம்!

இன்னும் பல பாடசாலைகளில் பிரஜாவுரிமை கேட்டு மாணவர்களைத் தட்டிக் கழிக்கிறார்கள். அப்படிப் பிரஜாவுரிமை இருந்தாலும், வாக்குரிமைபோன்றநொண்டிக் காரணங்களைக் காட்டி அநுமதி மறுக்கிறார்கள்.

## நான்கு மாதங்கள் சம்பளம் இல்லை

கொழும்பு, ஞாயிறு தென்மாகாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட பலஆசிரியர்களுக்குக்கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.


### விற்பனைக்கு

மொரிஸ் மைனர்! வெளிநாடு செல்லவிருக்கும்யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளரின் சொந்தப்பாவிப்பிலிருக்கும் திறமையான நிலையிலுள்ள கார். சுன்னாகம் சேனிஸ் கிரேசனுக்கு அருகாமையில் உள்ள "மணிவிலா"வில் பார்வையிடலாம். 3

### விளம்பரம்

வர்த்தகர்களே வணக்கம்!

1929-ம் ஆண்டு துவக்கம் கடை ஆரம்பம். உணவுச் சாமானுடன் கயிறுவலை, தேடாமுறுக்கு கயிறு, தும்புத்தடிவகை, ஈக்குத்தடி, பொதுவாக தும்பினால் செய்யப்பட்ட சாமான்களும் கடையில் விற்பனைக்குண்டு. வந்து பார்வையிட்டு எங்களை ஆதரியுங்கள். 36 வருட அனுபவம். நல்ல ரகம், குறைந்த விலை. போன்: 420. விலாசம்: 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். மு. குமாரசாமி.

REGAL—JAFFNA
NOW SHOWING!
All Great Stars
in M G M's
Big Parade of
Comedy

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
நீதிக்குப் பின் பாசம்
கலரி 50 சதம்.
4-45க்கு மட்டும்
The Dark Eyes of London

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
பூம்புகார்

இப்பொழுது நடைபெறுகிறது!
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
சபையர் (வெள்ளவத்தை) விஜிதா (அட்டன்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
முத்துராமன், மனோகர்,
சந்திரகாந்தா, ராஜஸ்ரீ,
பேபி ஷகிலா
நடிக்கும்
மொடேர்ன் தியேட்டர்ஸின்
அம்மா எங்கே?
விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு)

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
கடைசி வாரம்
சர்வர் சுந்தரம்


# 'தீர்மானத்தை செயற்படுத்துக'

கிளிநொச்சி, ஞாயிறு அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் திணைக்களங்களிலுள்ள பெயர்ப் பலகைகள் தமிழிலும் இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதனை உடனடியாகச் செயற்படுத்துமாறு கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் எல்லா மந்திரிகளுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

## நாட்டிலும நகரிலும

(2-ம்பக்கத்தொடர்ச்சி)

அந்த சுகாதார அதிகாரியிடம்.

'நுளம்புகள் மரம் செடிகளில் நன்றாக இருக்கலாம். அதனால் ஒன்றுமில்லை. அவை மனிதருடைய உடலில் உட்கார்ந்து கடிக்கும்போது தான் ஆபத்து உண்டாகிறது. இரவில் மனிதர் தூங்கும்போது அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சும் நுளம்பு உண்ட களைப்பினால் அருகிலுள்ள சுவரிலோ கூரையிலோ தங்கி களைப்பாறிய பின்னர்தான் வெளியே போகும். அப்படி தங்கியிருக்கும்போது டி. டி. ரி. அடிக்கப்பட்ட இடத்தில் அது உட்காருமானால் அது சாவது நிச்சயம். அதற்காகத்தான் மலேரியா உலாவுவதாகச் சந்தேகிக்கப்படும் பகுதிகளில் இந்த 'டபிள் டோஸ்' மருந்தை உடனே அடிக்கிறோம்.

'நோயுள்ள ஒருவரின் உடம்பிலிருந்து இரத்தத்தை உறிஞ்சவேண்டுமென்ற அவசியமில்லை. நுளம்பு தனது தும்பிக்கையைவிட்டு சும்மா குத்தினாலே மலேரியா கிருமிகளில் சில அதில் தொற்றிக்கொள்ளும். அதற்குப்பின் அந்த நுளம்பு சும்மா இருக்கமாட்டாது. இன்னும் நாலைந்து பேரில் உட்கார்ந்து குத்தினால்தான் அதன் விறுவிறுப்பு தீரும். அப்படிச் சும்மா குத்தும்போதே மலேரியா கிருமிகள் சில அவர்களின் உடம்புகளுக்குள் செலுத்தப்படுகின்றன. அவர்களுக்கு காய்ச்சல் உண்டாகிறது.' இப்படி இன்னும் பல தகவல்களை அவர் ருசியாகத் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் இலங்கை மலேரியாவுக்கு மிக்க புகழ் பெற்ற நாடாக விளங்கியது. அரசாங்க இலாகாக்களில்'மலேரியா ஸ்டேஸன்' 'மலேரியா இல்லாத ஸ்டேஷன்' என்ற பாகுபாடு இருந்தது. கிளறிக்கல் குமாஸ்தாக்கள் "ஐயோ, என்னை 'மலேரியா ஸ்டேஷனுக்கு' அனுப்பாதீர்கள்" என்று கெஞ்சுவார்கள். 1930-31-ம் ஆண்டளவில் நாடு முழுவதும் மலேரியா தலைவிரித்தாடி ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். இதைத் தொடர்ந்து பல வருடங்களாக மலேரியாவை எதிர்த்து வெகு தீவிரமான ஓர் இயக்கம் நடந்தது. காடு, மலை, வாவி, குளம், வீடு, வாசல், நாடு. நகரம் எங்கும் டி. டி. ரி. மருந்தடிக்கப்பட்டது. இதன் விளைவாக மலேரியா பூண்டோடு அழிக்கப்பட்டது.

இப்பொழுது மாகோ முதலிய இடங்களில் மறுபடியும் இந்தக் கொடிய நோய் தலைகாட்ட ஆரம்பித்ததைத் தொடர்ந்து சுகாதார இலாகா காலதாமதம் செய்யாமல் உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்துவிடுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செயல். முற்றாக அழிக்கப்பட்ட மலேரியா மீண்டும் தலை எடுத்தது எதனால் என்ற கேள்விக்கு, மாலைதீவுகளில் இந்நோய் நிறைய இருப்பதாகவும், அங்கிருந்து இலங்கைக்கு வந்த சிலரே இதை இறக்குமதி செய்தார்கள் என்றும் சுகாதாரப் பகு [illegible]

—வழிப்போக்கன்

# பாரதப் பிரதமர் இந்திரா தாயகம் திரும்பினர்

மாஸ்கோ, ஏப். 3

**இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி தமது வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணத்தை முடித்துக் கொண்டு இன்று தாயகம் திரும்பினர்.**

தமது வெளிநாட்டுப் பிரயாணத்தின் இறுதியில் மாஸ்கோ சென்றுசோவியத் பிரதமர் திரு. கோஸிஜினைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் விமானம் மூலம் புதுடில்லிக்குப் பயணமானார்.

டாஷ்கண்டில் ஸ்ரீமதி இந்திராவின் விமானம் சுமார் 70 நிமிடங்கள் தங்கியிருந்தது. விமானத்துக்குத் தேவையான எண்ணையை நிரப்பிச் செல்வதற்காகவே இங்கு தங்கிநின்றது.

சோவியத் பிரதமர் திரு கோஸிஜினுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் மகிழ்ச்சிகரமான முறையில் நடைபெற்றதாக ஸ்ரீமதி இந்திரா காந்தி தாயகம் திரும்புவதற்குமுன்னதாக மாஸ்கோ விமானநிலையத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்

## மகாநாயகதேரோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவ, முஸ்லிம் சமயத்தவர்கள் வரவேற்பொன்றை அளிப்பர். விமான நிலைய இறங்கு துறையில் வைத்து முதலில் யாழ். மாவட்டஅரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, வலி. வடக்கு காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை, சர்வசமய காங்கிரஸ் பிரதேசக் கிளையின் நான்கு முக்கிய அங்கத்தவர்களாகியோரால் மலர்மாலை அணிவித்து மகாநாயக்க தேரோவரவேற்கப்படுவார்.

இதனையடுத்து சிங்கள மொழி உட்பட நான்கு பாஷைகளிளில் வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்படும். மல்வத்தை பீடாதிபதி தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்து உரைநிகழ்த்துவார். இவ்வரவேற்பில் தமிழ்க் கலாச்சாரத்தில் அமைந்த இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறும். உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் உட்பட தமிழ்ப் பகுதி எம். பி.க்கள் சகலரும் இவ்விழாவில் கலந்து கொள்வர் எனத் தெரிகிறது.

இதனையடுத்து மோட்டார் ஊர்வலமாக இவர் யாழ். மாநகரசபை மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார். நாகவிகாரையில் வைத்து இங்கு வாழும் சிங்களப பொதுமக்களாலும், தமிழ்-பௌத்த சங்கத்தினராலும் வரவேற்கப்படுவார். அன்று காலை யாழ். மாநகரசபை மகாநாயக்க தேரோவுக்குச் சிறப்பாக வரவேற்பு ஒன்றை அளிக்கும். மாலையில் முஸ்லிம் சமூகத்தவரால் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் வரவேற்பொன்று அளிக்கப்படும்.

20ந் தேதி இவர் கீரிமலை புனித ஸ்தலத்திற்கு விஜயஞ்செய்வதுடன் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில், மருதனமடம் கிறிஸ்தவ ஆச்சிரமம், இராமநாதன் கல்லூரி, நல்லூர் கந்தசுவாமிகோயில் போன்ற இடங்களுக்கு விஜயஞ்செய்வார். இங்கெல்லாம் அவ்வப்பகுதி மக்களால் சிறந்த முறையில் வரவேற்கப்படுவார். அன்றைய தினம் மாலையில் சர்வசமய காங்கிரஸ் மகாநாட்டில் பங்கு பற்றுவார்.

21ந் தேதி ஊர்காவற்றுறைத் துறைமுகம் மூலம் நயினாதீவுக்கு விஜயஞ்செய்யும் இவர் ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோயில், ஸ்ரீநாகவிகாரை போன்ற ஸ்தலங்களுக்குச்செல்லுவார். விகாரையில் விசேஷ 'பிரித்' ஓதுதல் வைபவமும், தான நிகழ்ச்சியும் இடம்பெறும். மாலையில் விமானமூலம் கொழும்பு திரும்புவார்.

மகாநாயக்க தேரோவின் விஜயத்துக்கான சகல ஏற்பாடுகளையும் அரசாங்க அதிபர் தலைமையிலான கமிட்டி கவனித்துவருகிறது.

## வீடில்லாப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கிறது. இந்த 170 ஏக்கர் காணியிலும் ஏராள[illegible]ன வீடுகளை வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைத்து வீடில்லாதவர்களுக்கு வழங்குவதெனவும் 15 வருடங்களுக்கு வாடகைப்பணம் செலுத்திவந்தபின் அவர்கள் குடியிருக்கும் வீடு அவர்களுக்கே உரிமையாக்படுமெனவும் தெரியவருகிறது.

கரையூரில் தற்போது வீடமைப்புத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு அவற்றிற்குரிய கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி, கோண்டாவில், நாயன்மார்கட்டு ஆகிய பிரத்தியேக வீடமைப்புத்திட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள்ளும், காங்கேசன்துறை, மயிலிட்டி, காரைநகர், அரியாலை, வல்வெட்டித்துறை முதலான இடங்களில் உள்ள மக்கள் நல்னீரின்றி உவர் நீரையே உபயோகித்து வருவதனால் அப்பகுதிகளில் உடனடியாகக் குழாய் நீர் விநியோகத் திட்டத்தை முதலில் ஆரம்பிக்கவேண்டுமெனவும் பின்னர் மற்றைய இடங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படவேண்டும் என்றும் திரு. பொன்னம்பலம் யோசனை கூறியிருக்கிறார். யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடியவகையில்அரசாங்க இலாகாக்கள், கார்ப்பரேஷன், தனியார் ஸ்தாபனங்களில் படித்த வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடியதான பல யோசனைகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### புளியம்பொக்கணை

## நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவம்

பளை, திங்கள்

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் வருடாந்தப் பொங்கல் விழா இன்று மாலை தொடக்கம் நாளை காலைவரை நடைபெறும்.

கரைச்சிப் பகுதிக்காரியாதிகாரி திரு. எச். ஈ. பிள்ளைநாயகம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இங்குவருவதற்காக இ. போ. ச. விசேஷ பஸ்சேவைகள் ஒழுங்குசெய்துள்ளார். அத்துடன் கிளிநொச்சி உபடிப்போவின் கீழ் இயங்கும் அக்கராயன்குளம், இராமநாதபுரம், பூநகரி, கோயில் வயல் ஆகிய இடங்களிலிருந்து விசேஷ பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் பாதுகாப்பு, சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்முகிலாள்

காற்றுக்கு மத்தியிலே
கடிவாளம் இட்டதன் மேல்
வீற்றிருந்தோம் விமானத்தில்,
வீழ்வோமோ என்றெண்ணி,

ஒடிப்பிடித் தெம்மை
ஒய்யாரப் பவனிவர
பாடியருகு வந்தாள்!
பஞ்சாய்ப் படுத்திருந்தாள்!

கோடியவள் குலத்தோர்
குவலயத்தின் மேற்பரப்பிலே
பாடிவிளை யாடும்
பவளநிறப் பாவையவள்!

வாடியவர் சிந்துகின்ற
கண்ணீர் மழையாகும்
மானிடர்கள் வாழ்வதற்கு
மண்ணுலகில் தேனாகும்.

காற்றோடு சதிராடி
காலின்றி அந்தரத்தில்,
வீற்றிருக்கும் தோகையவள்
விண்மகளாம் வெண்முகிலாள்!

— ஜீவா. நாவுக்கரசன்



சென்னைக்குப் பக்கத்திலுள்ள திருவேற்காட்டிலே ஸ்ரீதேவி உருமாரியம்மன் தேவஸ்தான ஆதரவில் நடைபெறும் ஜீவரத்னம்மாள் உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த சுமார் 250 ஏழை மாணவ மாணவிகளுக்கு தினசரி அன்னமளிப்பு கைங்கரியம் நடக்கிறது. தேவஸ்தானத் தலைவர் தேவி உபாசகர் சுவாமி இராமதாஸ், (இடமிருந்து மூன்றாவது) தருமபுர ஆதீன பிரசாரகர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தம்பிரான், கொடைவள்ளல் முதலியார், கி. வா. ஜ, 'ஈழநாடு' ஆசிரியர் கே. பி. ஹரன் முதலியோர் இக் கைங்கரியத்தைப் பார்வையிடுகின்றனர்.

**கலித்தொகைச் சித்திரம்**

# 'பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு'

— செல்வி க. பூரணம் —

அன்பின்தோழி! பொருள் தேடச்சென்றுள்ள எனது கணவர் கொடியகாட்டினூடாகச் செல்வார். அக் காடுகள் அடிவைக்க முடியாதபடி நெருப்புப்போன்று வெம்மையாக இருக்கும். மரங்கள் பசுமை இன்றிக் கொம்புகள் காய்ந்திருக்கும். சூரியனின் கதிர்கள் மலையின் மேனின்ற மூங்கில்கள், வாடும்படி சுடும். அத்தகு காடும், அருள் மிகுந்த செயல்கள் மிக்குடையதாக இருக்கும். நீர் சொற்பமாகச் சிறு குட்டைகளில் காணப்படும். யானைக்கன்று, தாய் தந்தை அந்நீரைக் குடிக்கவேண்டும் என்பதையும் நினையாமல் நீரைக் கலக்கிவிடும். அக்கலங்கிய நீரை யானையானது முதலில் பிடிக்கு ஊட்டிப்பின் எஞ்சியதையே தானுண்ணும். இக்காட்டில் புறவுகள், தாய் அன்பு கொண்ட மடப்பத்தையுடைய பெடைகள் வெம்மையால் வருந்தும் போது தஞ்சிறகை விரித்து அதன் நிழலாலே அவ் வெம்மையைத் தீர்க்கும். இங்கு கலைமான் இனிய நிழலில்லாதபடியால், வருந்திய தன் இளம் பிணைக்கு பக்கலில் தான் நின்று, தன் நிழலைக் கொடுத்து அதன் உயிரைப் பாதுகாக்கும்.

"இத்தகு அஃறிணை உயிர்களே பெண்ணினத்திற்கு அருள்வழிநின்று அன்புசெய்யும் பாங்கைக்கண்ட தலைவர் என்னை இப்படி ஊண் உறக்கமின்றி வருந்தவிடுவாரோ. நல்ல சகுனத்தின் அறிகுறியாக எனது மையுண்ட இடதுகண் துடிக்கிறது. பல்லி நல்லஇடத்தில் சொல்கிறது. இவை எனது தலைவர் விரைவில் மீண்டுவிடுவார் என்பதை அறிவிக்கும் நற்குறிகளன்றோ" என்று இவ்வாறாகத் தலைவி தனதுயிர்த்தோழிக்கு எடுத்துரைத்து ஆறுதலடைகிறாள். இக்காலத் தோழியர் போல் இன்ப காலங்களில் சேர்ந்து இன்புற்றுவிட்டுத் துன்பம்வரும்போது கைவிட்டுத் தூற்றித் திரிபவள் அல்லள் அத்தோழி. தலைவிக்கு வரும் இன்ப துன்பம் தனக்கு வந்ததுபோல அனுபவிப்பவள் சங்ககாலத் தோழி. அத்தகு தோழியிடம் தான் இதுவரை அனுபவித்த துன்பத்திற்கு விடிவுவரப்போகிறது என மகிழ்கிறாள் தலைவி. இத்தகு அழகிய ஓவியத்தைக் கலித்தொகையில் பாலைபாடிய கடுங்கோ அழகாக வரைந்திருக்கிறார்.

"அரிதாய வறனெய்தி
யருளியோர்க்களித்தலும்
பெரிதாய பகைவென்று
பேணாரைத் தெறுதலும்
புரிமவர் காதலிற்
புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்
வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழா
அய் வலிப்பல்யான்
கோளினி
அடிதாங்கு மளவின்றி
யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழா அய்
காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை
கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங்
களிறெனவு முரைத்
தனரே"

"இன்பத்தி னிகந்தொரீஇ
யிலைதீந்த வுலவையாற்
துன்புறா உந் தகையவே
காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை
யசை இயவருத்தத்தை
மென்சிறகா லாற்றும்
புறவெனவு முரைத்
தனரே;
கன்மிசை வேய்வாடக்
கனைகதிர் தெறுதலாற்
துன்னரூஉத் தகையவே
காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையான்
வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்
தளிக்குங் கலையெனவு
முரைத்தனரே"

எனவாங்கு,

இனநலமுடைய கானஞ்
சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர்
மனைவயிற்
பல்லியும் பாங்கொத்
திசைத்தன
நல்லெழி லுண்கணு
மாடுமா லிடனே.

—11-ம் பாடல் கலித்தொகை.

# சுவாசக் குழாய் ஆஸ்த்துமா

வயதுவந்தவர்கள், குழந்தைகள் இருபாலாருமே ஆஸ்துமா எனப்படும் இளைப்பு நோயினால் துன்பப்படுகிறார்கள். இது ஒரு சுவாச நோய். இதனால் தாக்குண்டவர்கள் மூச்சடைத்து சுவாசம் விடமாட்டாமல் திணறுவார்கள். சில பேருக்கு இவ்வேளையில் இருமலும் காணப்படும். சுவாசக் குழாய் சுருங்கிப்போவதனால்தான் இப்படியான மூச்சுத் திணறுதலுக்கு ஒருவர் ஆளாக நேர்கிறது. சைக்கிள் வண்டிச் சக்கரத்தினுள்ளிருக்கும் காற்றடைத்த டியூப்பில் ஓரிடத்தில் உங்கள் ஒரு கையினால் பொத்திப்பிடித்து அமுக்கினால் அப்பொழுது அந்த இடம் எப்படி நசிந்தும் சுருங்கியும் போகின்றதோ அப்படித்தான் சுவாசக் குழாய் இந்நோயின் பொழுது சுருங்கிக் கிடக்கிறது. இதே வேளையில் சுவாசக் குழாயின் உள்பாகம் தசைநார்க் கொடிகள் புடைத்து அவற்றில் கட்டிபட்ட திரவங்கள் (கபம்) ஒட்டிக் கொண்டிருந்துவிட்டாலோ, நோயாளியின் அவஸ்தை அப்பொழுது இன்னும் மோசமாயிருக்கும். சில பேருக்கு இருமினால் இந்த நெஞ்சுக் கபம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவந்துவிடுகிறது. சுவாசக்குழாய்த் தசைநார்க் கொடிகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்தி நிற்கும் நரம்பானது ஊறுபட நேர்ந்தபோது அதாவது அது சோர்வு, தளர்ச்சியுற்று தொய்வடைந்தபோது இத்தகைய நிலைமாறுதல் சம்பவிக்கிறது. மிக மென்மையானது இந் நரம்பு. தூசு, துகள், புகை மணம், குணம், ஸ்பரிசம் என்பனவற்றுக்கே அது சீறி எழுந்துவிடும் நுண்ணிய இயல்புடையது.

நோயாளிக்குள்ள மனப் பயம் கண்டிப்பாகத் தளர்க்கப்படவேண்டிய ஒன்று. இதனாலும் இந்நோய் உக்கிரமடைவதுண்டு. மனம் பயப்படாமலிருப்பதற்கு இந்நோயின் தன்மை இயல்புகளை நன்குதெரிந்துகொண்டிருப்பது உதவியாக இருக்கும். மனத்திகிலுடன் நோயையும் கூட விரட்டிவிடலாம். பல சமயங்களில் மனப்பயம், கவலைகள் என்பனவுமே இந்நோயைத் தோற்றுவித்து விடுகின்றன.

நோய்கண்டபோது படுக்கையில் எழுந்து உட்கார்ந்துவிடுங்கள். தலையணையைத் தூக்கி முன்னால் போட்டு அதன்மீது முன்சாய்வாகத் தலையை வைத்துக்கொள்ளுங்கள். குளுகோஸ் கலந்து சுடச்சுட அல்லது கொதிக்கக் கொதிக்க வெந்நீர் சிறிது சிறிதாகப் பருகவேண்டும். ஆரஞ்சு ரசமும் பருகலாம்.

அதன்பின் ஆஸ்த்துமா மருந்துகளை அதற்குரிய முறையாக குளிகைகளாகவோ, குடிகலவைகளாகவோ, புகையாகவோ உட்கொள்ளவேண்டியது. வயதுவந்த ஒருவர் எபிட்ரீன் ஹைட்ரோகுளோரைட் 1/4 கிராம் தினமும் படுக்கச் செல்லுமுன் உட்கொள்ளலாம். வளர்ந்தவர்கள் தினமும் போசனத்தின்பின் சுறுமீன் எண்ணை இரண்டுவேளை ஒவ்வோர் கரண்டி அருந்திவருவதும் நல்லது. விட்டமின் 50 மிலிகிராம் குளிகை தினமும் போசனத்தின்பின் நன்மைதரும்.

கல்ஸியம் சிரப் தினமும் மூன்றுவேளை ஒவ்வோர் கரண்டியாக போசனத்தின் முன் உட்கொள்ளலாம். (நீரிழிவு நோயாளர் இதைத் தொடக்கூடாது.)

காலையில்எழுந்தவுடன் முதல் காரியமாக சிறிது வேளை சுவாசப் பயிற்சி செய்யுங்கள்.

உங்கள் மார்பை எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்த்துக்கொள்ளவேண்டும். இரத்தத்தையும் சோதித்துப் பார்த்துக்கொள்ளலாம். காது, மூக்கு, தொண்டை நோய் பரிசோதனை கிளினிக் சென்று உங்கள் நாசி, கண்டம், உள் நாக்கு என்பனவற்றைச் சோதித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்.

டாக்டரைக்கலந்து ஆலோசித்துக்கொண்டபின் நீங்கள் சொந்தத்தில் ஊசியும் மருந்தும் வாங்கிக்கைவசம் வைத்துக்கொண்டு நோயின் குணம் குறிகள் காணும்போதே பிரயோகித்து நோயை அதன் ஆரம்பத்தில் தடுத்துவிடுவதோடு வைத்திய 'பில்' அதிகமாகாமலும் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆஸ்த்துமாவின் தாக்குதலுக்கு உங்கள் உடல் ஆரோக்கியத்தை எப்பெழுதும் செம்மைப்படுத்தி வைத்துக் கொள்வதுதான் சிறந்த பாதுகாப்பு அரணாகும்.

இருமல், தடிமன் என்பன மற்றவர்களிடமிருந்து தொற்றிக் கொள்ளாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள். சிகரட் அதிகம் புகைக்காதீர்கள். உணவு—போதைவஸ்துக்கள்கூடத்தான் எப்பொழுதும் மிதமாக இருக்கவேண்டும். வீணாகமனதுக்கும் மூளைக்கும் வேலைகொடுத்து உடலை அலட்டிக் கொள்ளாதீர்கள்.

**ஈழநாடு வாரமலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவை நாடகம்

# சொக்கரட்டிஸ் - 1966

### யோ. துரைநாயகம்

(கோவில் வீதியில் ஒரு நாள்)

சொக்கரட்டீஸ்:- சொக்கனே நீ அறிவாய், சொக்கனே நீ அறிவாய். யாழ்ப்பாணத்தின் கீர்த்தி, உலகமறியாததல்ல; அதற்காக இங்கே வீசும் கெட்ட நாற்றத்தை மறைத்திட முயல்வது சுவரில் உள்ள ஓட்டைக்கு சிமென்ற் தடவும் வேலையைப்போன்றது. - அதனுற்தான் தோழர்களே ருசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் என்று தலைப்பாகை கழற்றி உங்களை அழைக்கிறேன்.

சொக்கனே நீ அறிவாய். இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காக உங்களையெல்லாம் அழைக்கிறேன். ருசிருசி உலகத்தின் எந்த முடுக்குகளிலிருந்தாலும் அதைத்தேடி ருசிப்பதற்காக உங்களை அழைக்கிறேன். சொக்கனையே நீ அறிவாய். இந்த உபதேசத்தின் உண்மையை உணர்வதற்காகத்தான் என் உயிரினுமினியவர்களே உங்களையெல்லாம் அழைக்கிறேன்.

ஏற்றமிகு யாழ்ப்பாண நகர வாலிபர்களே! நாற்றமெடுத்த சொக்கன் கடைக்கு நறுமணம் ஊட்ட இதோ சொக்கரட்டீஸ் அழைக்கிறேன். ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள். சுண்டல்வேகாது சூகியன் சுவைக்கு வராவிட்டால் அரைத்த உழுந்தும், கான்பம்ஸ் போன்றவாய்ப்பனும், பொங்கிய மோதகமும் மாத்திரம் போதாதீரர்களே! இதோ நாவுக்கு ருசிதரும் வாளாயுதத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். ருசிவாயுதம் ருசிவாயுதம்; ஹோட்டல்களின் அணையாத ஜோதி.

சொக்கன் கடை மனேஜர்:- ருசிவாயுதமாம், அனைத்துலகும் ருசிபார்க்கும் அஸ்திரமாம். குமுறும் குக்கர்... கொந்தளிக்கும் தேங்காய் எண்ணெய் இவைகளை விடப் பயங்கரமானவன் சொக்கரட்டீஸ். அவன் தரும் ருசிவாயுதம் யாழ்ப்பாணத்திலே தலைதூக்குமானுல் நாம் தலைகாட்டவே முடியாது. சபையர் என்னசொல்கிறீர்.

சபையர்:- மனேஜர், நாம் கீறிய கோட்டைத் தாண்டாத யாழ்ப்பாண மக்களுக்கு அந்தக் கரட்டீஸ் ருசி கொடுக்குமுன் அவனை நாம் அழித்துவிடவேண்டும்.

மனேஜர்:- ஆம்; அதுதான் சரி. சொக்கரட்டீஸ் நீர் கைதுசெய்யப்படுகிறீர்.

('உம்' என்று வீரர்களிடம் உத்தரவிடுகிருர்)

(நீதி மன்றம்)

சபையர்:- சொக்கரட்டீஸ் நாட்டில் நடமாடக்கூடாத ஒரு ஆத்மா. சுகாதாரத்தின் சின்னமாம் சொக்கன் கடையை குறைகூறும் அந்த ஐந்துஉடல் முழுவதும் பொலிடோல் கொண்டது. கேட்டோர் வினிர் உதிரும்சொற்களால், பார்ப்போர் பரவசமடையும் வார்த்தைகளால் கேடு மலியும் எண்ணங்களை அள்ளி வழங்கிச் சொக்கன் கடைக்கு விரோதமாக இளைஞர்களைத் தூண்டிவிடும் இழிகுண வண்டிக்கிழவன்.

(சொக்கரட்டீஸ் சிரிக்கிருர்)

நீதிபதி:- என்ன சிரிப்பு? என்ன காரணம்?

சொக்கரட்டீஸ்:- ஒன்றுமில்லைத்தலைவா. ஆத்திரத்திலே சபையர் தன்னை மறந்து என்னைப் பார்த்து வண்டிக் கிழவன் என்று கேலி புரிகிருர். அதை நினைத்தேன்- சிரித்தேன். கடம் அடிக்கும் பானைபோல் வளைந்துவிட்ட வண்டி எனக்கும் - சபையருக்குமில்லையா சபையோர்களே? என்ன சபையர் உண்மைதானே?

மனேஜர்:- சொக்கரட்டீஸ், வழக்கும் விசாரணையும் உங்கள் இருவரின் வண்டியைப்பற்றியல்ல. அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சொக்கரட்டீஸ்: மிகவும் நன்றி மனேஜர், மிகவும் நன்றி. ஆனுல் ஒன்று, மனேஜர்வாள், எண்சாண் உடம்பிற்கு வயிறே பிரதானம்போல் இந்த வழக்கிற்கும் வயிறுதான் பிரதானம். என்வயிற்றிலே இருந்து ஆவி விட்டுக் கிளம்பும்பசி, அதை அழிக்க மனேஜரான உன் வயிற்றில் இருந்து புறப்படும் நாற்றமான புளியேப்பங்கள்; நோஞ்சல்வாதி சபையரின் வயிற்றிலிருந்து ஆயிரம் மைல் வேகத்தில் எழும் ஒங்காளம்-இந்த மூன்றுக்குமிடையே நடக்கும் மும்முனைப்போராட்டம் அதன் விளைவுதான் மனேஜர் இந்த வழக்கு.

மனேஜர்: பார்த்தீர்களா? எனது தோசையையும், வடையையும் அவமதிக்கிருன். இப்படித்தான் அங்கு வரும் இளைஞர்களையும் கெடுத்தான்.

சொக்கரட்டீஸ்:- இளைஞர்களை ஒரு வண்டியுள்ள கிழவன் எப்படியப்பா கெடுக்க முடியும். நானென்ன வாலிபரை சுழட்டித்திரியும் யங்கி மாதா அல்லது பருவ விருந்தளிக்க போனிரெயில் போட்ட மங்கையா?

மனேஜர்:- மாதரிடமில்லாத செண்டு வாசனை- வாலிபரை சுழட்டித்திரியும் வனிதயரும் பெற்றிடாத கடைக்கண் பார்வை-கண் சிமிட்டு, ஹோட்டல் ரேஸ்- தாமோதரவிலாஸ் நெய்த்தோசை இப்படிப் பல திரவியங்கள் உள்ளவர் நீர்.

சொக்கரட்டீஸ்:- வியாபாரி என்றுகூடச் சொல்வாய்... அன்புள்ள இளைஞனே யாழ்நகரிலே நான் ஒருவன் தான் இளைஞர்களைக்கெடுக்கிறேன். அப்படித்தானே?

மனேஜர்:- ஆமாம்.

சொக்கரட்டீஸ்:- நீ கெடுக்கவில்லை.

மனேஜர்:- இல்லை.

சொக்கரட்டீஸ்:- சபையர்...?

மனேஜர்:- இல்லை.

சொக்கரட்டீஸ்:- வனிதாமணிகள்?

மனேஜர்:- இல்லை.

சொக்கரட்டீஸ்:- யாருமே இளைஞர்களைக் கெடுக்கவில்லை. எல்லோரும் இளைஞர்களுக்கு நல்ல பலகாரங்கள் கொடுக்கிருர்கள், என்னைத்தவிர......? அப்படித்தானே?

மனேஜர்:- ஆமாம்... ... ஆமாம்.

சொக்கரட்டீஸ்:- இத்தனை பேரும், ஏன் யாழ் நகரமே இளைஞர்களைத் திருத்தும் போது நான் ஒருவன் எப்படியப்பா அவர்களுடைய ருசியை மாற்றமுடியும்,

மனேஜர்:- ஒரு வாளி தண்ணிக்கு ஒரு துளி பொலிடோல்.

சொக்கரட்டீஸ்:- ஏன் இப்படியும்சொல்லலாமே, அமெரிக்கன் மோஸ்தர் வீட்டுக்கு ஒரு மெர்க்குரி லைற். ஏன் மனேஜர் திகைக்கிருய்?

சபையோர்களே, வாலிபர்கள் என்னைச் சுற்றி இலையான்களைப்போல் பறந்து திரியக் காரணம் என்னுடைய வார்த்தை அலங்காரமல்ல, உளுந்து குறையாத தோசை - பிழிந்த தேங்காய்ப்பூபோடாத மோதகங்கள் - இந்தநகருக்குத்தேவையான அமெரிக்கன் மாக்கலப்பற்ற மோர், திறமான தோசையால் பதமான ரேஸ்களினுல் பிஞ்சு உள்ளங்களை மயக்குகிறேன் என்கிருர்களே, அவர்களைக் கேட்கிறேன். அந்த செய்கைமுறை எனக்கு மட்டும் சொந்தமல்லவே. அவர்கள் அதைச் செய்யக்கூடாது என்றுநாம் தடைபோட்டது கிடையாதே செய்துபார்க்கட்டும்; அவர்களும் பாவம், உம்... செய்யத்தெரியாதவர்கள்.

நீதிபதி:- சொக்கரட்டீஸ் பேச்சை நிறுத்தும்; விளக்கம் தேவையில்லை. இந்த நீதிமன்றத்தின் அதிகப்படியான உறுப்பினர்களின் வாக்குகளின்படி நீர் "பொலிடோல்" சாப்பிட்டு மரணதண்டனைக்கு ஆளாக வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகின்றது.

சொக்கரட்டீஸ்:- நமது நீதிமன்றம் பெருமைக்குரிய தீர்ப்பை அளித்துவிட்டு மௌனப்புன்னகை புரிகிறது...நாட்டில் நீண்ட நாட்களாகப் பரவிவந்த வாந்திபேதிகளைத் தடுக்கத்தான் முயற்சித்தேன். குறுகிய காலத்தில் எழுபது வயதுக்குமேல் முதல்முதலாகக் குற்றவாளிக் கூண்டிலே நிற்கும் இந்தக்கிழவனுக்குத் தந்த பரிசு - சொக்கரட்டீஸ் ருசி பார்ப்பவன்- மோதகத்திலும்வாய்ப்பனிலும் என்ன இருக்கிறதென்று தேடிப் பார்க்கும் ஆராய்ச்சியாளன்-புளிஞ்ச தேங்காய்ப் பூவை மோதகத்திற்கு போடவிடாத நாவுருசியுள்ளவன்... மரண தண்டனை.

கவலையில்லை. ரசிகர்களின் திரையுலகக்கனவுலகக் கன்னி சரோஜாதேவியால் கூட கெடுக்கமுடியாத தூக்கத்தைப் போன்றது மரணம் என்றுல் அந்த மரணத்துக்காக நாம் ஏன் கவலைப் படவேண்டும். மரணத்துக் [illegible] மறு உலகம் உண்டென்றுல் அந்த உலகத்திலே, எனக்கு முன்னே குடியேறியிருக்கும் தாமிரவருணி தாபகர் தங்கவேலு, ஜனதா ஹோட்டல் ரேஸ் தயாரிப்பாளர் ஜாம்பவான் போன்ற அரும்பெரும் உணவுக் கலைஞர்களைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றவனுவேன்... எனக்குத் தண்டனையளித்த நண்பர்களே, நீங்கள் எதிர்காலத்துக்குப் பதில்சொல்லியே தீரவேண்டும். எதிர்காலக் கலைஞர்கள் சும்மா கண்சுழற்றித் திரியமாட்டார்கள். என்னைப்போல் அவ்வளவு சுலபமாக ஆராய்ச்சி செய்யமாட்டார்கள். அவர்களது ஆராய்ச்சிமுட்டையில் மயிர் பிடுங்கி பேன்பார்த்து ஈர் குத்தும் அளவுக்கு இருக்கும். விஞ்ஞான முறையில் ஆராய்ச்சிகள் நடக்கும். அவர்களை ஆராய்ச்சி வழியில் கட்டிக்காத்துவரும் நான் போன பிறகு புறப்படப்போகும் விஞ்ஞான ஆராய்ச்சி முன், உங்கள் மோதகங்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டு உங்களுடைய புளிஞ்ச தேங்காய்ப்பூபோட்டமோதகங்களைக்கண்டு உலகம்சிரிக்கப் போகிறது. சரித்திரம் திரும்பும். அதேபோல் மனிதனுக்கு எழுபத்தியெட்டுப் பிறப்பு உண்மையென்றுல் அடுத்த பிறப்பிலும் இதே குற்றத்தைச் செய்தே தீருவேன். என் மெஷின் போன்ற கை ஒவ்வொன்றும் ருசியான உணவுப்பண்டத்தை எங்கும், எப்பொழுதும் எந்த இடத்திலும் செய்து கொண்டே இருக்கும்.

(சிறையில்)

சொக்கரட்டீஸ்;- அன்புள்ளவளே, பார்த்தாயா? மோதகத்தில் பிழியாத தேங்காய்ப்பூவைப் போட்டதினுல் காலத்தைக் கழிக்கிறேன், ரேஸ் செய்து தொல்லைப்படுகிறேன் என்றெல்லாம் கோபித்துக் கொண்டாயே. இப்போது பார் உன் கணவன் அகிலம் புகழும் நாவுருசி கொண்டவனுய் - யாழ்நகர் புகழும் தோசைக்காரனுய் மாறிவிட்டான். சுந்தரவல்லி நீ பாக்கியசாலிதான். பிழிஞ்ச தேங்காய்ப்பூ, அமெரிக்கன் மா தோசை அத்தனையும் எதிர்த்து நின்று யாருக்கும் பணியாத பெருமையோடு விழிகளை கடைசியாக மூடப்போகும் கர்மவீரனுக்கு நீ மனைவி. குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். அவர்கள் பெரியவர்களாக மாறி, சுழன்றுதிரிந்து காதல் நிருபம் தீட்டி வீதிகளில் இருக்கும் சில்லறைக் கடைகளுக்கு சாப்பிடப் போனுல் நான் உங்களைத் திருத்த முயன்றதுபோல் நீங்களும் அவர்களைத்திருத்த முயலுங்கள்... காலம் அகாலமாகிறது. காவலாளிகள் கோவிப்பர். கிறிஸ்தோப்பர் இவர்களை அனுப்பிவை.

(அவள்போன பிறகு)

கிறிஸ்தோப்பர், உனக்குத் தெரியுமல்லவா முப்பது நாள் சிறைவாசம் இன்றோடு முடிந்து, நீதிமன்றத்தின் உத்தரவுப்படி பொலிடோல் குடித்துச் சாகவேண்டியநன்னுள் இன்றுதான்.

கிறிஸ்தோப்பர்:- அருமை நண்பா, எலெட் பினிஷ் சாறி மடிப்புகுலைந்தாலும் மனங்குலையாத மாவீரனே, உன் மின்சார ஒளிவீசும் சோடிக்கண்களை, மோதகம் போன்றகுவிந்தபுருவங்களை, தொகைதொகையாய் சனம் திரண்டாலும் சலிக்காது ரேஸ் செய்து ருசித் தத்துவம்பேசும் உன் உணர்ச்சிமிக்க உதடுகளை இனி ஒரு சொக்கரட்டீஸ் உருவத்திலே நான் காணப்போகிறேனே?

(காவலன் "பொலிடோல்" கிண்ணத்துடன் வருகிறுன்.)

சொக்கரட்டீஸ்:- அழாதே நண்பா...? அதோ வந்துவிட்டது பாயாசம். சிறைக்காவலா, இதைஎன்னசெய்ய வேண்டும். முறைகளைச் சொல்.

காவலாளி:- பெரியவரே, பொலிடோலை பாயாசம் குடிப்பதுபோல் முழுவதையும் குடிக்கவேணும். பிறகு இங்குமங்கும் நடந்துகொண்டே இருக்கவேண்டும். கால்கள் செயலற்றுப் போகும் வரையில் அப்படி நடக்கவேண்டும்-பிறகு உட்காரலாம். கொஞ்சம்கொஞ்சமாக உடம்பு "பிறிஜுக்குள்" இருப்பதுபோலவரும்- பிறகு படுத்து விட்டால்...

சொக்கரட்டீஸ்:- ஆனந்தமான நித்திரை, சிறைக்காவலா கொடு இப்படி... (பொலிடோல் கிண்ணத்தை வாங்குகிருர்)

கிறிஸ்தோப்பர்:- நண்பா சிறிது நேரம் பொறுத்துக் கூடச்சாப்பிடலாம்...சிறைச்சாலையில் அதற்கு அனுமதி உண்டு.

சொக்கரட்டீஸ்:- கிறிஸ்தோ... உனக்கு மிக மிக அற்ப ஆசை. விஷத்தை இன்னும் இரண்டு நாழிகை கழித்துச் சாப்பிடுவதாக வைத்துக்கொள். அதற்குள் திடீரென்றுவண்டிவெடித்து நான் இறந்துவிட்டால் நம்மூர் நீதிமன்றத்தின் தண்டனையை எப்படி நிறைவேற்றுவது? புதிய சொக்கரட்டீசாபிறந்துவருவான்...? கிறிஸ்தோ, இந்தப் பொலிடோல் அழிக்கப்போவது என்னையல்ல, என் உடலை...

கிறிஸ்தோப்பர்:- யாழ்நகரின் சுகாதாரத் தந்தையே, எங்கள் ருசியுலகப் பிதாவே, யாழ்நகர் பெரியாரே, எம்மையும் உம்மையும் இந்தப் பொலிடோல் பிரிக்கப் போகிறதா? அய்யகோ! நினைக்கவே சொக் அடிக்கிறதே, நண்பா. கடைசியாக எனக்கு ஏதாவது சொல்லு...

சொக்கரட்டீஸ்:- புதிதாக என்ன சொல்லப்போகிறேன்? உன்னையே நீ அறிந்துகொள். எதையும் எப்படி எங்கே எவ்விதம் செய்தார்கள் என்று கேள் - அப்படிக் கேட்டதாற்தான் எண்ணெய் வடிக்கும் இந்த வணிகன் ருசியுலக வணிகனுக மாறினுன். அவர் செய்தார்- இவர் சொன்னுர், என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம். எவர் செய்த மோதகமானுலும் அதனை உந்தன்மேலான மூளையால் ஆராய்ச்சி பண்ணிப்பார். இதைத்தான் உனக்கும் இந்த உலகத்துக்கும் சொல்ல விரும்புகிறேன்.

கிறிஸ்தோப்பர்:- சொக்கரட்டீஸ், உனது சவத்தை எப்படி அடக்கம் செய்ய வேண்டும்.

சொக்கரட்டீஸ்:- புதைப்பதாயிருந்தால் இந்த நாட்டில் குவியும் புளிஞ்ச தேங்காய்ப்பூவையும் என்னேடு போட்டுப் புதைத்து மண்ணுக்கிவிடு. எரிப்பதாயிருந்தால் ஏமாற்றுக்காரர்களின் அமெரிக்கன்மாத் தோசைகளையும் என்னேடு சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கி கீரிமலையில் கரைத்துவிடு. விடைகொடு, பொலிடோல் அழைக்கிறது. என் தேசத்துப் பெருமக்களிடம் விடைபெற்றுக் கொள்ளப்போகிறேன்.

எனதருமை யாழநகாப பெருமக்களே! இதோ சொக்கரட்டீஸ் சந்தோஷமாய் சாகப்போகிறேன். எங்கள் நீதிமன்றம் எண்ணுக் கணக்கிலே அவன் மீது குற்றங்களைக் கொட்டி, யக்கு நிறையப் பொலிடோலையும் கொடுத்து 'பருகடா இந்த உயிர் பருகும் பிளேன்ரீயை' என்று கட்டளையிட்டிருக்கிறது.

(III-ம் பக்கம் பார்க்க)

## தவயோகி யோக சுவாமி

--மு. க. சூரியன்--

அருள்பொழியும் நல்விழிகள்; ஆனதோர் உள்ளம்;
அருட்சுடரை ஆர்க்கும் அருணன்—இருள்கடிந்த
மெய்ஞ்ஞான யோகரையாம் மாண்புடனே மேதினியில்
எஞ்ஞான்றும் எண்ணுவமே இங்கு

மெஞ்ஞான நற்சோதி மேவும் தவயோகி
அஞ்ஞானம் போக்கும் அருட்சோதி—இஞ்ஞாலம்
சூழ்ந்த இருள்போக்கித் தூய பணியாற்றி
வாழ்ந்ததவ யோகரையே வாழ்த்து.

தன்னிக ரற்ற வீழத்
தண்வளம் மலியும் தூய
பொன்னக ரென்று போற்றும்
பொருந்துயாழ்ப் பாண நாட்டில்
துன்னிய நற்கொ ழும்புத்
துறையெனும் பதியில் வாழ்ந்து
மின்னிய யோகர் சுவாமி
விரிபுகழ் என்றும் வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விஞ்ஞானக் கதை

ஆண்டவனின் ஊழிக் கூத்தைப்பற்றிக் கேட்டிருக்கின்ருேம், கண்டதில்லை. ஆண்டவன் சுடலையாண்டியாகமாறி ஆடத்தலைப்பட்டால் உலகமே அழிந்து போய்விடுமாம். பின் உயிர்கள் எம்மாத்திரம்? ஆனல் விஞ்ஞானிகளின் கூத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்ருேம், கண்டுமிருக்கின்ருேம். ஒருவனின் உயிரைக் குடிக்கத் துப்பாக்கியிலிருந்து புறப்படும் ஒரு சிறு ரவை போதுமே. ஒரு குண்டு பலரின் உயிரையும் உடலையும் பதம்பார்த்துவிடும். அணுக்குண்டோ.........அப்பப்பா...... சொல்லவும் அச்சமாயிருக்கின்றது. இன்னும் விஞ்ஞானிகளின் பலபடைப்புக்கள் அவர்தம் மேதாவிலாசத்துக்குச் சான்று கூறும். இறைவனைப்போல விஞ்ஞானிகளும் கூத்துமிதிக்கத் தொடங்கினல் உலகம் என்னகுமோ? எண்ணிப் பார்க்கவும் முடியாத அளவுக்கு அச்சம் மிகுகின்றது. அதிலும் அவர்கள் தாளம் தவறினல் ஏற்படுவது பெருநஷ்டம். உலகின் கண்ணுள்ள எல்லா விஞ்ஞானிகளும் சேர்ந்து கூத்து மிதித்தால் ......மிதிப்பதில் தாளம் தவறினல்......?

இன்று பலநாட்டினரதும், பல சீவராசிகளினதும் தலைவிதியை விஞ்ஞானிகள் நிர்ணயிக்கின்ருர்கள்; னக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தின் வாழ்வில் விதி விளையாடவில்லை, விஞ்ஞானம் விளையாடிற்று. அதனல் அக்குடும்பத்தவர்கள் பட்ட, கஷ்டநஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அவர்கள் கதை ஒரு பெருங்கதை; சோகம் நிறைந்த நெடுங்கதை. அவர்களின் வாழ்க்கைப் பாதையில் சில ஏடுகளைப் புரட்டிப்பார்ப்போம்.

கடையிலிருந்துவந்த கறிச்சரக்குப் பொட்டலத்தை அவிழ்த்துக்கொண்டிருந்த கமலாவுக்கு அப்பழைய தினத்தாளிலிருந்த ஒரு தலையங்கம் கண்ணில் பட்டது. தலையங்கத்தைப் பார்த்தவள் அச்செய்திக் குறிப்பையும் நோட்டமிட்டாள். அது அவள் மனத்தைக் குழப்பியது. குழம்பிய மனத்துடன் ''இஞ்சாருங்கோ, இதைப் பாருங்கோ'' என்று கணவனின் உதவியை நாடினள், விளக்கம் தேடி.

பத்திரிகையைப் புரட்டிய சோமு ''கமலா, உனக்கிந்தப் பொட்டலங்கள் கட்டி வருகின்ற பேப்பர் துண்டுகளை வாசிக்கும் புத்தி போகாதுபோலும். அன்றாடம் வருகின்ற பத்திரிகைகளை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாய். என்ன புதினம், ஏது செய்தி என்ற கவலையே உனக்கில்லை. ஆனல் இந்தப் பழங் குப்பைகளை ஒரு எழுத்து விடாமற் படிப்பாய்'' என்று செல்லமாகக் கடிந்தான்.

''என்ன செய்வது, என் புத்தி இப்படித்தான். நீங்கள் உந்தப் பேப்பரைப் பாருங்கோவன்'' என்று முடுக்கினள் கணவனை.

''இதென்ன, இரண்டு வருடங்களுக்கு முந்திய பேப்பராச்சே! இதிலென்ன புதிய புதினம் இருக்கப்போகின்றது?'' என்றவன், செய்தியைப் படித்தான்.

''விஞ்ஞானத்தால் ஏற்பட்ட விபரீதம்''. ''அண்மையில் பசுபிக் மகாசமுத்திரத்தில் அமெரிக்கர்களால் வெடிக்கப்பட்ட அணுக்குண்டுகளிலிருந்து கிளம்பிய கதிரியக்க அலைகளால் தாக்குண்ட மீன்களைப் புசித்த பல யப்பானியர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். கர்ப்பவதிகளும் தாக்குண்டனர். அவர்களின் கருப்பையில் வளரும் சிசுவுக்கு ஏதும் அபவாதம் ஏற்படுமோவென்று அச்சம் எழுகின்றது. யப்பானிய விஞ்ஞானிகள் இவர்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளையும்......, அதற்குமேல் புதினச்செய்தி கிழிந்து போயிருந்தது.

''இது பழைய விஷயமாச்சே. இதிலென்ன புதுமையைக் கண்டுவிட்டாய் நீ'' என்ருன் சோமு.

''மீன் சாப்பிடுவதே ஆபத்துப்போலும். இனிமேல் நாங்கள் மீன் சாப்பிடாமல் விட்டாலென்ன?''

''பேச்சி, எங்கோ நடந்த விஷயத்துக்காக இங்கே நாங்கள் மீன் சாப்பிடாமல் விடவேண்டுமா?

## அழிவுப் பாதையில்—

அதிலும் இதுஎப்பொழுதோ நடந்த விஷயம். இந்த ஈராண்டு காலமாகச் சாப்பிட்டுக்கொண்டுதானே வருகின்ருேம். ஏதும் நடக்கவில்லையே. இன்றைக்குப் புதினத்தை அறிந்துவிட்டு, இதற்குப்போய் இவ்வளவு கிலேசப்படுகின்ருயே, போ. போய் இன்றைக்கு இறாலும் நண்டும் வாங்கி வந்திருக்கிறேன். ஒன்றைப்பொரி, மற்றதைக் குழம்புவை'' சொல்லிக்கொண்டே அன்றைய புதினத்தாளில் தனது முகத்தை மறைத்தான் சோமு.

''இல்லை, வந்து சீனர்களும் வெடிக்கின்ருர்களாம், இந்தோனேசியர்களும் வெடிக்கக்கூடுமாம். வேறு யார்யாரெல்லாம், எங்கெங்கெல்லாம் வெடிக்கின்ருர்களோ யார் கண்டது?''

''ஏதாவது சீனவெடியாயிருக்கும். நீ போய் உன் வேலையைக் கவனி.''

''இல்லை, எதற்கும்.''

''எதற்கும்?''

''நான் இப்பொழுது இருக்கிற நிலையில்...''

''நிலையில்?''

''நான் இரண்டு மாதமாக...''

''மாதமாக...? ஓ... அதுவா சங்கதி. நீ இதை இவ்வளவு நாட்களாக எனக்குச் சொல்லவில்லையே கள்ளி. கொண்டாடவேண்டிய விச

— "குகன்" —

யமாச்சே. தெரிந்திருந்தால் சுருவும் இறைச்சியும் வாங்கிவந்திருப்பேனே! ஒரு விருந்தேவைச்சிருக்கலாமே! இந்த நேரத்தில் தேவையில்லாததை எல்லாம் நினைத்துக் கலவரப்படுகிருயே! சரி உனக்கு என்ன விருப்பம் சொல்லு. சட்டுப்புட்டென்று உனதுவிருப்பத்தை முடித்து வைக்கின்றேன்'' நாற்காலியிலிருந்து எழுந்துகுதித்தான் சோமு.

ஏதோ அப்போதைக்கு ஆறுதல் கண்டவளாக, ஆயினும் பூரண ஆறுதல் காணுதவளாகக் கமலாவும் சமையலறை நோக்கிச் சென்ருள்.

மூன்று வருடங்களுக்குப் பின் கமலா தனது இரண்டாவது பிரசவத்துக்காக மருத்துவமனையில் தங்கியிருந்தாள். மூத்தவன் இரண்டு வயதிலேயே ஆறு வயதுக் குழந்தையைப் போலப் பெரியவனக யாவரும் பொருமைப்படுமளவிற்கு வளர்ந்திருந்தான். இரண்டாவது பிரசவமும் சுகமாக முடிந்தது. மீண்டும் தங்கவிக்கிரகமென ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் கமலா.

ஆறுவருடங்கள் உருண்டுவிட்டன. கமலாவின் மூத்தவன் ஏதோ இராட்சதப் பிறவியைப்போலக் கோரமாக வளர்ந்திருந்தான். ஆனல் அவன் மூளையின் வளர்ச்சியோ இரண்டுவயதுக் குழந்தைக்குரிய வளர்ச்சிகூட அடையவில்லை. இளையவனே சித்திரக்குள்ளனக, வளராமலே, இருந்தான். பாவம், கமலாவின் இரு குழந்தைகளும் சாதாரணக் குழந்தைகளல்ல-கோரப் பிறவிகள். கமலா தம்பதிகள் போகாத இடமில்லை, பார்க்காத டாக்டரில்லை, பலன் பூச்சியம்தான். யாரோ 'ஸ்பெசலிஸ்டு' வந்திருப்பதை அறிந்து அவரின் உதவியை நாடினர்கள். அவர் இரு குழந்தைகளையும் நன்கு பரிசோதித்துப் பார்த்தார். அவருக்கும் ஒன்றும் புலப்படவில்லை. அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. கமலாவும் சோமுவும் நம்பிக்கையையே இழந்துவிட்டார்கள்.

'ஸ்பெசலிஸ்ட் டாக்டர் சோமுவைத் தனியே அழைத்து, ''ஐயா உங்கள் குழந்தைகளின் இயற்கைக்கு மாருன வளர்ச்சிக்குக் காரணம் என்னவென்றே எனக்குப் புரியவில்லை. என் சோதனைகளில் ஒன்றும்புலப்படவில்லை. இந்த மாதிரியான வளர்ச்சிக்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் சில காரணங்களைப் பரிசோதனைகள் மூலம் அறிந்து கொள்ளலாம், ஆனல் உங்கள் பிள்ளைகளின் விடயத்தில் எனக்கென்ன வோ ஏமாற்றம்தான். எமது மேல் அண்ணத்துக்குமேல் (சொல்லிக்கொண்டே வாயைத் திறந்து வாய்க் குழியின் முகட்டைத்தொட்டுக் காண்பித்தார்) மூளைக்குக் கீழே ஒரு காணில்சுரப்பியிருக்கின்றது. அதை அமுதசுரப்பி அல்லது கபச்சுரப்பி என்று அழைப்பர். இதுநன்ருகத் தொழிற்படாவிட்டால் அவரின் வளர்ச்சி பாதிக்கப்படும். இராட்சதர்களும், சித்திரக் குள்ளர்களும் தோன்றுவார்கள். எமது குரல்வளைக்குக் கீழும் ஒரு சுரப்பியுண்டு. கேடயப் போலிச்சுரப்பி என்று பெயர். இது நன்ருகத் தொழிற் படாவிட்டாலும் ஒருவரின்வளர்ச்சி பாதிக்கப்படும். இதற்குக்கீழே, 'தைமஸ்' என்ற கழுத்துக் கீழ்ச் சுரப்பி உண்டு. இதுவும், ஒருவருக்கு 25 வயது வரும்வரைக்கும் அவரின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதாகக் கருதப்படுகின்றது. மேலும், ஒருவரின் பரம்பரையில் இராட்சதர்களும் சித்திரக்குள்ளர்களும் தோன்றியிருந்தால், அவர்கள் மீண்டும்தோன்ற இடமுண்டு. தகப்பனின் விதையையோ, அன்றித் தாயின் சூலகத்தையோ கதிரியக்க அலைகள் போன்ற சக்திகள் தாக்கி அதன் பயனுகநிறவுருக்களும், சந்ததிச் சுவடுகளும் தாக்குண்டு, அதன் காரணமாகப்பல விபரீதத் தோற்றங்கள் ஏற்பட இடமுண்டு. அன்றியும், கரு கருப்பையில் இருந்த காலத்து கதிரியக்க அலைகளால் தாக்குண்டு அல்லது கதிரியக்க அலைகளால் தாக்குண்ட உணவைத்தாய் உண்டதன் பயனுகத் தாக்குண்டு, அதன் காரணமாகப் பாதிக்கப்படுவதுமுண்டு. தாய்க்கோ அல்லது தகப்பனுக்கோ மேகநோய் (சிபிலிசு) வந்திருந்தால், அது மாறிய பின்னும், அதன் தாக்கத்தால் விந்துகளும் முட்டைகளும் பாதிக்கப்பட்டிருப்பதால், பிறக்கும் குழந்தைகள் இயற்கைத் தோற்றம் உள்ளவர்களாக இல்லாது, மாறுபட்டிருப்பதுமுண்டு. இதையெல்லாம் உங்களிடம் சொல்லிப்பயனென்ன? உங்கள் குழந்தைகளின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்த என்னுல் முடியவில்லையே! எதற்கும் ... உங்களுக்குப் பிறந்த இரு குழந்தைகளும் இயற்கைக்கு மாருக இருக்கின்றபடியால் உங்கள்நன்மையைக் கருதித்தான் சொல்லுகின்றேன்... நீங்கள்...இதை எப்படிச் சொல்லுவதென்றே தெரியவில்லை... நாட்டுநன்மையைக் கருதி நான் சொல்லப் போவது உங்களுக்கு எரிச்சலை ஊட்டலாம், ஆயினும் விஞ்ஞான உண்மைகளை முடிமறைப்பது சரியல்ல, அதனல் பச்சையாகவே சொல்லிவிடுகின்றேன் ... ... நீங்கள் இனி... உங்களுக்கு இனிமேல் குழந்தைகள் பிறக்காமற்பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று மென்று விழுங்கியபடியே எங்கோ பார்த்துக்கொண்டு சொன்ஞர்.

சோமுவுக்கு வெந்தபுண்ணில் வேலைப்பாய்ச்சியது போலிருந்தது. கமலா, டாக்டர் என்னசொன்ஞர் என்று வினவினுல் அவளுக்குஎதைச் சொல்வது. எதைச்சொல்லாமல்விடுவது. அவர்சொன்னதுமுழுவதையும் அவளுக்கும் சொல்லலாமா? அதை எப்படி அவளுக்குச்சொல்லுவது? சோமுவால் மெல்லவும் முடியவில்லை, முனகவும் முடியவில்லை. விசரன் பயித்தியக்காரனைப்போல விறைத்த பார்வையுடன் வெளியே நடந்தான்.

நாட்கள், மாதங்களாக, வருடங்களாக ஓடிக்கொண்டேயிருந்தன. மற்றவர்களுக்கு எப்படியிருந்தாலும் பெற்றவர்களுக்குப் பிள்ளைகள் பிள்ளைகள்தானே. பிள்ளைகளுக்கு ஒரு குறையும் நேராதுஇருவரும் கவனித்து வந்தார்கள். கமலா கடவுள் மேலே பாரத்தைப் போட்டுக் கோவிலே தஞ்சமெனகிடந்தாள். கடவுளால் என்னசெய்யமுடியும்? மனிதன் தன் விரல் வீக்கத்தை அறியாது மிக அதிக மேதாவிலாசத்துடன் விளையாடினுல் கடவுள் என்ன செய்ய முடியும்? கடவுள் தான் அதற்கெல்லாம் பொறுப்பாளியா? இதெல்லாம் அவளுக்கெப்படித் தெரியப்போகின்றது. பாவம், பேதைப் பெண்!

சிலவருடங்கள் ஓடிமறைந்தன. ஒரு நாள் குள்ளன் ஒரு சிறு பொம்மையை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான். பெரியவன் அதைக்கேட்க, இவன் மறுக்க அவன் ஆத்திரம்கொண்டு சின்னவனைக்கால்களிற்பிடித்துத்தூக்கிச் சுவருடன் மோதிவிட்டான். சின்னவன் புழுவெனச் சுருண்டு விழுந்தான். முக்காமல் முனகாமல் மௌனியாகிவிட்டான். சோமு ஓடோடியும் வரு

(VII-ம் பக்கம் பார்க்க)

## திருக்கோணேஸ்வரன்

—நீலவின்தாசன்--

சோ சோ என்னும் கடல்மாதா
சுழற்றும் கணக்கில் அலைக் கரங்கள்
வாராய் என்று வாய் மொழியும்
வடிவன் கோணப் பெருமானைத்
தாவித் தழுவ முயலுதம்மா
தலமோ மிகவும் உயரமம்மா
நாமோ நடக்கக் கால்கொண்டும்
நண்ணத் தயங்கல் ஏனம்மா.

ஃ ஃ ஃ

பூம்புகார் தமிழன் புகழ்பேசும்;
போந்தனர் பலமொழி வணிகரங்கே
ஆங்குள ஆலயம் பலகண்டு
அன்னவர் நம்திறன் அறிந்துசென்ருர்
ஈங்கொரு பூம்புகார் ஈழந்தனில்
எத்தனை நாட்டு மாலுமிகள்
ஓங்கிய கோணப் பெருமானை
உளத்தில் சுமந்தே செல்கின்ருர்.

ஃ ஃ ஃ

பாகிஸ் தானின் ஒரு கப்பல்
பாரத நாட்டின் ஒருகப்பல்
ஆக அவைமட் டும்மல்ல
அடுத்தும் இன்னும் பலகப்பல்
பாகம் பாக மாக அந்தப்
பலதே சத்து மாலுமிகள்
தேனும் பாலும் சேர்த்துண்ணத்
திருக் கோணேசுரம் வருகின்ருர்.

ஃ ஃ ஃ

நாற்பத் திரண்டாம் ஆண்டினிலே
நாட்டைக் கொள்ள வந்தகுண்டு
சேற்றில் புதைந்த குதிரைகளின்
சீறும் கால்கள் தனையொத்து
ஆற்றல் மிக்க இறைமலையில்
அமைதி கொண்ட அக்காட்சி
ஈற்றில் ஈழம் தனைக்காத்த
எங்கள் இறைவன் அருளம்மா.

(4-4-66-இல் திருக்கோணேஸ்வரர் கொடியேற்றம்)

## சொக்கரட்டிஸ்

(II-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிபோல் இன்னத்தின் பக்கங்களிலே ருசிப் பண்டங்களை ருசிபார்த்த உதடுகள் பதியப்போகின்றன. இன்னும் ஐந்துவிநாடிகள். அதன் பிறகு சொக்கரட்டீஸ் என்று அழைக்கப்படும் இந்த வண்டி, உயிர் எல்லாமே அது அதன் தொடர்பை அறுத்துக்கொண்டு வாழ்க்கைத் தொடர் கதைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுவிடும். வருகிறேன் வடமாகாணமே வருகிறேன். எனதருமை யாழ்மாநகரமே வருகிறேன். நான் ஆடிஓயாடி ஆவேசமாய் பேசுவதற்குத் துணைபுரிந்த யாழ்நகர கல்லுக்கிளம்பிய வீதிகளே, வீதியோரத்து மருதமரங்களே உடைஞ்ச கதவுகளே வீட்டோரத்து மதிற்சுவர்களே உங்கள் அனைவரிடமிருந்தும் இந்தக் கிழவன் விடைபெறுகிருன். யங்கிநடையும் புதுமை நோக்கும் கொண்ட இளைஞர்களே, ரோட்டு சுத்தும் சுழட்டல் 'கிங்'குகளே, கடைத்தெரு சுற்றும் கன்னியரே, பேரன்பு கொண்டோரே, பெரியோரே, எனைப்பெருத் தாய்மாரே, நல் இளஞ்சிங்கங்கள் உங்கள் அனைவருக்கும் சொக்கரட்டீஸ் இறுதி வணக்கம்உரியதாகுக. இந்த வண்டிக்கிழவன் யாழ்நகர் இளைஞர்களைக் கெடுத்ததாக யாராவதுஉண்மையாக உளமார நினைத்தால் அவர்கள் என்னைமன்னிக்கட்டும்... வருகிறேன் ...வணக்கம். ஏ ஜெகமே, ஆராய்ச்சி பண்ணத் தவருதே உன்னையே நீ எண்ணிப்பார் ...சொக்கனே நீ எண்ணிப்பார்...

(நிறை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நடைபெற்ற 'பரியாரி சரவணை' நாடகத்தில ஒரு காட்சி. ஈழத்துச் சிவானந்தனும் - கலியுகவரதனும்.

நாடக விமர்சனம்

# கண்டியரசன்

பாஷையூர் வளர்பிறை நாடக மன்றத்தினரால் 'கண்டி அரசன்' என்னும் இசை நாடகம் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் சமீபத்தில் அரங்கேற்றப்பட்டது இந்நாடகத்தில் நடித்த நடிகர்கள் எல்லோருமே திறமையாக நடித்து இந்நாடகத்தின் வெற்றிக்கு உதவியாக அமைந்தனர்

இந்நாடகத்தில், கண்டியரசன் தனது எதிரியின் மனைவியைக்கொண்டு அவள் பிள்ளைகளை உரலில் இட்டு இடிக்கும் காட்சி உண்மையிலேயே ரசிகர்களின் உள்ளத்தைக் கரையச்செய்து விட்டது. ஜே. இருதானந்தன், டி. மனுவல் ஆகியோரின் இசைகட்டத்துக்குக்கட்டம் நாடகத்துக்கு உயிர் கொடுத்துக்கொண்டிருந்தது. இந்த நாடகத்தைத் தயாரித்திருந்த திரு ரி. இராஜேந்திரம் பாராட்டுக்குரியவர்.

மற்றும் இந்த நாடகத்தில் கண்டியரசனுக நடித்த ஏ. பாலதாஸ், குமாரியாக வந்த எஸ். ஏபிரகாம், குழந்தைப் பாத்திரங்கள் ஏற்று நடித்த எம். வெனுன்சியஸ், ஏ. முத்துக்குமாரு, முள்ளிக்கொடவாக நடித்த ஏ. அன்டர்சன், ரஞ்சிதமாக நடித்த எம். டேவிட், தோழிப்பாத்திரமேற்ற ஜி. மரியநாகமும், தூதுவர்களாக நடித்த ஆர். குசப்பிள்ளையும், ஏ. டனீசியசும் தாம் ஏற்ற பாத்திரங்களுக்கேற்ப சிறப்பாக நடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர்.

—எம். எஸ். துரை

சினிமாப்பித்தன்'தொகுத்து தருகிருர்

## கன்னடத்து (ச)ரோஜா

(சென்றவாரத் தொடர்ச்சி)

'சரோ' வீட்டுக்கு வந்த கொன்னப்பா பாகவதர், "உனக்கு நல்ல உடலமைப்பு இருக்கிறது புகைப்படத்திற் கேற்றபடி முகத்தோற்றமும் இருக்கிறது அதனுல் உனக்கு சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம்தருவதற்காகவே வந்துள்ளேன்!" என்ருர்.

—இதனைக்கேட்ட 'சரோ'வின் அம்மாவும், அப்பாவும் அசந்தே போய்விட்டார்கள். தமக்கு அதிர்ஷ்டம் அடித்துவிட்டதாக மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தார்கள்.

ஆனுல் —

"சினிமாவில் சேர்ந்தால் பெண்கள் ரொம்பவும் கெட்டுப்போய்விடுவார்களாம்! எனக்கு சினிமா என்ருலே பயமாக இருக்கிறது! நான் சேரமாட்டேன்" என்று சட்டென பயந்த முகத்துடன் பதிலளித்தார் சரோ.

பெற்றவர்கள், சினிமாவில் சேருவதால் பயமில்லையென்றும், வலியவந்த அதிர்ஷ்டத்தை விடவேண்டாமெனவும் சொன்ன ஆலோசனைக் கிணங்கவேண்டா வெறுப்புடன் சினிமாவில் நடிக்க ஒத்துக்கொண்டார்.

கொன்னப்பா பாகவதர் தனது மூன்று படங்களில் சரோவை நடிக்க ஒப்பந்தம் செய்துகொண்டார். 'காளிதாஸ்' படத்தில் சரோவுக்கு கொன்னப்பா பாகவதரைக் கண்டாலே நடுக்கம்!

'கீர்த்தி பெற்ற நடிகருடன் பேசும்போதும் நடிக்கும் போதும் எப்படியிருக்குமோ?' என்பதுதான் அவர் பயத்துக்குக் காரணம்.

—இதுதான் அன்று 'சரோ' சினிமா உலகத்தில் சேர்ந்து கொண்ட கதை!

ஆனுல் இன்று —

'சரோ' நடிகர் திலகத்துக்கு ஈடுகொடுப்பவராகவும், புரட்சி நடிகருடன் கிளர்ச்சி செய்பவராகவும் திரையுலகில் வெற்றிப்பவனிவந்து கொண்டிருக்கிருர்!

இன்று ஒவ்வொரு தயாரிப்பாளரும் சரோஜாதேவியையே ஒப்பந்தம் செய்யவேண்டுமென்று நினைக்கக்கூடிய அளவில் புகழைப் பெற்றுவிட்டார். செல்வச் சிறப்புடன் வாழ்கிருர்! அன்று அவர் கனவிலும் நினைக்காதது-அவருக்குப் பிடிக்காதது-இன்று நடக்கிறது! பெருவாழ்வு வாழச் செய்கிறது! (முற்றும்)

## சிவாஜி பற்றி

எனது நீண்டகால அனுபவத்தில் சிவாஜி கணேசன் போன்ற திறமைமிக்க ஒரு நடிகரை நான் சந்தித்ததே இல்லை.

'நடிப்புக்கலை' என்பதை வைத்துக்கொண்டு எடைபோட்டால், இன்று நம் நாட்டிலேயே அவர்தான் தலைசிறந்த நடிகராக விளங்கிவருகிருர்.

— பானுமதி

## 'இந்தக் காலத்து பிள்ளைகள்...'

பாண்டி செல்வராஜ் வருத்தம்

'இந்தக் காலத்தில் பிள்ளைகள் தாய், தந்தையருக்குக் கூட மரியாதை செலுத்துவதை அவமானமாகக்கருதுவதாகக் கூறி, நடிகர்பாண்டி செல்வராஜ் வருத்தப்பட்டார்.

'இதை அறிவுலகம் என்று கூறுகிருர்கள். சந்திரனில் இறங்குவதற்கு முயற்சிகள் நடப்பதைப்பார்த்தால் அப்படித்தான் எண்ணவும் தோன்றுகிறது. ஆனுல் 'அறிவுலகத்தில்' தோன்றியுள்ள குழந்தைகளின் நிலையைப் பார்த்தால் அறிவு தரும் செறிவு இதுதானு? என்று கலங்கவும் வேண்டியிருக்கிறது. பொங்கற்புதுநாளன்று என் மனைவி, என் மகன் குமாரை 'அப்பாவின் கால்களில் விழுந்து வணங்கி ஆசி பெற்றுக்கொள்' என்றுகூறினுள். அதற்கு ஏழுவயதுள்ள என் அருமை மகன் என்ன சொன்னுன் தெரியுமா? போம்மா...எனக்கு வெட்கமாயிருக்கிறது. எல்லாரையும் வீட்டைவிட்டுவெளியே போகச்சொல்லு நான் அப்பா காலில் விழுகிறேன்' என்று கூறினுன்! அதன்படி எல்லாரையும் வெளியேற்றிய பிறகுதான் என் கால்களில் விழுந்து வணங்கினுன்! நானும் சிவனே என்று வாழ்த்தினேன்! பிஞ்சு மனதில் அறிவுலகத்தின் ஆற்றல் எப்படி எப்படி இருக்கிறது பார்த்தீர்களா!' என்றுகேட்டார் அவர்.

## 'மனம் ஒரு குரங்கு'

குரங்கிலிருந்துபிறந்தவன் மனிதன் என்பதை ஒப்புக்கொள்ளாதவர்கள் கூட மனம் ஒரு குரங்கு என்பதை ஒப்புக் கொள்கிருர்கள். இதைக் கருத்தில் கொண்டோ என்னவோ, ஹாஸ்யநடிகர் 'சோ'வின் 'மனம் ஒரு குரங்கு' என்ற நாடகத்தை சஷ்டிபிலிம்சார் படமாகத் தயாரிக்கிருர்கள். ஏ. வீ. எம். ராஜன், பாலையா, மாலி, கே. ஆர். விஜயா முதலியோர் நடிக்கும் இப்படத்தை ஏ. டி. கிருஷ்ணசாமி டைரக்ட் செய்வார்.

### நட்சத்திரமொழி

எதையும் விலைகொடுத்து வாங்கி விடலாம். ஆனுல் திறமையின் அடிப்படையில் கிடைக்கும் பட்டத்தை வாங்கிவிட முடியாது.

# கலை அரங்கம்



அண்ணுமலைப் பல்கலைக்கழக வெளிநாட்டு மாணவர் மன்ற விழாவிலே செல்வன் பொன். சுந்தரலிங்கம் இன்னிசைக் கச்சேரி நிகழ்த்துகிருர்.

## ரவிச்சந்திரனின் எருமைச்சவாரி

இடுப்பிலே வேட்டி, உடம்பிலே பனியன் இத்யாதி உடையோடு பெரியமுரட்டு எருமையொன்றின் மேல் அமர்ந்து பவனிவந்து கொண்டிருந்தார் ரவிச்சந்திரன்.

அப்போது அந்தப் பக்கமாக பெரிய இடத்துப் பெண்ணுன ஜெயலலிதாவும், அவரது தோழி மாதவியும் வந்து கொண்டிருந்தனர். சந்திரனின் எருமை மாட்டுச் சவாரியைப் பார்த்து இருவரும் அவரைப் பரிகாசம் செய்தனர். அதுமட்டுமல்லாமல் ரவிச்சந்திரனின் கட்டுக்குடுமியைக் கண்டு 'இதென்ன தலையிலே புல்லுக்கட்டா?' என்று கேட்க, ரவிச்சந்திரன் 'புல்லுக்கட்டா என் தலையிலேயா?' என்று கேட்டபடியே தன் தலையைத் தடவிப் பார்த்தார். புல்லுக்கட்டுப்போன்று அவர்குடுமி காட்சி அளித்துக் கொண்டிருந்தது. அதைக்கண்ட அவ்விரு பெண்களும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

இத்தகைய காட்சியொன்றை ஈ. வி. ஆர். பிக்சர்சார் தங்களது 'குமரிப் பெண்' படத்திற்கெனஎடுத்தார்கள்.

இதில் ரவிச்சந்திரன், ஜெயலலிதா, மாதவி, நாகேஷ் ஆகியோர் நடிக்கின்றனர்.

இதன் திரைக்கதை, வசனத்தை டி. என். பாலு எழுதுகிருர்.

டைரக்ஷன் பொறுப்பை டி. ஆர். ராமண்ணு கவனிக்கிருர்.

### அம்மாள் பிலிம்ஸ்படம்

'அம்மாள் பிலிம்ஸ்' என்ற புதிய படக் கம்பெனியார் ஒரு படத்தைத் தயாரிக்கிருர்கள்.

கண்ணதாசன் பாடல்களை எழுத, இதை சி. என். பாண்டுரங்கன் இசை அமைக்கிருர்

இதன் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை பாண்டி செல்வராஜ் கவனிக்கிருர்.

### திருத்தம்

சென்ற வார 'கலை அரங்கில்' வெளியான 'கலிங்கத்தின் காவலன்' எனும் நாடக விமர்சனத்தில் இந்நாடகத்தை எழுதித் தயாரித்தவரின் பெயரை வேல்முருகன் எனத் திருத்திக் கொள்க. வேல்மாறன் எனத்தவறுதலாக இடம் பெற்றுவிட்டமைக்கு வருந்துகிறோம்.

## 'விஜி'க்கு திருமணம்?



தமிழ்த்திரையுலகத் தாரகை எல். விஜயலட்சுமி விரைவில் படாதிபதி ஒருவரைத் திருமணம் செய்துகொள்ளப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திருமணம் காதல் திருமணம் என்றே தமிழ் சினிமா உலகத்தில் பேசிக்கொள்ளப்படுகிறது.

சில காலத்துக்கு முன்னர் தமது படத்தில் நடிக்க வைத்தபோதே விஜயலட்சுமிக்கும் இவருக்கும் காதல் ஏற்பட்டதாகவும், பின்னர் 'கல்யாணம்' அளவுக்குச் சென்றுவிட்டதாகவும் தெரியவருகிறது.

படாதிபதியைத் திருமணம் செய்துகொள்வதால் 'விஜி'க்கு கூடுதலான படங்களில் நடிக்க அதிர்ஷ்டம் கூடுதலாக வரக்கூடுமென தமிழ் சினிமா உலகப் பிரமுகர் ஒருவர் சோதிடம் கூறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

டி. எம். எம்

## பிரிட்டிஷ் தேர்தல்

பிரிட்டனில், இம்முறை 100 அதிகப்படி பெரும்பான்மையுடன் தொழிற்கட்சி காமன்ஸ் சபைக்குத் திரும்பியிருக்கிறது.

கடந்த 17 மாதங்களாக மூன்றே மூன்று பெரும்பான்மையுடன், கத்திமுனையில் நடந்த பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம், இனித்தனது கொள்கைகளையும், திட்டங்களையும் 'ஸ்டீம் ரோலர் மெஜாரிட்டி' யுடன் அமுல் நடத்தலாம்.

உண்மையில் கடந்த ஒன்றரை ஆண்டு சாதனை கூட ஒருவகையில் குறிப்பிடத்தக்கதுதான். திரு. வில்சன் ஒரு கழைக் கூத்தாடியைப் போல் கயிற்றின்மீது வெகு ஜாக்கிரதையுடன் நடந்து வந்திருக்கிறார். உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் அரசாங்கத்தைசொற்ப மெஜாரிட்டியுடன் அவர் நடத்திச்சென்ற தோரணை பிரிட்டிஷ் வாக்காளர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

எந்த பிரிட்டிஷ்காரனின் வாக்கும் எவ்வித செல்வாக்குக்கும் உட்பட்டதல்ல. எந்தெந்தச்சமயத்தில், யாருக்கு, எதற்காக வாக்களிக்கவேண்டும் என்பதை பிரிட்டிஷ் வாக்காளன் எல்லோரையும்விட நன்கறிவான்.

பிரிட்டிஷாருக்கு முன்பே நமக்கெல்லாம் முடியாட்சியில்பரிச்சயம்உண்டு. ஆனால் ஜனநாயகஆட்சி, ஐரோப்பா அளித்த வரப்பிரசாதம் என்பதை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். அதுவும், பிரிட்டிஷார் 700 ஆண்டுகளுக்குமேலாக பார்லிமெண்டை நடத்திவந்திருப்பதால், வாக்களிக்கும்முறையில் அவர்களுக்கு முதிர்ந்த அனுபவமுண்டு. எனவே தான் வாக்குகளை திருப்பி எண்ணும் நிர்ப்பந்தமோ, தேர்தல் ஆட்சேபனை மனுக்களோ, பணத்திற்காக அல்லது செல்வாக்குக்கு உட்பட்டமுறையில் வாக்குகளை போடுவதோ பொதுவாக அங்கெல்லாம் இடம்பெறுவதில்லை.

மூன்றில் இருமடங்கு தேர்தல் முடிவுகள் வருமுன்பே கன்சர்வேட்டிவ்கட்சி தனது தோல்வியை ஒப்புக்கொண்டது. இதற்கான உதாரணங்களில் ஒன்று. ஜனநாயகத்தின் சிறப்பே அது.

காமன்ஸ் சபையின் 630 ஸ்தானங்களுக்கு 1707 அபேட்சகர்கள்போட்டியிட்டார்கள். அதாவது தொகுதி ஒன்றுக்கு சராசரி 3 பேருக்குக் குறைவு. குறைந்த அளவான கட்சிகள் இருப்பதும் இதற்கோர் காரணமாக இருக்கலாம். பிரிட்டிஷ் மக்கள் ஏதாவது ஒரு செல்வாக்குக்கு உட்பட்டவர்களாதலால்தான் சுயேச்சை அபேட்சகர்கள் அதிகமாக இல்லை.

1707 அபேட்சகர்களில் தொழிற்கட்சி 621 அபேட்சகர்களையும், கன்சர்வேட்டிவ் கட்சி 630 அபேட்சகர்களையும் நிறுத்தியிருந்தது. லிபரல் கட்சி 311 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டது. 57 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்ட கம்யூனிஸ்ட்டுகள் ஒன்றிலும் இடம்பெறவில்லை. மொத்த வாக்காளர்கள்3,59,68,385 இதில் 75 சதவிகிதம் பேர் வாக்களித்தார்கள்.

பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் இன்னும் ஐந்தாண்டு காலத்துக்கு ஸ்திரமான அரசாங்கக்குடிவாளத்தை இப்போது பிடித்துக்கொண்டுவிட்டார். திரு. வில்சனின் பொருளாதார, பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு பிரிட்டிஷ் மக்கள் நல்ல ஆதரவு அளித்திருக்கிறார்கள் என்பதையே, இத்தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, பவுண் மார்க்கெட் நல்ல ஸ்திரம் பெற்றதாகச் செய்திகள் கூறின. எஃகு போன்ற பிரதான தொழில்கள் இனி தேசிய மயமாக்கப்படுவதை எவரும் தடுக்கமுடியாது. இங்கிலாந்துவங்கிக்கும் இது பொருந்தும்.



கன்சர்வேட்டிவ்களின் எதிர்ப்பு, கடற்படை மந்திரி, கடற்தளபதி ஆகியோரின் ராஜினுமா ஆகியன பிரிட்டனின் சமீபத்திய பாதுகாப்புக் கொள்கையைத்தொடர்ந்து இடம் பெற்றன. ஆனால் பிரிட்டிஷ் மக்கள் இதற்கு இப்போது ஆதரவளித்து விட்டார்கள்.

வியட்னும் விஷயமாக பிரிட்டன், அமெரிக்காவின் கொள்கையை எப்போதும் ஆதரித்துவந்திருக்கிறது. ஆனுல் ஆஸ்திரேலியா, நியூஸிலந்து போன்ற நாடுகளைப்போல் அடையாளத் துருப்புக்களைக்கூட அது வியட்னுமுக்கு அனுப்பாது.

பிரிட்டிஷ் தேர்தல் முடிவு இலங்கை போன்ற நாடுகளைப் பொறுத்தவரை எவ்வித திருப்பத்தையும் உண்டு பண்ணும் எனக் கூறமுடியாது கடந்த 17 மாதங்களாக எப்படியிருந்ததோ அப்படியேதான் இனியும் அது இருக்கும்.

ஆனுல் ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகள் விஷயத்தில பிரிட்டன் இன்னும் சற்று நியாயமான மனப்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு. பார்லிமெண்டில் தெளிவான பெரும்பான்மை பெற்றுவிட்டதால், ரொடீஷியா விஷயத்திலும், அங்கோலா, மொஸாம்பிக் போன்ற போர்த்துக்கேய காலனிகள் விஷயத்திலும் அந்த நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு உதவ, பிரிட்டன் உறுதியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக ரொடீஷியா விஷயத்தில் திரு. வில்சன் இனி கடைப்பிடிக்கவிருக்கும் நடவடிக்கைகள் ஆபிரிக்க நாடுகளை எவ்விதம் திருப்தி செய்யப்போகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தொழிற்கட்சி பெரும் வெற்றி பெற்றுவிட்டதால் ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேரும் விஷயம் தள்ளிவைக்கப்பட்டிருப்பதாகப் பலர் கருதுகிருர்கள். பொதுச்சந்தையில் சேராதவரை இலங்கை போன்ற காமன்வெல்த் நாடுகளுக்குஅது அனுகூலமேயாகும். நிற்க;

இத்தேர்தல்முடிவு 50 வயதான திரு. வில்சனுக்கு பெரும் வெற்றி என்பதில் சந்தேகமில்லை. அவரே தனது லங்காஷயர் தொகுதியில் சுமார் 21000 அதிகப்படி வாக்குகளால் வென்றிருக்கிருர். எதிர்க்கட்சித் தலைவர் ஹீத் குறைந்தவாக்குகளுடனேயே கென்ட் தொகுதியில் வெற்றி பெற்ருர்.

திரு. வில்சனின் வெற்றிக்கு இதுமட்டும் காரணமல்ல. திரு. கோர்டன் வாக்கர் உட்பட, பெரும்பாலான முக்கிய தொழிற்கட்சிப் பிரமுகர்கள் வென்றிருப்பதும், முக்கிய கன்சர்வேட்டிவ் பிரமுகர்கள் பலர் தோற்றிருப்பதும் இந்த வெற்றிக்கு மற்றும் ஒரு காரணமாகும்.

ஆனுல் ஒரு விஷயம்மட்டும் உண்மை. பிரிட்டனில் எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும், அது சர்வதேச விவகாரங்களில் பெரும்பாலும் அமெரிக்காவை ஆதரித்து நிற்கிறது என்பதே அந்த உண்மை. பிரிட்டன் தன் தலைவிதியை அமெரிக்காவுடன் பிணைத்துக் கொண்டுவிட்டதுதான் இதற்குக் காரணம். சரியோ பிழையோ, ஆசிய-ஆபிரிக்க நாடுகள் சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கையைப் பிரிட்டன் ஆதரித்தேவருகிறது. குறிப்பாக பாதுகாப்புக் கொள்கையில் இந்த உறவு நெருக்கமானது.

இப்பகுதி மக்களின் விருப்பத்துக்குமாருக, சங்கிலித் தொடர்போல் ஏற்பட்டிருக்கும் ராணுவத்தளங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். பிரிட்டன் இல்லாத இடத்தில் அமெரிக்கா, அமெரிக்கா இல்லாத இடத்தில் பிரிட்டன் என்ற ரீதியில் மட்டுமின்றி, மொரீஷியஸ் போன்ற இடங்களில் கூட்டுப் பொறுப்பிலும் ராணுவத் தளங்கள் ஏற்படவிருக்கின்றன. பொதுவாகச் சொல்லப்போனுல் பிரிட்டனில் தீவிரவாதிகள் (தொழிற் கட்சி) பதவிக்கு வந்தாலும், மிதவாதிகள் (கன்சர் வேட்டிவ்) பதவிக்கு வந்தாலும் அதன் ஆசியக் கொள்கையின் அடிப்படை அப்படியேதான் இருக்கும் எனக் குறிப்பிடலாம்.

## ஐரோப்பாவில் நீளமான பாலம்


கிழக்கத்தி ஷெல்ட் கழிமுகத்துக்குக் குறுக்கே, ஐரோப்பாவிலேயே மிக நீளமான பாலமொன்று அண்மையில் திறக்கப்பட்டது. அதன் நீளம் மூன்று மைல். அதை 54 கான்கிரீட் தூண்கள் தாங்கிநிற்கின்றன. அது கடல் மட்டத்துக்கு மேலே 57 அடி உயரமிருக்கும். மிகப்பெரிய வர்த்தகத் துறைமுகமான ராட்டர்டா[illegible] சுமார் 30 மைல் இப்பாலத்தால் குறைகிறது.

---

பிறவியால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று கிடையாது. செய்கையால் தாழலாம் உயரலாம். செய்கையால் தாழ்ந்தவர்களை ஒதுக்க வேண்டும். மனித சமுதாயம் நல்ல முறையில் வாழ ஒற்றுமை அவசியம். இந்த மனப்பான்மை குழந்தைகளுக்கு ஏற்படவேண்டும்.

— காமராஜ்

---



சாவகச்சேரியில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டத்தில் 'எங்கள் தலைவர்' என்ற நூலின் முதற் பிரதியை பாரிஸ்டர் எம். சிவானந்தன், யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம், சமர்ப்பிப்பதை படத்தில் காணலாம்.

## 72 கோடி ஆண்டுகளுக்கு முந்திய புதையுயிர்த் தடம்!

கனடாவின் வடகரைக்கு அப்பாலுள்ள விக்டோரியா தீவிலிருக்கும் சேலர் மலைகளில் மிகத் தொன்மையான உயிர்களின் புதையுயிர்த் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புழுக்கள், சிறுசிப்பிகள்போன்ற உயிர்கள் ஆகியவற்றின் அப்புதையுயிர்த் தடங்களை அமெரிக்காவில் ஹனேவரிலிருக்கும் டார்ட்மௌத் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஆண்ட்ரூ எச். மக்நயர் கண்டுபிடித்துள்ளார். பாறைப்படிவங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அவை 72 கோடி ஆண்டுகளுக்கு முந்தியவையாகும்.

இது எதிர்பாராத கண்டுபிடிப்பாகும். ஏனெனில் சுமார் 60 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த உயிரினங்கள்எவ்விதத்தடத்தையும் விட்டுச்சென்றதில்லை. அக்காலத்துக்குமுன்னர் பண்டைக் கடல்களில் வாழ்ந்த செடிகளும்- விலங்குகளும் தோடு, முள்போன்ற கனத்த உறுப்புகளை உண்டாக்கிக்கொள்ளவில்லை என்று உயிரியலார் நினைத்தனர். அவ்வாறு அவை கனத்த தோடுகளை உண்டாக்கியிருந்தால்தான் புதையுயிர்த்தடங்களாகப் படிந்துவிட முடியும்.

இருப்பினும் 60 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் முக்கியமான புதையுயிர்த்தடங்கள் பதிந்ததற்கு முன்னரே பல்வகையான உயிரினங்கள் உலகில் செழித்திருந்தன என்று உயிரியலார் மேற்கொண்டு ஆராயச் சிறு சான்று இப்போ கிடைத்திருக்கிறது.

## குருடர்க்கு பார்வை!

கண்ணிழந்தவர்கள் "பார்வை" பெறக்கூடிய நுண்ணெலிக்கருவியொன்று இப்போதுபிரிட்டனில்சோதனையிலிருந்துவருகிறதுஅதன் பிறகு அக்கருவி ஏராளமாக செய்யப்படும்

அக்கருவியிலிருந்து மிக் கொலியுடைய ஒலிக்கற்றையொன்று கிளம்பி, எதிரேயுள்ள பொருளைத் தாக்கி எதிரொலிக்கிறது. அது காதில் பொருத்தியுள்ள கேட்பானை வந்தடையும். அதனுல் தன்னெதிரில் அப்பொருள் எவ்வளவு தொலைவில் உள்ளது என்பதை அக்கருவியை அணிந்திருப்பவர் அறிந்துகொள்ளலாம்.

---

## பராபவவருஷ திருக்கணித பஞ்சாங்கம் (1966-67)

யாழ்ப்பாணம் மட்டுவில் சி. சுப்பிரமணியஐயர் அவர்களாற் கணிக்கப்பட்டது. 79-ம்வருடப்பிரசுரம். இதன் விலை தனிப்பிரதி ரூ. 2-00.

புதிய பராபவ வருஷம் புதன்கிழமை பிறப்பதால் நல்லமழையும் நடுஇரவாவதால் திருடர்களுக்குப்பீடையும் திருவோண நட்சத்திரமாதலால் நன்மை விருத்தியும், தனுலக்கினமாதலால் பயிர்விருத்தியுமுண்டாம் என்று புதுப்பஞ்சாங்கத்தில் சித்திரைச் சங்கிரம பலன் கூறப்பட்டுள்ளது. இவ்வாண்டு நாள் கலண்டர்களில் இடம்பெறத் தவறிப்போன போயாவிடுமுறை தினங்களான அட்டமிதினங்களும் பூரணை அமாவாசைதினங்களும் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அட்சராரம்பம் முதலாக வெற்றிலை நடுகை, வெண்காயச் செய்கைக்கு நாள் முகூர்த்தக் கணிப்புவரை விஷய அட்டவணையில் வழக்கம் போல் இடம் பெற்றிருக்கும் 75 பல்வேறு அம்சங்களும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சகலவிஷயங்களையும் நமக்குத் தெரியப்படுத்துகின்றன. ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் கைவசம் இருக்கவேண்டியஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பச் சுடர்

## மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை

— ஏ. டபிள்யு. அரியநாயகம் —

மனையாளே, மனைவியே, இல்லாளே என்று பெண்ணினத்தை அழைத்ததால், இன்னமும் அழைப்பதால் தமிழ்ப்பெண்கள் அனைவரும் இல்லத்திலிருந்து கணவனுக்கடங்கிய பெண்களாகவே வாழ்ந்தனர், வாழவேண்டும் என எண்ணுதல் தவறுடையதாகும்.

பண்டையமகளிரில் கோப்பெருந்தேவி, பூதப்பாண்டியன் மனைவி போன்ற அரசியர்; ஒளவையார், வெண்ணிக் குயத்தியார் போன்ற புலவர்கள்; கண்ணகி, மாதவி, மணிமேகலை போன்ற காப்பியத்தலைவிகள் பலரைச் சந்திக்கின்றோம்.

''பெருந்தடங்கட் பிறை
நுதலார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்
கீதலும் வைகலும்
விருந்து மன்றி
விளைவன யாவையே''

என்றார் கவியரசர் கம்பர்.

நாடுவிட்டுநாடு சென்று நயம்படத் தூதுரைத்த ஒளவை மூதாட்டி, பெண்ணின் பெருந்தன்மை இல்லத்தில் இருப்பதே என எண்ணியிருந்தால் என்ன நடைபெற்றிருக்கும்? ஆரம்பத்தில் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்பனவற்றுடன் காட்சி தரும் கண்ணகி, ''காய்கதிர்ச்செல்வனே, கள்வனோ என் கணவன்!'' எனப் பொங்கியெழுந்து பாண்டியனின் முன் நீதி கேட்டபொழுது மறக்கற்பைத்தான் காண்கிறோம்.

'மக்கள் யாக்கைஉணவின் பிண்டம், உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே'-என இன்னமுது வழங்கிய மணிமேகலையின் தொண்டு வீட்டுடன் அடங்கியதல்லவே. எனவேதான்,

''நாவலந்தீவில் இந்நங்கையை யொப்பார் யாவருமில்லை'' என்று நமது கருத்தைக் கவரும் அளவிற்கு மணிமேகலை மாட்சியுடன் விளங்குகிறாள். ''தொட்டிலை ஆட்டும்கை தொல்லுலகை ஆளுங்கை'' என்ற புதுமைக் கவிஞனின் கனவு இன்று நனவாகி வருவதைக்கண்டு நம்மினத்தார்க்கு ஏனோ வயிற்றெரிச்சல் ஏற்படுகிறது?

இன்னாளின்கணவன் எனப் புகழ்பெறுவது ஆண்குலத்திற்கே இழுக்கு எனக் கருதுவோம் நாம். ஆனால் சங்ககாலத்திலேயே பெண்ணாலே ஆண்புகழடைந்தான் என்பதைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று காட்டும்.

ஒரு தலைவன் தன்னூர்ப் பெருந்தெருவில் செல்லும் பொழுது பலரும் அவனைச் சுட்டிக்காட்டி இன்னவளின் கணவன் இதோ செல்கிறான் எனக்கூறுவது சற்று நாணத்தைத் தருவதென்றாலும் அதனையே பெரும் பேறாகக் கருதினானும் அத்தலைவன்:-

''பெறுகதில் லம்ம
யானே பெற்றாங்கு
அறிகதில்லம்ம
இவ்வூரே மறுகில்
...கணவனி வனென்னப்
பல்லோர் கூற
யாநாணுஞ் சிறிதே''...

என்பதாகும்.

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்றும், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'' எனப் புதுமைக்குரல் எழுப்பிய கவிஞர் பெண் அல்ல, ஆணே என்பதைத் தெரிந்தும் ஏனோ இவ்வாறான விவாதத்தை மேற்கொள்கிறார்கள், ஆண்கள்.

பெண்ணின் பெருமையில் வீடுமாத்திரமல்ல, நாடு-இனம்-மொழிஎன்பன பெருமையுறும் என்பதை வருங்காலத்தில் எவரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.

பெண்கள் கல்விகற்பதால் உத்தியோகம் பார்ப்பதால் தங்களின் பண்பை இழந்துவிடுவார்கள் என விவாதிக்க முற்படுவது, மொட்டம் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட முயல்வதற்கு ஒப்பாகும்.

''ஆணும் பெண்ணும்
நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம்
தழைக்குமாம்''

என்ற புதுமைக் கவிஞனின் வாக்கை மனதில் என்றும் எண்ணி வாழவேண்டியது ஆண்வர்க்கத்தின் இன்றியமையாமையாகும்.

---

பூட்டைத் திறப்பது
கையாலே-நல்ல
மனந்திறப்பது மதியாலே
பாட்டைத் திறப்பது
பண்ணாலே-இன்ப
வீட்டைத் திறப்பது
பெண்ணாலே

—பாரதியார்

---

பெண் பொறுத்துக் கொண்டுதான் போக வேண்டும். இல்லாவிட்டால் உலகம் நடக்காது.

—சரத்சந்தர்

---

ஆண்கள் மரங்கள், பெண்கள் அந்தமரத்தை ஆதாரமாகத் தழுவிக் கொண்டுஅதனைச் சுற்றியிருக்கும்கொடிகள்; குழந்தைகள் அந்தக் கொடிகளில் கூத்தாடும் மலர்கள்.

—இங்கர்சால்

---

### திருமணமாம் திருமணம்

இலங்கையில் மரக்கறிச் சந்தை, மீன்சந்தை மற்றும் சந்தைகள் கூடுவது போல வடஇந்தியாவின் ஒரு பாகத்திலே அடிக்கடி திருமணச் சந்தை கூடுவது வழக்கம். மணமாகவேண்டிய கன்னிப்பெண்களும் வாலிபர்களும் சந்தைக்கு வந்து அவரவருக்குப் பிடித்தமான மாப்பிள்ளை பெண்களைத் தேர்ந்தெடுத்து ஒப்பந்தம் செய்துகொண்டு பிரிந்துவிடுவர். பிறகு குறித்த தினத்தில்திருமணம்நடைபெறும்.

---

## தாயா..., தாரமா...?

மணமான ஓர் ஆடவனின் இல்வாழ்க்கையில் மிகவும் சிக்கலாக பிரச்னையை உண்டாக்கிவிடுகிறது இது. தாயா, தாரமா? எது முதலில் வரவேண்டும். தன் வாழ்க்கையில் தாய்க்கு முதல் இடமா, தாரத்திற்கு முதல் இடமா அளிக்கப்படவேண்டும்? ஒவ்வொரு ஆடவனின் வாழ்க்கையில், வாழ்விலும், தாழ்விலும் பங்கு பெறுபவள் மனைவி. அவனின் இன்பத்திலும், துன்பத்திலும் உழல்பவள் மனைவி. அவன் சுகமே தன் சுகம், அவன் இன்பமே தன் இன்பம் எனக் கருதி தன்னை வெறுக்கும் கணவன் ஆனாலும் அவன் நிழலிலே தங்கி இருந்து சேவை செய்ய மனைவி ஒருத்தியே விரும்புவாள். ஆகவே கணவன் நிழலே மனைவிக்குச் சதம். தவறான வழியில் செல்லும் மகனை திருத்த தாய் முனைந்தாலும், நாள் போக வெறுப்பு வந்து எக்கேடு கெட்டுப் போ என்றிருந்துவிடுவாள். மனைவி அப்படியாக முடியுமா? திருத்த முடியாவிட்டாலும் அடியோ உதையோ வாங்கிக்கொண்டு கடைசி வரை திருத்தவே முயல்வாள். கணவனைத் தெய்வமாக மதிக்கும் பரம்பரையில் வந்தவர்கள் பெண்கள். கண்ணகி, நளாயினிபோன்ற கற்புக்கரசிகளின் வழித்தோன்றல்கள். மதிகெட்டலைந்தாலும் ஒரு பெண் கணவனை தன்னவன் என்று சொல்லத் தயங்குவதில்லை. தாய் சிலசமயம் ஆத்திர மிகுதியால் தன் மகனில்லை என்று கூறிவிடுவதுண்டு. சில ஆடவர்கள் தாயைமட்டுமே மதித்து, மனைவியை மிதித்து நடக்கிறார்கள். தாயை மதிக்கவேண்டும் தான். இவ்வுலகத்துக்கு அரும்பாடுபட்டு அளித்தவள் தாய்தான். அதற்காக மனைவியை அவமதிக்கலாமா? கணவனுக்கு ஒன்று என்றால் பூவிழந்து, பொட்டிழந்து, பொலிவிழந்து புழுங்குபவள் மனைவியேயாகும். போற்றவேண்டாம் தூற்றாமலிருந்தால் சரி. மனைவி என்பவள் மரக்கட்டையல்ல என்பதை நினைக்க வேண்டும். விவாகரத்து வழக்குகள், மேலை நாட்டிலும் சரி, கீழ் நாட்டிலும் சரி மூலகாரணம், வாழ்க்கைக்கு உறுதுணை மனைவியா, தாயா என்பதை நினைவில் வைத்து நிர்ணயித்துக் கொள்ளாததேயாகும்.

—''சுந்தரி சபாரத்தினம்''

---

# சிறுவர் பூங்கா



## இரவலன் குரல்

--- மாவை. தி நித்தியானந்தன் —

நாயே நீயேன் குரைக்கின்றாய்?
நானோ திருட வரவில்லை!
ஓயா வயிற்றின் குரைப்பாலே
உணவுக் கலையும் இரவலன்யான்
பாயா தேஇவ் வேழையின்மேல்
பாவம் உனக்குச் சேர்ந்துவிடும்!
தீயாய்க் கதிரோன் தகிக்கின்றான்
திறக்க விடுவாய் படலையினை!

குதிரை போலே வளர்ந்திங்கே
குதிக்கின் றாய்நீ; ஆனால்நான்
உதிரங் குறைந்தே உழல்கின்றேன்
ஒல்லி யாகித் தளர்கின்றேன்
நிதமும் நினக்கோ கிடைக்கிறது
நிறைய உணவும் மாமிசமும்!
கதறும் எனக்கோ கால்வயிற்றுக்
கஞ்சி கிடைத்தல் கடினமடா!

அன்பாய் உன்னை எசமானன்
அணைத்துத் தடவித் தழுவிடுவான்
என்மேல் அன்பைப் பெய்திடவோ
எவரும் இல்லை இவ்வுலகில்!
இன்பம் எதுவென் றறியேன்நான்
இன்னல் எதுவென் றறியாய்நீ
முன்னை வினையால் மானிடனாய்
மண்ணிற் பிறந்தே இரக்கின்றேன்!

நின்போல் நாயாய்ப் பிறந்திருந்தால்
நிம்மதி யாக வாழ்ந்திருப்பேன்!
எண்ணும் போதுன் வாழ்க்கையினை
ஈரம் நாவில் ஊறுதடா!
கண்ணீர் சிந்தும் என்மீது
கருணை காட்டு; குரைக்காதே!
சென்றுன் எசமா னிடம்பிச்சை
சேர்த்திட வழிவிட் டகன்றிடுவாய்!

---

## மணி மந்திரவாதி

— சி. சுதந்திரராஜா —

அன்றொரு நாள் காலை ஆனந்தனின் வகுப்பே அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனந்தனது நண்பர்களெல்லோரும் ''ஆனந்தன் ஏதோ பெரிய மந்திரங்களையெல்லாம் கற்றுக்கொண்டுவிட்டான்; அதனால்தான் எங்கேயோ இருக்கும் வெளிநாடுகளில் இப்பொழுது என்ன நேரமாயிருக்கின்றதென்பதை இங்கிருந்துகொண்டே சரியாகக் கூறிவிடுகிறான்'' எனத் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். ஆனந்தனோ தன் மேசையின்மேல் ஒரேயொரு உலகப்படத்தை மட்டும் விரித்து வைத்திருந்தான்.

வகுப்பறையிலிருந்த கடிகாரம் எட்டு மணியாகிவிட்டதென்பதை எட்டுத் தடவை அடித்து அறிவித்தது. ''இலண்டனில் இப்போது என்ன நேரம் என்பதைச் சொல்லு பார்ப்போம்?'' என்று கேட்டான் மோகன். அடுத்த கணம் ஆனந்தனது கண்கள் இலண்டன் இருக்கும் இடத்தைத்தான் உலகப்படத்தில் நோக்கின. பின்னர் ஓரிரு நிமிடங்கள் ஏதோவெல்லாம் வாயில் முணுமுணுத்தான்.

''இப்போது இலண்டனில் நேரம் நள்ளிரவு இரண்டரை மணி.''

எல்லோரும் வியப்படைந்தனர். மோகன் உடனே தன் சட்டைப் பைக்குள் இருந்த தினக்குறிப்பை எடுத்துப் புரட்டினான். அதில் கூட 'இலங்கையில் காலை எட்டு மணியாயிருக்கும் போது இலண்டனில் அதிகாலை இரண்டரை மணியா[illegible] பட்டிருந்தது. ''இப்பொழுது டோக்கியோவில் என்ன நேரம்?'' என்று கேள்விக் கணையாகத் தொடுத்தான் மோகன். ''நண்பகல் பதினொன்றரை மணி'' என்றான் ஆனந்தன். ''சரி......மாஸ்கோவில்?'' சில விநாடிகள் ஏதோ முணுமுணுத்த பின்னர் ''காலை ஐந்தரை மணி'' என்றான் ஆனந்தன். ''சரி......சிங்கப்பூரில்?'' ''காலை பத்து மணி'' இப்படியே கேட்டுக் கேட்டுச் சலித்தே போனான் மோகன். ஆனால் ஆனந்தன் படபடவெனப் பதிலிறுத்தான். ''எப்படியடா இந்த அரிய பெரும் மந்திரத்தைத் தெரிந்து கொண்டாய்? எங்களுக்கும் கொஞ்சம் சொல்லேன்'' என்று கெஞ்சும் பாவனையில் கேட்டார்கள் நண்பர்கள்.

ஆனந்தன் உரக்கச் சிரித்துவிட்டு, ''இதிலேயொரு மந்திரமுமில்லை; மாயமுமில்லை. நாமிருக்கும் தேசம் எத்தனையாவது பாகையில் அமைந்திருக்கிறதென்பதையும் நாம் நேரத்தினை அறிய வேண்டிய இடம் பூகோளப் படத்தில் எத்தனையாவது பாகையில் அமைந்துள்ளதென்பதையும் அறிந்து, முன்னதிலிருந்து பின்னதைக் கழித்து வரும் தொகையை, ஒரு பாகைக்கு நான்கு நிமிடங்கள் வீதம், தொகையினை நான்கால் பெருக்கி இப்போதைய நேரத்துடன் நாம் நேரங் கணிக்கவேண்டிய நாடோ, நகரமோ எமக்கு கிழக்கே இருந்தால் கூட்ட; அல்லது மேற்கேயிருந்தால் கழிக்க அவ்விடத்தின் நேரம் விடையாகவரும். உதாரணமாக இலங்கை 80 பாகையிலும், கோலாலம்பூர் 50 பாகை கிழக்காகவும் அமைந்திருப்பதால், முன்னதிலிருந்து பின்னதைக் கழிக்க 30 பாகை விடை. பாகைக்கு நான்கு நிமிடம் வீதம் பெருக்கினால் 120 நிமிடங்கள் அல்லது 2 மணித்தியாலங்கள்தான் இலங்கை நேரத்தைவிட, கோலாலம்பூர் கூடவாக இருக்கும்'' என்று தன் மந்திரங்களையெல்லாம் கூறினான் ஆனந்தன்.

---

### உங்கள் நினைவுக்கு

கடந்த வார 'சிறுவர் பூங்கா'வில் 'உங்கள் நினைவுக்கு' என்னும் தலைப்பில் வெளிவந்த தகவல்களைத் தொகுத்து அனுப்பியவர் ச. சுப்பிரமணியம் என்பவராவர்.

'சிறுவர் பூங்கா'வுக்கு விஷயதானங்கள் அனுப்புவோர், தம் பெயரையும் முழு விலாசத்தையும் எழுத மறந்துவிடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நூல் நிலையம்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** ஆசிரியர்: வ. முத்துக்குமாரசுவாமி பி.ஏ., நாவலர்கோட்டம், வண்ணார்பண்ணை. பக்கம்: 120.

இந்நூல் மிக விளக்கமாகவும் சுருக்கமாகவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர், நாவலர் அவர்களின் வரலாற்றை முப்பது தலைப்புகளாகப் பிரித்து வரலாற்றில் சுவை பயக்கும் செய்திகளை ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டுரையாகத் தந்திருக்கிறார். நாவலர் அவர்களைப்பற்றி எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் கிடைப்பது அரிதாகவுள்ள இச்சமயத்தில் இந்நூல் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கதே. நாவலரிடம் பாடங்கேட்டவர்கள், அவர் காலத்திருந்த தமிழ்ப் புலவர்கள், கிறித்துவ பாதிரிமார்களைப் பற்றிய செய்திகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் நல்ல தமிழ் வழங்குகிறது என்னும் நற்பெயரைத் தமிழ் நாட்டில் தோற்றுவித்த நாவலரவர்களைப் பற்றிய நூல்கள் பல வெளிவர வேண்டும். நாவலரவர்களின் வரலாற்றை நல்ல முறையில் எழுதி வெளியிட்ட திரு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் பாராட்டுக்குரியவராவர். இந்நூலை ஆசிரியர் தமிழிலும் எழுதிவெளியிடுவாரெனஎதிர்பார்க்கிறோம். நீதியரசர் சைவசிகாமணி ஸ்ரீஸ்கந்தராசா, பேராசிரியர் டாக்டர் கணபதிப்பிள்ளை என்போர் நூலுக்கு முன்னுரையும் அணிந்துரையும் வழங்கியிருக்கிறார்கள்.

—ந. சி. க.

★

**நிறைநிலா** (சிறுகதைத் தொகுதி) ஆசிரியர்: இ. நாகராஜன். ராதாரமணன் வெளியீடு. பக்கம்: 192. விலை: ரூ. 3-00.

இலக்கியம் என்பது முன்னைய வாழ்விற் கால்கொண்டு அன்றைய வாழ்க்கையைச் சுட்டிக்காட்டி, எதிர்கால உலகத்தைச்செம்மைப்படுத்தக்கூடியதாக அமையவேண்டும் என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்து. தனிப்பட்ட குரோதம், வெறுப்பு, காழ்ப்பு ஆகிய தீய பண்புகளைக் கடந்து, பொதுப்படையான உண்மைக்கு உயிரூட்டி, உயிர்த்துவத்தோடு ஆக்கப்பட்ட இலக்கியங்கள் காலக் கடலின் எதிர் அலைகளை லட்சியம் செய்யாது நீந்திச்செல்லக் கூடியன.

இந்த அடிப்படையான உண்மையை மனத்தே கொண்டே இலக்கிய நூல்களை அணுகுதல் வேண்டும். அண்மையில் வெளியான இ. நாகராஜன் எழுதிய 'நிறைநிலா' முற்குறிப்பிட்ட கட்டுக்கோப்புக்குள் இடம் பெற்றதா என்பது வாசகர்களின் தீர்ப்பே விளக்கும். குறிப்பிட்டசிறுகதைத் தொகுதியைவாசித்தபோது வாழ்வில் நிலைகொண்டு, வாழ்வின் ஆசாபாசத்தை எவ்வாறு உய்த்துணர்ந்து அனுபவ முதிர்ச்சியுடன் கதைகளைப்படைத்தார் என்பதை அறிந்துகொள்ளலாம்.

''குறிப்பிட்ட சதுரக் கோட்டை முற்றத்தில் கீறி அதற்குள் மாங்கொட்டை போட்டுக் கெந்தி விளையாடும் சிறுவர்களுக்கு ஏற்படும் சிரமம் எழுத்தாளனுக்கு இருக்கக்கூடாது என்பதால் சுதந்திரமாக உலகத்தைநோக்கி என்னிற்பலரையும், பலரில் என்னையும் கண்டு பல்வேறு தாக்கலுக்கும் உட்பட்டிருக்கின்றேன்." இவ்வாறு குறிப்பிடும் குறுகிய எல்லைகளுக்குள் தன்னைக் குறுக்கிக் கொள்ளாது பரவலான முறையில் சிந்தனையைச் செலுத்தியிருக்கிறார் கதாசிரியர். அதன் பலனேபல்வேறுபட்ட உணர்ச்சிகளை, அனுபவங்களை மையமாகக் கொண்டகதைகளைப்படைப்பதற்கு அவரால் முடிந்திருக்கிறது.

இத்தொகுதியில் துணை, எரிந்ததிரி, வேலி, பிரயத்தனம், திரை, கண்கள், கடன், மாஜிமனிதர்கள், நம்பிக்கை, வர்ணஜாலம், வேஷம், மின்மினி, வட்டி, நிறைநிலா ஆகிய 14 சிறுகதைகள் அடங்கியுள்ளன.

''சர்வ அங்கங்களும் உடைத்தான ஒரே காரணத்தினால் ஒருவன் பூரண மனிதனாகிவிட முடியாது. அவன் சமுதாயத்தில் உலாவுதவற்கு ஓர் ஆடைதேவை. இந்தவகையில் கதைகளுக்கும் கலையம்சம் என்றஆடை அவசியம். ஆனால் கலைஞனின் அனுபவ ஞானத்துக்கமைய அவனது ஆக்கங்கள் பல்வேறு அணிபணிகளைப்பெறுதல் கூடும். இதுவே கலையின் உயர்வு. ஆயினும் கலைஞன் தான் படைத்தவற்றைச் சொந்த அளவுகோலைக் கொண்டு அளக்க முற்படுவது அநாகரிகமானது. நேர்மையான விமர்சகனுக்குத்தான் அளக்கும் உரிமையுண்டு.'' இப்படியாகக் கலையின் தன்மையையும், உயர்வையும் முகவுரையிற் குறிப்பிடும் நாகராஜன் தன்படைப்புகளை நேர்மையான விமர்சகனே அளவு காட்டவேண்டுகோள் விடுக்கிறார்.

இவரது கலை பற்றிய கருத்தை ஏணியாகக் கொண்டு கதையின் உள்ளே நுழைகையில் எந்த அளவுக்குக் கதைகளுக்கு கலையம்சம் தேவையென்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

''அர்த்த [illegible] விட்ட அகால [illegible] ஒவ்வோர் அணுவையும் தனது கருங்கல் வண்ணக் கொடுங் கரங்களாற்பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கும் இருளை உதாசீனம் செய்து பலன்கருதாத கர்மயோகி போல் ஓடிக்கொண்டிருக்கிறது புகைவண்டி.'' துணையென்ற முதற் கதையின் ஆரம்பமே இது. பாத்திரத்தை வண்டியிலேற்றி தன்மையிற் கதைசொல்லும் ஆசிரியர், எந்த இடத்திலும் விழுக்காடற்ற முறையில் புகைவண்டியின் ஓட்டம்போல் கதையை இழுத்துச்செல்கிறார். வர்ணனைகள், தத்துவங்கள், கட்டுக்கோப்பு அனைத்தும் தொடர்ந்து மறு கதையை வாசிக்கத் தூண்டுவன.

''வீட்டைச் சந்தையாக மாற்றிய ஜனசனக்கூட்டம் இப்போது இல்லை. அக்கூட்டத்துடன்ஒன்றியகலகலப்பு மாண்டொழிய வெறுமை வியாபித்துக் கொண்ட மௌன சோகம் கலந்த நிலைதான் இன்று குலவுகிறது''. எரிந்ததிரி என்றஇரண்டாவது கதை இவ்வித சோகத்தொனியுடன் ஆரம்பமாகிறது. ஆசிரியரைப் பற்றி அறிமுகப்படுத்திய 'ஈழகேசரி' பத்திரிகை 11-11-56 லேயே இக்கதையை சிலாகித்தெழுதியுள்ளது. யாழ்ப்பாண மண்ணின் வாசனையைப் பரப்பும் இக்கதையில் ஐந்தாவது தாரத்தை இழந்த முதிய குருக்கள் ஆறாவது மணஞ்செய்து கொள்ள கோலிற்கொடியேற்றத்தைப் பக்கபலமாக்கிக்கொள்கிறார். ஆபாசத் தொனிப்பின்றி, பாரம்பரிய பண்பாட்டுக்குச் சட்டுப்பட்டு நிற்கும் இக்கதையில் யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றையும், அதனை இயக்குபவரான விதானையார் ஒருவரையும் சந்திக்கலாம். இக்கதைப்பொருள் வர்ணனைக்கூடே ஆசிரியர் குறிப்பிடுவதுபோல ''ஒரு மனிதனுக்குண்டாகும் அனுபவ மூலமான கருத்தோட்டத்தினூடே அவனது முழுமை வாழ்வின் நிலைக்களனையும் தொட்டுக்காட்டலாம்'' என்ற கருத்து வெளிப்பாடாகியுள்ளது.

> [மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்]

வேலி என்ற கதையில் பரிசுத்தமான இளம் இதயங்களின் அன்புக்கு முன் முதியவர்களின் மனக்குறுக்குவேலிகள் இருந்த இடமற்றுவிடுகின்றனவென்பது எல்லை வழக்கோடுஆரம்பமாகி அழகாகச் சொல்லப்படுகிறது.

திரையிலும் ஒரு வேலி குறுக்கிடுகின்றது. அப்பாலும் இப்பாலும் அமைந்த இரு குடும்பங்களுக்குள் ளமைந்த வேறுபாடானவாழ்வைச் சுட்டி பண்பும், நேர்மையுமே நிலைபெறுகின்றனவென்பதை வெளிக்காட்டி விடுகிறார் ஆசிரியர்.

யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் மதிய வேளைக் கொடுமையைச் சகித்துத் தூண்டில்போடும்ஒருசிலரின் பிரதிநிதியாக வல்லிக்குட்டியைக் காண்கிறோம். அதீதப் பிரயத்தனத்தினூடே அவன் வாழ்வுச்சில்லை உருட்டுவது புலப்படுகிறது.

''நந்தாவனம் என்ற அந்த இருண்ட வளவினுள்ளே தெத்துப்பல்லுகள் போன்று ஒழுங்கின்றிக் கட்டப்பட்ட [illegible] குடிசைகளின் இன்னல்களில் அங்கொன்றுமிங்கொன்றுமாகத் தகரவிளக்குகள் சிணுங்கிச் சிணுங்கி குளத்துக்காற்றோடுமல்லாடிஒளித்துகள்களைகொட்டி நிழலுருவங்களையே சமர்ப்பிக்கின்றன.'' ஏழைத் தாயையும், குருட்டுக்குழந்தையையும் காட்டும் கண்களில் இருண்ட வளவுக்குள்ளமைந்த வீடுகளையும், மனிதர்களையும் காண அனுதாபம் பிறிடுவதை தவிர்ப்பதற்கில்லை.

கடனில் நெருக்கடிப்படும் மத்தியதரத்து மனிதனையும் அவனது நிலையை உணர்ந்து உதவும் இன்றைய நடைமுறையில் காணமுடியாத நல்லவன் ஒருவனையும் காண்கிறோம்.

மாஜி மனிதர்களில் எமலோக, நரகலோக காட்சிகள் பயங்காட்டிய போதிலும் இறுதியில் ஏமாற்றுப் பேர்வழிகளைச் சந்திக்குக் கொண்டுவரும் ஆசிரியரின் நகைச்சுவை உணர்வை அறிந்துகொள்ள வாய்ப் பேற்படுகிறது.

வேக்காட்டினால் முகத்திற் சரங்கட்டிய வியர்வையைத் தோளிற் கிடக்கும் துண்டினால் அழுத்தித் துடைத்துவிட்டபோதும் அகமதுவாப்பாவின் முகத்தில் கவிந்த ஆயாச நிலையில் எள்ளத்தனையும் மாற்றம் ஏற்படவில்லை. மதியவேளை தாண்டிவிட்டபோது சந்திக்கும் நூறுவயதைத்தாண்டிய அகமதுவாப்பா பொழுது உதயமானபோது வீட்டை விட்டுப்புறப்பட்டவர், நாள்முழுதும் அவர் ஜீவியத்துக்காகச் சிரமப்பட்டும் நம்பிக்கை பிறழாது உழைத்தே செல்கிறார்.

பெண்ணிதயமே வர்ணஜாலந்தான். அது நிலையானதல்ல. வாழ்க்கையின் உயர்ந்த அந்தஸ்திலுள்ள சரஸ்வதியையும், அவளது வசதிகளையும் காட்டும் ஆசிரியர், அவள் தன் இதயத்தோடு போராடும்பாணியை இயற்கையோடு குறிப்பிடுகிறார். ஏற்றத்தைக் கண்டு ஒதுக்கித்தள்ளி இறக்கத்தை அனுதாபப் படுபவர் போலன்றி பாத்திரத்தின் முழுமை விளங்கப் படைத்த திறன் கவர்ச்சியமைந்துள்ளது. இப்பெண்ணிதயத்தில் கணவனைப் பற்றிக் கனன்றெழும் சந்தேக அலை விவாகரத்தில்கொண்டு போய் விடுமோ என்று அச்சப்படும் வேளையில் கதையம்சமும் திருப்பமும் இயற்கையாக அமைய ஆசிரியர் கணவன் மனைவிக்கிடையே சௌஜன்ய உறவைத்தந்த விந்தை பாராட்டுதலுக்குரியதாகும்.

கிராமச் சங்க தேர்தல் அமளியுடன் தொடங்கும் வேஷம் கந்தரென்ற முதியவரை ஏமாற்றும் சமூகப் புல்லுருவிகளின் உண்மையைத் தோலுரித்துக் காட்டுகிறது. பாவம், ஏமாற்றம் அடைந்த அம்மான் ஏமாற்றியவன் கொடியைப் பார்த்து உமிழ்ந்த உமிழ் நீர் அவரது முகத்திலே விழ வேண்டும்?...

சமுதாயத்தின் போலி நாகரிகப் பிரதிநிதிகளை மின்மினிச் சுடரில் காணக்கூடியதாகவுளது.

வட்டியில் ஆப்கானிஸ்தான் ஒருவனைச் சரியாகப் படம்பிடித்து, அவன் மூலம் மலைநாட்டுமக்களின் வாழ்வுத் தொல்லைகளையும் புலப்படுத்துகிறார்.

இத்தொகுதித் தலைப்பாகவுடைய நிறைநிலா, முன்னுரையிற் குறிப்பிட்டதுபோல புத்தபகவான் ஞானம் பெற்ற இரவையும், அவர் காணவிழைந்த தத்துவவிசாரத்தையும் ஆற்றொட்ட நடையிற் கூறிச்செல்கிறது. புலனுணர்ச்சிகளைத் தீய்த்துவிட்ட துறவி போன்று கபில வஸ்து நகரம் உயிர்மூச்சிழந்து கிடக்கிறது. இந்தத் தொடக்கத்தைச் சற்றுச்சிந்திக்கவேண்டும். புத்தரின்

[VIII-ம் பக்கம் பார்க்க]

## அறிவுப்பாதையில்

(IIIம் பக்கத் தொடர்ச்சி)

முன்னமே காரியம் முடிந்துவிட்டது. சின்னவனின் வாழ்க்கைமுற்றுப்பெற்றது பெற்றவர்கள் கதறினார்கள். பெரியவனுக்கோ நடந்தது ஒன்றும் புரியவில்லை. சின்னவனைப்பார்த்து முறைத்துக் கொண்டே நின்றான். இத்துடன் அவர்கள் கஷ்டங்கள் எல்லாம் முற்றுப்பெற்றனவா என்றால், அதுதானில்லை. மேலும் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டும் என்பது அவர்கள் தலைஎழுத்துப்போலும், பிணப் பரிசோதனை, மரணவிசாரணை போன்ற சடங்குகள் முறையே நடந்தன. பெரியவனை வெளியேவிட்டுவைத்தால், அவனால்சமூகத்துக்கே ஆபத்து நேரலாமெனக் கூறி அவனை இளம் குற்றவாளிகளுக்கான சிறைச்சாலையில் சேர்க்கும்படி ஆணையிட்டது நீதிமன்றம். அதனால் பெற்றவர்கள் மற்றவனையும் பறிகொடுத்துவிட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை அவன் இருந்தும் இல்லாதவனாகிவிட்டான். தாங்கொணாக்கவலையின் காரணமாக சோமுவும் கமலாவும் நாளும் பொழுதும் இளைத்து வந்தார்கள். அவர்கள்நேரத்துக்கு உண்டார்களா, உறங்கினார்களா, யார் கண்டார்கள். கமலாவும் சோமுவும் பெற்றும் பெறாதவர்களாக, செயற்கை மலடுகளாக வாழ்ந்து வந்தார்கள்.

இவர்கள் வாழ்க்கையில் இத்தனை இன்னல்களையெல்லாம் அனுபவிப்பதற்கு யாது காரணம்? விதியா, அன்றி விஞ்ஞானமா? விதியின் காரணமாக விஞ்ஞானம் குறுக்கிட்டதா அல்லது விஞ்ஞானத் தாக்கத்தில் விதி குறுக்கிடவில்லையா? இதற்கு உலகம்தான் பதில் சொல்லவேண்டும்.

## நம்பலாம் நடந்தது!

அமெரிக்காவிலே மிகப் பிரசித்திபெற்ற வைரமான ஹோப் வைரம்செய்த புரட்சியை அறிய விரும்புகிறீர்களா? அதை வைத்திருந்த அரசர்களும், லட்சாதிபதிகளும் கொலையுண்ட கதையையே சரித்திரம் சொல்கிறது.

இந்த வைரத்தை முன்னைய காலத்தில் வைத்திருந்தவர்களும், யாரால் கொல்லப்பட்டார்கள் என்ற விபரமும் இதோ:-

- பதினாறும் லூயிஸ் மாரியா அந்தோனீட்—கழுவிலேற்றப்பட்டனர்.
- லார்டு பிரான் சிஸ்—தன் மனைவியால் ஒழித்துக்கட்டப்பட்டான்.
- பிரின்ஸ் இவான் கானிடோ வஸ்கி—புரட்சிக்காரர்களால் கொல்லப்பட்டான்.
- பரோரன்ஸ் வாடு—கொல்லப்பட்டான்.
- சுல்தான் அப்துல் ஹமீது—தன் அரசபதவியிலிருந்து இளம் துருக்கியர்களால் நீக்கப்பட்டு, கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டான்.

கி.பி. 1900க்கு முன்பே 'ஹோப் வைரம்' எட்வர்டுபேக் மெக்லியன் என்ற செய்திப்பத்திரிகையின் பணம்படைத்த உடமையாளரின் மகன் கைக்கு மாறியது.

தன் மனைவியை குளிர்ச்சிப்படுத்திக் கொள்வதற்காக அந்த வைரத்தைத் தன் திமிர் கொண்ட மனைவியிடம் கொடுத்துவைத்தான், அவன்!

கணவன் சாவுவரை அவள் கையிலே இருந்தது வைரம். தனக்கும் பெருத்த செல்வம் உண்டு என்ற திமிரில் வீட்டுக் கவனமில்லாமல் ஊர் சுற்றித் திரிந்தாள், அந்தச் சீமாட்டி!

1946-ல், அதிகமான தூக்க மருந்து உபயோகித்ததால், தன் 25 வயதுள்ள மகனைச் சாவுக்குக் காவு கொடுத்தாள். சிறிது காலத்துக்குப் பின்னால், அந்தத் திமிர் கொண்டவளும், இரத்தக் கொதிப்பேற்பட்டு 24 மணி நேரத்தில் மாண்டு மண்ணோடு மண்ணானாள்!

இதற்குப் பிறகு 'ஹோப் வைரம்' அமைதியை நாடியது; பாங்கில் சரண்புகுந்தது!

★

''ஐயா, மனிதனால்ஏதும் கண்டுபிடிக்க முடியாது! ஆனால் இருக்கின்றதை வைத்துக்கொண்டு இல்லாததைக் கண்டுபிடிக்கின்றார்கள். அவ்வளவு ஏன்? இன்னும் 50 ஆண்டுகளில் மனிதன் பறவை போல் பறக்கப்போகின்றான்''—என்றார் ஒருவர்.

''ஆ! மனிதன் பறக்கப்போகின்றானா? பறப்பது எனும் செயல், கடவுளால் தேவதைகளுக்கும், பறவைகளுக்கும் ஒதுக்கப்பட்டதாயிற்றே! பறக்க முயற்சி செய்யும் மனிதன் கடவுளால் சபிக்கப்படுவான்!''— இப்படிச் சினம் பொங்கப் பதிலடி கொடுத்தார், பாதிரியாரான மில்டன் ரைட் என்பவர்.

அதாவது, ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்களின் தந்தைதான் இப்படி ஆத்திரம் பொங்க, ஒரு சமயத்தில் கூறியிருந்தார்.

— ராஜன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

## எழுதுவது

## சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 21-ந் திகதி ஞாயிறு முதல் (3-4-66) 27-ந் திகதி சனிக்கிழமை (9-4-66) வரை]

### மேட இராசி

தொழில்முயற்சியில் இலாபம் கிட்டல், உயர்ந்த அந்தஸ்து, சந்தோஷம், செல்வச் செழிப்பு, முயற்சிகளில் வெற்றி, எதிரிகள் வீழ்ச்சி, சுபகருமக் கொண்டாட்டங்கள், பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி, தேகாரோக்கியம், குடும்பத்தில் சச்சரவு, இனபந்துக்கள் பகைமை, சொத்துக்களால் நன்மை, உத்தியோகத்தருக்கு கஷ்டபலன் காணல், அதிகாரிகள் எதிர்ப்பு, வர்த்தகருக்கு தொழில் அபிவிருத்தி, பொருள்வரவு, மாணவருக்கு கல்விச் சிறப்பு, பெண்களுக்கு நல்ல நண்பர்கள்சேர்க்கை, மதிப்புயர்ச்சி பொருள்வரவு.

### இடப இராசி

நல்ல நண்பர் சேர்க்கை, கருதியகருமங்கள் கைகூடல், தொழில் முறைகளில் வெற்றி, ஆதாயப்பெருக்கு, சந்தோஷம், தேகாரோக்கியம், சுபகருமங்கள் நடத்தல், மாணவருக்கு கல்வி மேன்மை, புதிய துறைகளில் கல்வியில் ஈடுபாடு, உத்தியோகத்தருக்கு தொழில் முன்னேற்றம், அந்தஸ்துயர்ச்சி, மதிப்பு, மேலதிகாரிகள் ஆதரவு, வர்த்தகருக்கு பண ஆதாய வரவையும் தொழில் அபிவிருத்தியையும் தருவதுடன் பல துறைகளிலும் ஈடுபடவும் தூண்டல், பெண்களுக்கு மத்திம பலன்கள், கமத்தொழிலாளருக்கு நற்பலன் குறைதல்.

### மிதுன இராசி

சலிப்பான பலன்கள் இவ்வாரம் காணப்படலாயினும் நல்ல நண்பர் சேர்க்கை, பயன் தரும் முயற்சிகளில் ஈடுபாடு, எதிரிகள் பீடை, சுபிட்சம் காணல், போட்டியாளர் முஸ்தீபு, கஷ்டமானதும் நீண்ட தூரமுள்ளதுமான பிரயாணங்கள் செய்தல், அபிப்பிராய பேதம்-சச்சரவு, தேகசுகம் மத்திமம், குடும்பத்தில் சச்சரவு, பணநிலை மத்திமம், கமத்தொழில்நட்டம், வர்த்தகம்துடிதுடிப்பாக இருப்பினும்பலன் மத்திமம், உத்தியோகத்தருக்கு அவதானம் நலமளித்தல், பொறுமை மிக முக்கியம், மாணவருக்கு கல்விச்சிறப்பு, பெண்களுக்கு மத்திம பலன் காணல்.

### கடக இராசி

தேகாரோக்கியக் குறைவு, களத்திரரோகபீடை, நண்பர்-உறவினருடன் சச்சரவும் அபிப்பிராய பேதமும் காணல், அதிக செலவு காணல், முதியோர் பகைமை மனச்சஞ்சலம், பொருளாதாரமுடை, சொத்துக்களாலும்-கமத்தொழிலாலும்-வர்த்தகத்தாலும் அதிக பயன்கிடையாமை, இருக்கும் முயற்சிகளால் தடைப்படல், உத்தியோகத்தருக்கு சூழ்நிலை சாதகமின்மை, அதிகாரிகள் பகை, ஊழியர் தொல்லை, மாணவருக்குமேற் கல்விச் சிறப்பு, வித்தை மேன்மை, பெண்களுக்கு மத்திமத்தில் அதிக பலன், சுப பிரயாணம்.

### சிங்க இராசி

ஆரோக்கியக்குறைவு, மனமடிவு, முயற்சிகளில் ஊக்கமின்மை, கஷ்டமான பிரயாணங்கள், சச்சரவுகள் காணல், அபிப்பிராயபேதங்கள் காணல், நீசத்தொடர்புகள், கமத்தொழில் மத்திம பலிதம், சொத்துக்களால்பலன்குறைதல், பொருளாதார முடை, வயிற்றில் ரோகபீடை, வர்த்தகக்கைத்தொழில் பாடுபடுவதற்கேற்றபலன்கிடைத்தல், உத்தியோகத்தருக்கு கஷ்ட பலன்கள் காணல், கந்தோரில் சச்சரவு, மாணவருக்கு வித்தைமேன்மை, மதிப்புயர்ச்சி, பெண்களுக்கு ஆரோக்கியத்தைப் பேணி நடத்தல் அவசியம், பணமுடை தற்காலிகமாக நீங்கல்.

### கன்னி இராசி

கலப்பான பலன்கள் நடப்பினும் ஓரளவு கஷ்டத்தை சமாளிக்கும் ஆற்றல் ஏற்பட இடமுண்டு. எதிரிகள் வீழ்ச்சி, முயற்சிகளில் மத்திமபலிதம், சுபகருமகொண்டாட்டம் நடத்தல், தேகாரோக்கிய நலம், பணவரவு காணல், வயிற்றில் இடையிடையே ரோகம் காணல், (கடன்படுதலைத்தவிர்க்குக), வர்த்தகம் - கமத்தொழில்- சொத்துவருமானம் குறைவடைதல், உத்தியோகத்தில் பலன் மத்திமம், ஊழியர் உதவி, மாணவருக்கு ஊக்கமிகுதி, கல்விச்சிறப்பு, பெண்களுக்குக் குழந்தைப் பேறு, சமூகத்தில் மதிப்பு, காதல்விவகாரவெற்றி, உத்தியோகச்சிறப்பு.

### துலா இராசி

இல்லச்சிறப்பு, தொழில் மேன்மை, சமூகத்தில் மதிப்பு, பொருள்வரவு, தேகாரோக்கியம், குடும்ப சுகம், சந்தோஷ வாழ்க்கை, போசன-சயன சுகம், குடும்பத்தில் சுபகரும கொண்டாட்டம், முயற்சிகள்-தொழில்கள் மூலம் பொருள் வரவு, பணநிலைமையில் அபிவிருத்தி, சொத்துக்களால் நன்மை, கமத்தொழில் பலிதம், கால்நடை இலாபம், வர்த்தகத்தில் அபிவிருத்தி, உத்தியோகத்தருக்கு பரீட்சைகளில் வெற்றி, எதிரிகள் வீழ்ச்சி, மதிப்பு, மாணவருக்குகல்விமேன்மை, பெண்களுக்கு களத்திரச்சிறப்பு, குடும்ப மதிப்பு, சமூகத்தில் ஈடுபாட்டைக் குறைப்பது நலம்.

### விருச்சிக இராசி

நற்பலன்களும் தீப்பலன்களும் இன்றி சமமாக நடக்கும் காலமாக இவ்வாரம் இருக்கும். சுபகரும கொண்டாட்டங்கள்- நல்ல நண்பர்கள் சேர்க்கை- சமூகத்தில்செல்வாக்குஉயர்வடைதல், கல்வியாளருக்கு புதிய துறைகளில் ஊக்கம், வித்தைமேன்மை, இடையிடையே அபிப்பிராயபேதம், சச்சரவு, கஷ்டமான பிரயாணங்கள், சிறுவிபத்து, இனபந்துக்களுள் மரணம் நிகழ்தல், பொருள்வளம்- சமத்தொழில்- தேகாரோக்கியம், வர்த்தகம்-உத்தியோகம் மத்திம பலன் தருதல், இடையிடை ஏமாற்றம் காணப்படலி.

### தனு இராசி

செல்வாக்குள்ள நண்பர் சேர்க்கை, எதிரிகளுக்கு வீழ்ச்சி, சுபகருமகொண்டாட்டங்கள், உயர் அந்தஸ்து, மதிப்புயர்ச்சி, முயற்சிகளில் வெற்றி, செலவு அதிகரித்தல், குடும்பத்தில் சச்சரவு, தேகாரோக்கிய நலிவு, குடும்பத்தில் அபிப்பிராயபேதம் காரணமாக இனபந்துக்களுள் பிரிவு, பொருள் வளம் சுருங்கல், சொத்துக்கள்-கமத்தொழில் பலிதக்குறைவு, உத்தியோகத்தருக்கு மத்திமபலன் நடத்தல், வர்த்தகருக்கு தொழிலில் மந்த நிலைமை ஏற்படல், மாணவருக்கு கல்விச்சிறப்பு - பரீட்சை வெற்றி, பெண்களுக்கு நண்பர்சேர்க்கை - களத்திர வழி மதிப்பு, பொருள்வரவு.

### மகர இராசி

கலப்பான பலன்கள் இவ்வாரம் நடக்கும். தேகாரோக்கியம் பொதுவாக நன்று. எதிரிகள் செயல்கள் கட்டுக்குள் நிற்றல், அந்தஸ்தில் உயர்வு, இலாபச் சேர்க்கை, முயற்சிகளால் வெற்றி, சுபகரும கொண்டாட்டம், நண்பரென்றிருக்கும் சிலரால் ஏமாற்றப்படல், சச்சரவுகளும்அபிப்பிராயபேதங்களும் காணல், சொத்துச் சேர்க்கையால் குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலைமை நிலவுதல், பொருள் வரவு, நிதி நிலை சமம், உத்தியோகத்தருக்குச் சிறப்பு, அதிகாரிகள் உதவி, வர்த்தகத்தில் இலாப விருத்தி, கல்வியாளருக்கு வித்தை மேன்மை, பரீட்சைகளில் சித்தி, கமத்தொழிலாளருக்கு நற்பலிதம், பெண்களுக்கு சமூகத்தில் செல்வாக்குயர்ச்சி, குடும்பசுகம், தாயாகும் பேறு, பொருள் சேர்க்கை.

### கும்ப இராசி

கஷ்டமான பிரயாணம், முயற்சிகளில் பின்னடைவு, தேகாரோக்கிய நலிவு, இனபந்துக்கள்-நண்பர்கள் பகைத்தல், சச்சரவுகள் காணல், அவமானச் சொற்கேட்டல், சஞ்சலம், எதிரிகளால் தொல்லைகள், வயிறு-நெஞ்சு-ஈரல் முதலியவற்றில் ரோகம் காணல், பொருள்வளத்தில் கஷ்டம், கடன்படு நிலைமை, சொத்துக்களால் பயன் குறைதல், கமத்தொழில் வீழ்ச்சி, உத்தியோகத்தருக்குப் பயன் குறைதல், அதிகாரிகள் பகைமை, மாணவருக்கு வித்தைச் சிறப்பு, முன்னேற்றம், வர்த்தகருக்குத் தொழில் அபிவிருத்தி, பெண்களுக்கு பலதுறைக் கஷ்டங்களும் எதிர்ப்படல், பொருள் முடை, துக்க சம்பவங்கள் நடத்தல்.

### மீன இராசி

கஷ்டமான பலன்கள் அதிகரித்தல், மனத்துக்கம், சச்சரவுகள் காணல், அபிப்பிராயபேதம், தேகாரோக்கியக்கேடு, முயற்சிகள் தடைபடல், கடன்படு நிலைமை, எதிரிகளால் இடர் விளைதல், நீசர் சேர்க்கை நீங்காதல், குடும்பத்தில் அமைதியின்மை, நிதிநிலையில் அபிவிருத்தியின்மை, சொத்துக்களால் நன்மை குறைதல், கமத்தொழில் மத்திமபலிதம், உத்தியோகத்தருக்கு கஷ்டம், அதிகாரிகள் பகை, ஊழியரால் ஆபத்து, பணியாளர் தொல்லை, வர்த்தகத்தில் தொழில் அதிகரிப்பினும் பலன் குறைதல், மாணவருக்கு மத்திமபலிதம், பெண்களுக்கு எல்லாவித சுபபலன்களும் கிட்டல், சமூகத்தில் மதிப்புணர்ச்சி, சுபபிரயாணம், நண்பர்-உறவினரால் உதவி கிட்டல். தெய்வவழிபாடு.

## நமது நூல் நிலையம்

(VII-ம் பக்கத் தொடர்ச்சி)

துறவுநிலைக்குச் சூசகமாக அமையும் இவ்வாசகமே கதையின் உட்பொதிந்து கிடக்கிறது.


"இன்பம் இதுதான்என்று அறுதியிட்டுக்கூறும் அந்த நெடிய இரவில் இயற்கை எழிலுக்குப் பின்னணியாக கருதிலயந்தப்பாது தாளத்துக்கமைய நர்த்தனமிடும் நர்த்தகியாய் பூரணமுகப் பொலிவுடன் வானில் அலையும் பஞ்சுத்திரைகளை நீக்கிப் பவனிவந்து கொண்டிருக்கிறது நிறைநிலா" ஆகிய வர்ணனைகள் இலக்கியச் செழிப்புடன் விளங்குகின்றன. எவ்விடத்தும் இலக்கியத்தரம் வீழ்வுறக் கூடியபதங்களே இதில்விரவவில்லை. பலரறிந்த சரிதமானாலும் கைவண்ணத்தின் செழிப்பினால் புதுமைப் பொலிவு பெறுகிறது.

இலக்கிய கர்த்தா என்பவன் புகைப்படக் கலைஞனல்ல. வெறுங்காட்சியை அமைக்காது அக்காட்சியினூடே உண்மையைவிளக்குவதும் கர்த்தாவின் கடமையாகும். வாழ்வோடுநின்று அவ்வாழ்க்கையைப் பசளையாக்கி, அதிலே பயன்பெறக் கூடிய பயிரைவிளைத்து அறுவடை செய்யக்கூடிய ஆற்றலுக்கு அனுபவம் துணைபுரிய வேண்டுமென்பதை இத் தொகுதியில் இடம்பெறும் கதைகளினூடே படம்பிடித்துக் காட்டுகிறார்.

ஆசிரியர் ஒரு கதையைக்கூட சுருக்கிக்கூறும் உத்திக்குள் கொண்டு செல்லவில்லை. அவரதுவர்ணனைகளும் கருத்துண்மைகளும் நெடுத்தே நிற்கின்றனவென்ற குறையையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஆயினும் எவ்வளவு நீண்டபாதையிற் சென்றபோதிலும் கதையின் ஓட்டம் பிறழவில்லை. பாத்திரங்களின் பக்கத்திலேநிற்கும் ஆசிரியர் வாசகர்களை திசைதிருப்பிகுரோத, கோப உணர்வுகளைத்தனதாக்கிஎங்கும் வசை புராணம் பாடவில்லை; தனது சொந்தக் கருத்தைத்திணிக்க முற்படவுமில்லையென்பதை இலகுவில் புரிந்து கொள்ளலாம். விழுக்காடு அடையாது ஒரே சந்தஇசையில் செல்லும்கவிதையைச் சுவைக்கும் மனப்பான்மையையே வாசகர்கள் பெறக்கூடியதான இக்கதைகள் பலவகையிலும் தமக்கென்ற தனித்துவமுத்திரை பொறித்துள்ளதையும் கூறவே வேண்டும்.

இலங்கையில் வெளியாகியுள்ள சிறுகதை நூல்களுள் சிறந்தனவற்றுள் தானும் ஒன்றாக இடம்பெறும் நிறைநிலா அட்டைப்பட அழகிலும் புத்தக அமைப்பிலும் சிறந்து விளங்குகின்றது.

'அமுது''



அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளிநாட்டு மாணவர் மன்றச் சிறப்பு விழாவின்போது உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவருக்கு இடது பக்கத்தில் துணைவேந்தர் ஆதி நாராயணனும் வலப் பக்கத்தில் பேராசிரியர் இராமநாதன் செட்டியாரும், 'ஈழநாடு' பிரதம ஆசிரியர் திரு. கே. பி. ஹரனும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org